***கவனிக்க.-*** *09.02.2017 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2007 - 2017 පෙබරවාරි මස 17 වැනි සිකුරාදා - 2017.02.17**

*2007 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 270 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 296 |


***கவனிக்க.-*** *குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்) சட்டமூலம் 2017, பெப்புருவரி மாதம் 09 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி.வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2017, மாச்சு மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, பெப்புருவரி மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிகளில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.*

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :.*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணினி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கை வான்படை

*அரசாணையமர்வு அலுவலர் வெற்றிடங்கள்*

*இலங்கை நிரந்தர/ தொண்டர் வான்படையில் ஆண்/ பெண் நேரடி அரசாணையமர்வு அலுவலர்களுக்கான வெற்றிடங்கள் கீழ்க்காணும் பிரிவுகளில் உள்ளன :*

*(அ) தொழில்நுட்ப பொறியியல் பிரிவு*
*(ஆ) இலத்திரனியல் பொறியியல் பிரிவு*
*(இ) பரிபாலனப் பிரிவு*
*(ஈ) வைத்தியப் பிரிவு*
*(உ) பரிபாலன கால்நடை வைத்தியப் பிரிவு*
*(ஊ) பரிபாலன நீதிப் பிரிவு*
*(எ) பரிபாலன இசைப் பிரிவு*

*2. கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-*

**(அ) தொழில்நுட்ப பொறியியல் பிரிவு.-**
**தொழில்நுட்ப பொறியியல் அதிகாரி (வானூர்தி பொறியியலில்) - ஆண் (நிரந்தர) :**

* இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்ற 4 வருட முழுநேர வானூர்தி பொறியியலில் BSc பட்டச் சான்றிதழ் இருத்தல் வேண்டும்.

(தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் பிளைட் லெப்டினன்ட் நிலையில் நிரந்தர அலுவலராக அவர்களின் தொழில் தகைமை, சேவை அனுபவத்திற்கு அமைவாக தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.)

**தொழில்நுட்பப் பொறியியல் அதிகாரி (பொது) - ஆண் (நிரந்தர)**

* இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்ற 4 வருட முழுநேர Mechanical/Automobile பட்டச் சான்றிதழ் இருத்தல் வேண்டும். அல்லது மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் பெற்ற 3 வருட முழுநேர (NDT) தேசிய தொழில்நுட்பவியலில் டிப்ளோமா இருத்தல் வேண்டும். இலங்கை உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா (HNDE) பெற்ற 3 1/ 2 வருட முழுநேர தேசிய தொழில்நுட்பவியலில் டிப்ளோமா இருத்தல் வேண்டும். மேலும் Mechanical/Automobile பொறியியல் துறையில் 1 வருட தகைமை மற்றும் சேவை அனுபவம் இருத்தல் வேண்டும்.

(தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் பிளைட் லெப்டினன்ட் அல்லது ப்ளையின் ஒபீசர் நிலையில் நிரந்தர அலுவலராக அவர்களின் தொழில் தகைமை, சேவை அனுபவத்திற்கு அமைவாக தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.)

**(ஆ) இலத்திரனியல் பொறியியல் பிரிவு -**
**வலையமைப்பு பரிபாலகர் அதிகாரி - ஆண் (நிரந்தர)**

* 4 வருட கணினி தொடர்பான பிரிவில் BSc பொறியியல் பட்டம் அல்லது 3 வருட கணினி தொடர்பான பிரிவில் BSc பட்டம் அல்லது கணினி விஞ்ஞானத்தில் பிரதான பாடமாக BSc பட்டம் அல்லது HND அல்லது NIBM டிப்ளோமா அல்லது வலையமைப்பு பரிபாலகர் சமனான ஒலி மற்றும் அறிவு மற்றும் அனுபவம் இருத்தல் வேண்டும்.

**மென்பொருள் விருத்தியாளர் - ஆண் (நிரந்தர)**

* 4 வருட BSc பொறியியல் பட்டம் கணினி தொடர்பான பிரிவில் அல்லது 3 வருட BSc பட்டம் கணினி தொடர்பான பிரிவில் அல்லது BSc பட்டத்துடன் கணினி விஞ்ஞானத்தில் பிரதான பாடம் அல்லது HND அல்லது NIBM டிப்ளோமா அல்லது மென்பொருள் விருத்தியாளருக்கு சமனான ஒலி மற்றும் அறிவு மற்றும் ASP.NET மற்றும் C#.NET இனைப் பயன்படுத்தி மென்பொருள் விருத்தியாக்கும் அனுபவம் இருத்தல் வேண்டும்.

* அனைத்து விண்ணப்பதாரர்களும் எழுத்துப் பரீட்சை மற்றும் செயன்முறை பரீட்சைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

(தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் பிளைட் லெப்டினன்ட் அல்லது பிளையின் ஒபீசர் நிலையில் நிரந்தர அலுவலராக அவர்களின் தொழில் தகைமை, சேவை அனுபவத்திற்கு அமைவாக தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.)

**(இ) பரிபாலனப் பிரிவு -**
**பரிபாலன அதிகாரி ஆண்/ பெண் (நிரந்தர) :**

* அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்ற வணிக/ முகாமைத்துவ/ கலை பட்டச் சான்றிதழ் இருத்தல் வேண்டும். அல்லது இதற்குச் சமமாக இருப்பதுடன் முகாமைத்துவ/ கணக்கியல் தொடர்பில் அந்தத் துறையில் 1 வருட அனுபவம் இருத்தல் வேண்டும் ; அல்லது

* பட்டய கணக்காளர் தொடர்பில் முழுமையான தகைமை இருத்தல் வேண்டும். மேலும் கணக்காய்வு தொடர்பில் 1 வருட அனுபவம் இருத்தல் வேண்டும் ; அல்லது

* மனிதவள முகாமைத்துவத்தில் பெற்ற 1 வருட முழுநேர தேசிய டிப்ளோமா இருத்தல் வேண்டும். முகாமைத்துவ/ கணக்கியல் தொடர்பில் 1 வருடம் அந்தத் துறையில் அனுபவம் இருத்தல் வேண்டும். குறைந்தபட்சம் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் ஒரே முறையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். அவற்றுள் ஆங்கிலத்திலும் கணிதம் அல்லது விஞ்ஞானத்திலும் திறமைச் சித்தியும் சிங்களம்/ தமிழ் மொழியில் சாதாரண சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

* இடைநிலை பட்டய கணக்காளர் பரீட்சையுடன் கணக்கியல் தொடர்பில் முகாமைத்துவம்/ கணக்கியல் தொடர்பில் 1 வருடம் அந்தத் துறையில் அனுபவம் இருத்தல் வேண்டும். அத்துடன் குறைந்தபட்சம் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் ஒரே முறையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். அவற்றுடன் ஆங்கிலத்திலும் கணிதம் அல்லது விஞ்ஞானத்திலும் திறமைச் சித்தியும் சிங்களம்/ தமிழ் மொழியில் சாதாரண சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

(தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் பிளையின் ஒபீசர் மற்றும் பைலட் ஒபீசர் நிலையில் நிரந்தர அலுவலராக அவர்களின் தொழில் தகைமை, சேவை அனுபவத்திற்கு அமைவாக தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.)

**(ஈ) வைத்தியப் பிரிவு.-**
**வைத்திய அதிகாரி - ஆண் (நிரந்தர/ தொண்டர்)**

* **ப்ளயிட் லெப்டினன்ட்** - ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெற்ற MBBS பட்டம் அல்லது அதற்குச் சமமான தகைமைகளுடன் இலங்கை வைத்திய சபையில் பதிவுசெய்திருத்தல் வேண்டும்.

**(உ) பரிபாலன கால்நடை வைத்தியப் பிரிவு.-**
**கால்நடை வைத்தியர் - ஆண் (நிரந்தர/ தொண்டர்)**

* **ப்ளயிட் லெப்டினன்ட்** - பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மிருக வைத்தியராக BVSc பட்டம் பெற்றிருத்தல் அல்லது அதற்குச் சமமான பட்டம் இலங்கைப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டம் இருத்தல் வேண்டும்.

**(ஊ) பரிபாலன நீதிப் பிரிவு.-**
**நீதி அதிகாரி - பெண் (நிரந்தர/ தொண்டர்)**

* இலங்கை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக இருத்தல் வேண்டும். வர்த்தக ஆவணங்களைத் தயாரித்தல், ஆவணங்கள் கையாளுதல், நீதிமன்றத்தில் குற்ற விசாரணை, ஒழுக்கத்தைச் சீராக்கும் ஆற்றல் இருத்தல் வேண்டும்.

(தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் பிளைட் லெப்டினன்ட் நிலையில் நிரந்தர அலுவலராக அவர்களின் தொழில் தகைமை, சேவை அனுபவத்திற்கு அமைவாக தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.)

**(எ) பரிபாலன இசைப் பிரிவு.-**
**இசைக் கலைஞர் - மேலைத்தேய இசை (Military/Rock Band)ஆண் (நிரந்தர)**

* குறைந்தபட்சம் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் 4 திறமைச் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் சிங்களம்/ தமிழில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

* றோயல் கல்லூரியில் அல்லது திரின்ரி கல்லூரியில் தரம் 5 வரை அல்லது அதற்கு மேலும் லண்டன் அல்லது அதற்கு சமனான தகைமை இருத்தல் வேண்டும்.

* இசைக்குழுவில் பயிற்றுவித்தல் மற்றும் இசைக் குழுவினரோடு இணைந்து செயற்படும் ஆற்றல் மேலும் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சங்கீத பாடத்தில் திறமைச் சித்தி இருப்பின் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

* மேலைத்தேய மற்றும் கீழைத்தேய சங்கீத உபகரணங்களைக் கையாளும் ஆற்றல் இருப்பின் விசேட தகைமையாகக் கருதப்படும்.

**இசைக் கலைஞர் கீழைத்தேய இசை (Oriental Orchestra) ஆண் (நிரந்தர)**

* குறைந்தபட்சம் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் 4 திறமைச் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் சிங்களம்/ தமிழில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

* இலங்கை தேசிய நடன மற்றும் சங்கீத இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அல்லது இந்தியாவில் பாத்மகாண்ட சங்கீத பீடத்தில் இரண்டாம் தரத்தில் அல்லது விஷாரதா பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

* மேலைத்தேய மற்றும் கீழைத்தேய சங்கீத உபகரணங்களைப் பயிற்றுவிக்கும் ஆற்றல் இருப்பின் விசேட தகைமையாகக் கருதப்படும். க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சங்கீத பாடத்தில் திறமைச் சித்தி இருப்பின் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

* மேலைத்தேய மற்றும் கீழைத்தேய சங்கீத உபகரணங்களை இசைக்கும் ஆற்றல் மேலும் சுருதி லயம் இருப்பின் விசேட தகைமையாகக் கருதப்படும்.

**இசைக் கலைஞர் - நடனக்குழு (Cultural Drumming) - ஆண் (நிரந்தர/ தொண்டர்)**

* குறைந்தபட்சம் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் 4 திறமைச் சித்தி உட்பட (மேலதிக, கட்டாயமற்ற பாடங்கள் அல்லாத) 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் சிங்களம்/ தமிழில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

* இலங்கை தேசிய நடன மற்றும் சங்கீத இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அல்லது கலைப்பிரிவில் பட்டம் இருத்தல் வேண்டும்.

* மேலைத்தேய நடனத்தைப் பயிற்றுவிக்கும் ஆற்றல் இருப்பின் விசேட தகைமையாகக் கருதப்படும்.

* க. பொ. த. (சா. த.) பரீட்சையில் நடன பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் தகைமையாகக் கருதப்படும்.

(தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் பைலட் ஒபீசர் நிலையில் அலுவலராக அவர்களின் தொழில் தகைமை, சேவை அனுபவத்திற்கு அமைவாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.)

3. **வேறு தகைமைகள் :**

(அ) தேசிய இனம்.- ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;
(ஆ) குடியியல் நிலை.- விவாகமானவர்/ விவாகமாகாதவர்;
(இ) பால்.- ஆண்/ பெண் (தேவையைப் பொறுத்து)
(ஈ) வயது.- 2017, மே 20 ஆந் திகதிக்கு :

(1) தொழில்நுட்ப பொறியியல் பிரிவு, மின்னணு பொறியியல் பிரிவு 18-30 வயதுக்குள் இருத்தல் வேண்டும் ;

(2) பரிபாலன வைத்தியப் பிரிவு, பரிபாலன கால்நடை, பரிபாலன நீதி, பரிபாலன இசைப் பிரிவு ஆகியவற்றுக்கு 18-35 வயதுக்குள் இருத்தல் வேண்டும்.

(உ) உயரம்.- ஆண்கள் 5 அடி 6 அங்குலமும் அதற்கு மேலும்
பெண்கள் 5 அடி 4 அங்குலமும் அதற்கு மேலும் (வைத்தியப் பிரிவுக்கு மாத்திரம் 5 அடி 5 அங்குலமும் அதற்கு மேலும் ;

(ஊ) நிறை.- 17 < உடற்பருமன் சுட்டி < 26 (ஆண்)
17 < உடற்பருமன் சுட்டி < 25 (பெண்)

$$\text{உடற்பருமன் சுட்டி (BMI)} = \frac{\text{நிறை (கி. கி.)}}{\text{உயரம்}^2\ \text{(மீ)}}\ ;$$

(எ) மார்பு.- ஆண் 32'' (குறைந்தது) ;

(ஏ) பார்வை வர்ணப் பதிவு மட்டம் .- CP2

(ஐ) தொலைப்பார்வை.- இரண்டு கண்களிலும் 6/ 6 (மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப்படாமல்) (வைத்திய துறைக்கு மாத்திரம் இரண்டு கண்களிலும் 6/ 18 மூக்குக் கண்ணாடி பயன்படுத்தியும் 6/ 6 இருத்தல் வேண்டும்.)

4. தேவையான உயரம், நிறை முதலியவை இல்லாதிருந்தாலும் வான்படைக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படை தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்திற் கொள்ளப்படும்.

5. வான்படை ஆளுனரால் நியமிக்கப்படும் வைத்திய பரீட்சையில் தேர்ச்சி பெறக்கூடிய தேகாரோக்கியம் உடையவராயிருத்தல் வேண்டும்.

6. விளையாட்டுத்துறையில் ஈட்டியுள்ள அதியுயர் சாதனைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

7. **அரச கரும மொழித் தேவைப்பாடுகள்**.- தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வுநாடிகள் இலங்கைக் குடியரசின் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்காகவும் ஏற்கனவே ஆக்கப்பெற்ற அல்லது இதன் பின்னர் ஆக்கப் பெறும் எவ்விதிகளுக்கும் இணங்கி ஒழுகுமாறு தேவைப்படுத்தப்படுவர்.

8. தகைமைகளையும் அனுபவத்தையும் பொறுத்து தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு இலங்கை வான்படையில் நிரந்தர/ தொண்டர் Pilot Officer/Flying Officer/ Flight Lieutenant/Squadron Leader தரத்தில் ஆணைபெற்ற பதவி வழங்கப்படும்.

9. தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் வான்படை தளபதியால் தீர்மானிக்கப்படும் காலங்களில் பயிற்சி பெறுவதற்கு தேவைப்படுத்தப்படுவார்கள். பயிற்சிக் காலங்களில் துர்நடத்தை காரணமாக அல்லது அவரது கட்டுப்பாட்டுக்குள் உள்ள காரணங்களுக்காக அவர் தகுதியற்றவர் என எந்த நேரத்திலும் அதிகாரிகளினால் முறைப்பாடு செய்யப்பட்டால் அவருக்களிக்கப்பெற்ற ஆணை மீளப்பெறுவதற்கு அவர் ஆளாதல் வேண்டும். அத்துடன் அல்லது இலங்கை வான்படை ஒழுக்காற்று ஒழுங்குவிதிகளுக்கிணங்க வேறு ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் அமைந்தவராதல் வேண்டும்.

10. வான்படை அலுவலர்கள் வான்படைச் சட்டத்தினாலும் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் கட்டளைகளினாலும் ஆளப்படுகிறார்கள்.

11. இலங்கை வான்படை ஆணைபெற்ற அலுவலர் ஒருவரின் சேவை நிபந்தனைகள் காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1951 ஆம் ஆண்டு ஏப்பிறல் 27 ஆந் திகதிய 10,240 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை வான்படை (நிரந்தர அத்துடன் நிரந்தர உப சேவை) ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படி அலுவலர் ஒருவருக்கு பைலற் ஒபிசர் அல்லது ஏற்புடைத்தாயின் அதைவிட உயர்ந்த தரத்தில் நிரந்தர ஆணைபெற்ற பதவி வழங்கப்படும். வான்படைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் நியதிகளின்படி "அலுவலர் ஒவ்வொருவரும் சனாதிபதி விரும்பும் வரைக்குமே தமது நியமனத்தை வைத்திருத்தல் வேண்டும்." ஆயின் ஒருதலைப்பட்சமாக தமது ஆணைபெற்ற பதவியிலிருந்து விலகுவதற்கான உரிமை எதுவும் அலுவலர் ஒருவருக்குக் கிடையாது. ஆனால் வான்படைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின்படி அலுவலர் பதவியிலிருந்து விலகுவது சனாதிபதியினால் அனுமதியளிக்கப்படலாம். பயிற்சி மற்றும் அதைத் தொடர்ந்த கற்கைநெறிகள் தொடர்பிலான கட்டாய சேவைக்காலத்தைக் குறிக்கின்ற ஏதேனும் உடன்படிக்கை செய்திருப்பின் மேலே கூறப்பட்ட வான்படைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின்படி அனுமதிக்கப்படமாட்டா. வான்படையிலிருந்து ஓய்வு பெறுவது வான்படை ஓய்வூதியங்கள், பணிக்கொடைகள் சட்டக் கோவையில் குறித்துரைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்கீழ் 10 ஆண்டுகள் சேவைக்குப்பின் ஏற்புடையதாகும்.

12. அலுவலர் ஒருவர் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக எந்த நேரத்திலும் உலகத்தின் எப்பாகத்திற்கும் அனுப்பப்படுவதற்கு ஆளாவர்.

13. திருமணமாகாத அலுவலர் ஒருவர் உணவு விடுதியில் வசிப்பதற்கு தேவைப்படுத்தப்படுவர். அவருக்கு தளபாடங்களுடனான இடவசதியும் உணவும் ஏற்பாடு செய்யப்படும். சேவையாளர் சேவைக்கும் ஏற்பாடு செய்யப்படும். திருமணமாகாத அலுவலர்களின் உணவுப்படியும் சேவையாளர் படியும் உணவு விடுதிக்குச் செலுத்தப்படும்.

14. திருமணமான அலுவலர் ஒருவருக்கு கிடைக்கக்கூடியதாக இருந்தால் விவாகமானவர்களுக்கான மனை ஒன்று வழங்கப்படும். வாடகை அறவிடுதல் பகிரங்க சேவையாளருக்கு ஏற்புடைத்தானவாறு இருக்கும். விவாகமானவர்களுக்கான மனைகளில் வசிக்காத விவாகமான அலுவலர்கள் 15 (ஈ) (16) ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ளவாறான வாடகைப்படிக்கு உரித்துடையவர்களாவார்கள்.

15. (அ) இலங்கை வான்படையில் ஆணைபெற்ற அலுவலர்களுக்கான சம்பளம் பின்வருமாறு (ஆண்டொன்றுக்கு) :-

| வருடம் / நிலை | 2017 (வருடத்திற்கு) ரூபா | திருத்தப்பட்ட கொடுப்பனவுகள் (வருடத்திற்கு) ரூபா | 2020 (வருடத்திற்கு) ரூபா |
|---|---|---|---|
| பைலட் ஒபீசர் (மாணவ நுழைவு) | 319,404.00 | 68,796.00 | 463,260.00 |
| பைலட் ஒபீசர் (மாணவ அல்லாத நுழைவு) | 346,764.00 | 64,476.00 | 502,860.00 |
| ப்ளையிங் ஒபீசர் | 393,684.00 | 56,580.00 | 571,380.00 - (30 X 16,020) - 1,051,980.00 |
| ப்ளைற் லெப்டினன்ட் | 459,996.00 | 45,996.00 | 667,500.00 - (24 X 16,020) - 1,051,980.00 |
| ஸ்குவாட்ரன் லீடர் | 504,204.00 | 38,940.00 | 731,580.00 - (22 X 16,020) - 1,084,020.00 |

(ஆ) வைத்திய அதிகாரிகளுக்கான கொடுப்பனவுகள் :

| வருடம் / நிலை | 2017 (வருடத் திற்கு) ரூபா | திருத்தப் பட்ட கொடுப் பனவுகள் (வருடத் திற்கு) ரூபா | 2020 (வருடத் திற்கு) ரூபா |
|---|---|---|---|
| ஆரம்பப் பிரிவு | 448,944.00 | 47,760.00 | 651,780.00 (3 X 16,020 - 7 X 16,140 - 2 X 19,560 - 16 X 26,040) |
| தரம் II | 482,148.00 | 42,420.00 | 699,660.00 (3 X 16,020 - 7 X 16,140 - 2 X 19,560 - 16 X 26,040) |
| தரம் I | 591,948.00 | 22,620.00 | 861,660.00 (3 X 16,020 - 7 X 16,140 - 2 X 19,560 - 16 X 26,040) |
| விசேட பிரிவு | 727,608.00 | 2,808.00 | 1,056,000.00 (12 X 32,400) |

(ஆ) வைத்திய அதிகாரிகளுக்கான கொடுப்பனவுகள் :

(1) ஓய்வூதியக் கொடுப்பனவு மாதமொன்றுக்கு :
ஆரம்பப் பிரிவு - ரூபா 1,700
தரம் II - ரூபா 1,700
தரம் I - ரூபா 3,400
விசேட பிரிவு - ரூபா 3,400

(2) ஓய்வூதியம் அல்லாத கொடுப்பனவு மாதமொன்றுக்கு :
ஆரம்பப் பிரிவு - ரூபா 2,125
தரம் II - ரூபா 1,700
தரம் I - ரூபா 400

(3) நட்ட கொடுப்பனவு மாதமொன்றுக்கு - ரூபா 35,000

(4) மேலதிக வேலை கொடுப்பனவு மணித்தியாலத்துக்கு :
ஆரம்பப் பிரிவு - ரூபா 335
தரம் II - ரூபா 383
தரம் I - ரூபா 528
விசேட பிரிவு - ரூபா 628

(5) மொழித் திறமை கொடுப்பனவு மணித்தியாலத்துக்கு :
ஆரம்பப் பிரிவு - ரூபா 1,071.00
தரம் II - ரூபா 1,078.00
தரம் I - ரூபா 1,648.00
விசேட பிரிவு - ரூபா 2,016.00

(6) தேவையைப் பொறுத்து பந்தி 15 (ஈ) உள்ள சேவை கொடுப்பனவு வழங்கப்படும்.

(ஈ) சேவைக் கொடுப்பனவுகள் :

(1) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு ரூபா 7,800 ;

(2) உற்சாகமூட்டுக் கொடுப்பனவு ஐந்து வருடங்களின் பின்பு ஒவ்வொரு மாதமும் ரூபா 250 வீதம் ;

(3) கடினப்படி மாதமொன்றுக்கு ஒவ்வொரு நாட்களுக்கும் ரூபா 20 வீதம் ;

(4) விசேட கொடுப்பனவு யுத்தப் பிரதேசங்களில் பணிபுரிபவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 4,380 ;

(5) விசேட கொடுப்பனவு ரூபா 3,100 (ஒவ்வொரு வேலை நாட்களுக்கும் ரூபா 100 வீதம்) ;

(6) மேலதிகக் கொடுப்பனவு (மாதமொன்றுக்கு ரூபா 1,000) ;

(7) சீருடை பேணுதல் படி (மாதமொன்றுக்கு ரூபா 255) ;

(8) சேவையாளர் படி : மாதமொன்றுக்கு ரூபா 637.50 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்) ;

(9) உணவுப்படி மாதமொன்றுக்கு ரூபா 16,676.14 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால் ஒவ்வொரு நாட்களுக்கும் ரூபா 537.94 வீதம்) ;

(10) ஏற்புடைத்தாகுமிடத்து தகைமைப்படி (மாதமொன்றுக்கு ஆகக்கூடியது ரூபா 637.50 வரை) ;

(11) ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரதப் பிரயாணப்பத்திரம் (அலுவலருக்கும், மனைவிக்கும், பிள்ளைகளுக்கும்) ;

(12) அதிகாரி விடுதிகளில் வசிக்கும் அலுவலருக்கு மாதமொரு தடவை விடுதியிலிருந்து சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப் பத்திரம் அல்லது வசு வண்டிக் கட்டணச் செலவு மீளளிப்பு ;

(13) இலவச சீருடையும் பிற சார்பான பொருட்களும் ;

(14) இலவச மருத்துவ வசதிகள் (ஏற்புடைத்தாயின் குடும்பத்தினருக்கும்) ;

(15) திருமணமான அலுவலருக்கு (வெளியிலிருந்து வசிக்க அனுமதிபெற்றிருந்தால்) மாத்திரம் தொழில் புரியும் இடத்திலிருந்து 30 மைல்களுக்கு உட்பட்டதான இடத்திற்குப் பயணம் செய்வதற்கு இ. போ. ச. இலவசப் பயணச்சீட்டு வசதிகள் வழங்கப்படும்.

(16) அரசாங்க குடிமனைகளில் இருப்பாட்சி செய்யாத திருமணமான அலுவலர்களுக்குப் (பைலற் ஆபீசர் இலிருந்து குறூப் கப்ரன் அதற்கு மேலும் மாதமொன்றுக்கு 1,600 ரூபாவிலிருந்து 4,250 ரூபா வரை) வாடகைப்படிகள் கொடுபடற் பாலனவாகும்.

(17) சேவைக் கொடுப்பனவு ரூபா 300, ரூபா 400, ரூபா 500. (பல் வைத்தியர்களுக்கு முடிவுற்ற சேவைக்காலத்தைப் பொறுத்து).

(18) மேலதிக சேவைக் கொடுப்பனவு மாதத்திற்கு ரூபா 1,500 (மருத்துவ அலுவலர்கள் சேவைக்கு மாத்திரம்).

(19) 1/20 கொடுப்பனவு,- மாதமொன்றுக்கு - அடிப்படைச் சம்பளம் x 1/20 x 3 நாட்கள் மட்டும். (வைத்திய அலுவலர்கள் சேவைக்கு மாத்திரம்).

(20) மேலதிக கடமை கொடுப்பனவு 120 மணித்தியாலம் (உச்ச எல்லை) - ஒரு மாதத்திற்கு (மருத்துவ அலுவலர்கள் சேவைக்கு மாத்திரம்).

(21) தொலைபேசிக் கொடுப்பனவு மாதாந்தம் -
விசேட வைத்தியர் - ரூபா 8,000
வைத்தியர் - ரூபா 4,000

(22) பொறியியல் அதிகாரிகளுக்கான கொடுப்பனவு மாதாந்தம் 15,000 ரூபா (பொறியியல் அதிகாரிகளுக்கு மாத்திரம்).

(23) கால்நடை வைத்திய அதிகாரிகளுக்கான கொடுப்பனவு மாதாந்தம் 7,500 ரூபா (கால்நடை வைத்திய அதிகாரிகளுக்கு மாத்திரம்).

16. ஓய்வூதியங்கள்/ பணிக்கொடுப்பனவுகள் என்பன காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதிய பணிக்கொடுப்பனவு சட்டச் சேவையின் நியதிகளின்படி செலுத்தப்படுமாகும். வான்படை அலுவலர் அனைவரும் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படைகள்) திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துனர்களாவர். உதவுதொகைகளின் விகிதங்கள் 1970 ஆம் ஆண்டின் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படை) திட்டத்தின்படியாகும்.

17. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்**.- (அ) விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தெளிவாக நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 2017, பெப்புருவரி 28 ஆந் திகதியன்று நண்பகல் 12.00 மணிக்கு முன் "ஆட்சேர்ப்பு - கட்டளை அதிகாரி, தொழில் பயிற்சி பாடசாலை, இலங்கை விமானப்படை, ஏக்கலை, கொட்டுகொட" என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (பதிவுத் தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா). விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் "அரசாணையமர்வு அலுவலர்களுக்கான விண்ணப்பம் ..................... பிரிவு" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். முடிவுத் திகதியின் பின்னர் கொட்டுகொட, ஏக்கல, இலங்கை, வான்படையை வந்தடைவனவும், இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

(ஆ) அரசாங்க சேவையில் /கூட்டுத்தாபனத்தில்/சபையில்/குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பதாரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின் /சபையின்/ குடியியல் தாபனத்தின் தலைமையதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பகாரர் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை அனுப்புதல் வேண்டும் :-

(1) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் ;

(2) விண்ணப்பித்த பிரிவுக்கு தேவையான கல்வித் தகைமைகளை ஆதாரப்படுத்தும் சான்றிதழ் ;

(3) விண்ணப்பதாரரை நன்கு அறிந்தவரான பொறுப்புவாய்ந்த இருவரிடம் இருந்து அண்மையில் பெற்ற இரு குணநலச் சான்றிதழ்கள் ;

(4) விளையாட்டுத்துறைகள் பயிலிளவல் பயிற்சி முதலியவற்றை ஆதாரப்படுத்தும் சான்றிதழ்கள்.

(5) விண்ணப்பதாரருக்கு உரித்தான வேறு சான்றிதழ்கள்.

* **குறிப்பு**.- சான்றிதழ்களின் மூலப்பிரதிகள் விண்ணப்பதாரிகள் முதலாம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் படும்பொழுது கட்டாயமாக வைத்திருத்தல் வேண்டும்.

18. விண்ணப்பத்தில் கூற்று எதுவும் பிழையானதெனக் காணப்படுமிடத்து, தெரிவுசெய்யப்படுமுன் கண்டுபிடிக்கப்பட்டால் விண்ணப்பகாரரைத் தகைமையற்றவராக்கும். அத்துடன் தெரிவு செய்யப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவர் பதவியிலிருந்து நீக்கப்படுவார்.

19. **தெரிவுசெய்தல் நேர்முகப்பரீட்சை முதலியன**.- (அ) மேலே கூறப்பட்டுள்ள நிபந்தனையைப் பூர்த்திசெய்பவர்களுள் இருந்து மட்டும் முதனிலை நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். அவ்வாறு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் வான்படை ஏவுநரின் பணிப்பிற்கிணங்க வைத்திய சோதனைக்கு உட்படுத்தப்படுவர். இதில் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட தெரிவுச்சபையொன்றினால் இறுதித் தேர்வு நடாத்தப்படும்.

(ஆ) நேர்முகப் பரீட்சை ஒன்றின் பின்னர் இறுதியாக தெரிவு செய்யப்படும் நபர்களுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்படும் இடம், நேரம், திகதி ஆகியன பற்றி எழுத்தில் அறிவிக்கப்படும். இது தொடர்பாக எதுவித பயணச் செலவோ அல்லது வேறு செலவோ வழங்கப்படமாட்டாது.

(இ) விண்ணப்பதாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டையைக் காண்பிக்க வேண்டும் ;

(ஈ) இறுதி நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் வைத்திய சபையொன்றினால் நடாத்தப்படும் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர் ;

(உ) ஒரு தேர்வுநாடியைச் சிபாரிசு செய்ய விரும்புவோர் அவருக்கு ஒரு நற்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அங்ஙனம் செய்யலாம். தேர்வுநாடி ஒருவரின் தெரிவில் எந்தவிதமான ஆதரவையும் தேடுதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க முயற்சித்தல் அத்தகைய விண்ணப்பகாரரை தகுதியிழக்கச் செய்யும்.

(ஊ) நிராகரிக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு அதுபற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

கே. வி. பி. ஜயம்பதி,
எயார் மார்ஷல்,
வான்படை தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை வான்படை,
த. பெ. எண். 594,
கொழும்பு 2.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை நிரந்தர/ தொண்டர் வான்படையில் ................. பிரிவில் அரசாணைபெற்ற அலுவலர் பதவி**

1. தேசிய இனம் :----.
(இலங்கைப் பிரசையாயின் வம்சாவழியிலா அல்லது பதிவு முறையிலா பதிவுமுறையாயின் சான்றிதழின் இலக்கமும் திகதியும் குறிப்பிடுக.)

2. முழுப்பெயர் :----.
(தேசிய ஆளடையாள அட்டையில் உள்ளவாறு)

3. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :----.

4. விண்ணப்பிக்கும் துறை :----.

5. விண்ணப்பிக்கும் பிரிவு :----.

6. நிரந்தர முகவரி :----.

7. நிரந்தர முகவரியின் அண்மையிலுள்ள பொலிசு நிலையம் :----.

8. பாடசாலை பற்றிய விபரங்கள் :----.

9. அஞ்சல் முகவரி :----.

10. E-Mail (மின்-அஞ்சல்) முகவரி :----.

11. பிறந்த திகதி :----.

12. உயரம் :----.

13. மாவட்டம் :----.

14. தேர்தற் தொகுதி :----.

15. கிராம அலுவலர் பிரிவு :----.

16. தொலைபேசி இலக்கம் :----.

17. திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா ? :----.

18. பாடசாலை அத்துடன்/ அல்லது பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் :----.

| பாடசாலை/ பல்கலைக் கழகத்தின் பெயர்கள் | பரீட்சை | ஆண்டு | பொதுப் பாடசாலை களும் சித்தி யடைந்த பாடங்களும் (தரம் உட்பட) |
|---|---|---|---|
| | க.பொ.த. (சா.த.)<br>க.பொ.த. (உ.த.)<br>தொழில் தகைமைகள்<br>வேறு | | |

19. பாடசாலை/ பல்கலைக்கழகத்தில் இருந்து விலகியதிலிருந்து புரிந்த தொழில் பற்றிய விபரங்கள் :-

| தொழில் தருநரின் பெயரும் முகவரியும் | தொழிலின் தன்மை | சேவைக்காலப் பகுதி | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

20. பெற்றோர் பற்றிய விபரங்கள் :-

| முழுப்பெயர் | பிறந்த இடம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

21. பதவிக்கான எவையேனும் சிறப்பான தகைமைகள் :----.

22. விளையாட்டில் தற்போதைய சாதனைகளின் விபரம் :----.
(குழுக்கள் பற்றிய விபரங்களையும் பங்குபற்றிய போட்டிகளையும் திகதியுடனும் பெற்ற சாதனைகளுடனும் தருக) :----.

23. புறம்பான சாதனைகள், பாடசாலை, பல்கலைக்கழகம் அல்லது வெளி அமைப்புகளில் இருக்கும்பொழுது பெற்ற சாதனைகள் (திகதிகளுடன் விபரத்தையும் தருக.) :----.

24. இதற்கு முன் ஆயுதப் படையில் தொண்டர் படையில் பயிலிளவல் படையணியில் அல்லது இளம் சாரணர் இயக்கத்தில் ஆற்றிய சேவை :----.

25. இலங்கை வான்படையில் அல்லது ஆயுதப் படையில் ஏதேனும் சேவையில் அல்லது பொலிஸ் சேவையில் சேர்வதற்கு முன்பு விண்ணப்பித்தீரா ? அவ்வாறாயின் விபரங்களையும் அத்தகைய விண்ணப்பத்தின் பெறுபேற்றினையும் தருக :----.

26. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டவராயின் அல்லது பிணையில் விடப்பட்டவராயின் விபரங்கள் தருக :----.

27. இதற்கு முன்னர் அரசாங்கத் திணைக்களத்தில் அல்லது பகிரங்கத் துறையில்/ சபையில்/ கூட்டுத்தாபனத்தில் (மத்திய வங்கி/ தேசிய வங்கி/ பல்கலைக்கழகங்கள்/ அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள் உட்பட) வேலை செய்திருப்பின் வேலையில் இருந்து விலகியதன் காரணம் :----.

28. நற்சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் :-

| பெயர் | பதவிப் பெயர் | அஞ்சல் முகவரி |
|---|---|---|
| | | |

29. **விண்ணப்பதாரர் கைச்சாத்திடவேண்டிய வெளிப்படுத்துகை.**- மேலே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் என் அறிவிற்கும் விசுவாசத்துக்கும் சரியானவை என என் மீது ஆணையாக உறுதிமொழிகிறேன். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை வான்படையினருக்குத் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை முறையையும் அவர்கட்குப் பொருத்தமான விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்து உணர்ந்து கொண்டேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

2-700

---

## இலங்கை வான்படை

நிரந்தர/ தொண்டர் வான்படை வீரர்/ வீராங்கனைகளுக்கான வெற்றிடங்கள்

இலங்கை நிரந்தர வான்படையில் கீழே தரப்பட்டுள்ள தொழில் துறைகளில் வான்படை வீரர்/ வீராங்கனைகளுக்கான வெற்றிடங்களுக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன :

1. (அ) **தொழில் துறையும் தேவைப்படும் கல்வித் தகைமைகளும் :**

(1) வானூர்தி பொறியியல் (ஆண்/ பெண்)

(அ) வான் அமைப்பு எந்திரவியலாளர்
(ஆ) வானூர்தி இயந்திரவியலாளர்

(இ) வானூர்தி மின்னியல் கருவிகள் எந்திரவியலாளர்
(ஈ) கருவிகள் பாதுகாப்பு உதவியாளர்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியும் அவற்றில் கணிதம் அல்லது விஞ்ஞானத்தில் திறமைச் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள்.

*(2) பொது பொறியியல் (ஆண்)*

(அ) ஆயுத இயந்திரவியலாளர்
(ஆ) மோட்டார் போக்குவரத்து இயந்திரவியலாளர்
(இ) மேற்பரப்பு தொழில்நுட்ப உதவியாளர்
(ஈ) உலோகத் தகடு இயந்திரவியலாளர்
(உ) மரக்கலை இயந்திரவியலாளர்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகியவற்றில் திறமைச் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். அவற்றில் கணிதம் அல்லது விஞ்ஞானத்தில் திறமைச் சித்தி மேலதிகத் தகைமையாகும்.

*(3) மின்னணுவியலும் தொலைத்தொடர்பும் பொறியியல்*

(அ) வான் வானொலி தொழில்நுட்பவியலாளர் (ஆண்)
(ஆ) வான் தொலைத்தொடர்பாளர் (ஆண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். அவற்றில் கணிதம் அல்லது விஞ்ஞானத்தில் திறமைச் சித்தி இருத்தல் வேண்டும்.

(இ) வான்வழி தகவல் பரிமாற்றுதல் (ஆண்)
(ஈ) தொலைபேசி இயக்குநர் (ஆண்/ பெண்)
(உ) கணினி தொழில்நுட்பவியலாளர் (ஆண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி, ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள்.

*(4) வைத்தியத்துறை*

(அ) தாதி உதவியாளர் (ஆண்/ பெண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகியவற்றில் திறமைச் சித்தியும் மேலதிகமாக ஒரு பாடத்தில் திறமைச் சித்தியும், ஆங்கிலத்தில் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் விஞ்ஞானம்/ கணிதம்/ விவசாய விஞ்ஞானம் ஆகியவற்றில் 3 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல். சுகாதார அமைச்சு மூலமாக உயர் பயிற்சிநெறியைப் பெற விசேட தகைமையாகக் கருதப்படும். க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தி மேலதிக தகைமையாகும்.

| | |
|---|---|
| க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் உட்பட க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியல்/ கணிதம்/ விவசாய விஞ்ஞானம் ஆகியவற்றில் 3 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் - | தாதியர் டிப்ளோமா |
| க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் உட்பட க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானம்/ இணைந்த கணிதம் அல்லது பௌதிகவியல்/ விவசாய விஞ்ஞானம் ஆகியவற்றில் சித்திபெற்றிருத்தல். இரசாயனவியல் தொடர்பாக திறமைச்சித்தி பெற்றிருத்தல் - | மருந்தாக்கர்/ மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் |
| க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் உட்பட க. பொ. த. (உ. த.) பரீட்சையில் இரசாயனவியல் மற்றும் பௌதிகவியல்/ விவசாய விஞ்ஞானம் ஆகியவற்றில் சித்தி பெற்றிருத்தல் அல்லது உயிரியல்/ இணைந்த கணிதம் தொடர்பாக திறமைச் சித்திபெற்றிருத்தல் - | ECG/EET/EEG தொழில்நுட்பவியலாளர் வான்படை சுகாதாரப் பரிசோதகர் |

| | |
|---|---|
| க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் உட்பட க. பொ. த. (உ. த.) பரீட்சையில் இரசாயனவியல்/ உயிரியல்/ இணைந்த கணிதம் ஆகியவற்றில் சித்தி பெற்றிருத்தல். பௌதிகவியல் தொடர்பாக திறமைச் சித்தி பெற்றிருத்தல்- | ஒகியுபேஷனல் தெரபிஸ்ட்/ X Ray தொழில்நுட்பவியலாளர், பிசியொதெரபிஸ்ட் |

(ஆ) பல் வைத்திய உதவியாளர் (ஆண்/ பெண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகியவற்றில் திறமைச் சித்தியும் மேலதிகமாக ஒரு பாடத்தில் திறமைச் சித்தியும், ஆங்கிலத்தில் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் விஞ்ஞானம்/ கணிதம்/ விவசாய விஞ்ஞானம் ஆகியவற்றில் 3 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல். சுகாதார அமைச்சு மூலமாக உயர் பயிற்சியைப் பெற்றிருத்தல் விசேட தகைமையாகக் கருதப்படும்.

(5) *பரிபாலனத்துறை (ஆண்/ பெண்)*

(அ) பரிபாலன உதவியாளர்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி, ஆங்கிலத்தில் சித்தியும், கணிதம்/ விஞ்ஞானம்/ வர்த்தகமும் கணக்கியலும் ஆகியவற்றில் ஒன்றில் திறமைச் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். மேலும் கணினி அனுபவம் இருத்தல் பரிபாலன துறைக்கு மேலதிகத் தகைமையாகக் கருதப்படும்.

(ஆ) கணக்கியல் உதவியாளர்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி, ஆங்கிலத்தில் சித்தியும், கணிதம்/ வர்த்தகமும் கணக்கியலும் ஆகியவற்றில் ஒன்றில் திறமைச் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். மேலும் கணினி அனுபவம் இருத்தல் கணக்கியல் துறைக்கு மேலதிகத் தகைமையாகக் கருதப்படும்.

(6) *தொழிற்பாடுகள் துறை*

(அ) வான் தொழிற்பாடுகள் (ஆண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழியில் சித்தியும், ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள்.

(ஆ) தீயணைப்பாளர் (ஆண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி, ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். கனரக வாகன அனுமதிப்பத்திரம் இருத்தல் ஆட்சேர்த்தலின் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

(இ) பூமி தொழிற்பாட்டாளர் (ஆண்)
(ஈ) நாய்கள் கையாளுபவர் (ஆண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழியில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள்.

(7) *உபகரணத் துறை*

(அ) வழங்குநர் உதவியாளர் (ஆண்/ பெண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி, ஆங்கில மொழியில் சித்தியும், கணிதம்/ விஞ்ஞானம்/ வர்த்தகமும் கணக்கியலும் ஆகியவற்றில் ஒன்றில் திறமைச் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். மேலும் கணினி அனுபவம் இருத்தல் உபகரணத் துறைக்கு விசேட தகைமையாகக் கருதப்படும்.

(ஆ) வானூர்தி எரிபொருள் வழங்குநர் (ஆண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் சித்தியும், கணிதம்/ விஞ்ஞானம்/ வர்த்தகமும் கணக்கியலும் ஆகியவற்றில் ஒன்றில் திறமைச் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். மேலும் கணினி அனுபவம் இருத்தல் உபகரணத் துறைக்கு விசேட தகைமையாகக் கருதப்படும்.

(இ) வானூர்தி கடமையாளர் (பெண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழியில் சித்தியும், ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். ஆங்கில மொழி சரளமாகப் பேசும் திறமை மற்றும் சிறந்த தோற்ற அமைப்பு கட்டாயம் இருத்தல் வேண்டும். வானூர்தி கடமையாளர் அனுபவம் இருத்தல் வானூர்தி கடமையாளர் துறைக்கு மேலதிக தகைமையாகக் கருதப்படும். (உயரமானது பாதத்திலிருந்து கைகள் நீட்டினால் செ. மீ. 212 இற்கு இருத்தல் வேண்டும்.)

(ஈ) உணவக மேற்பார்வையாளர் (ஆண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ், ஆங்கில மொழியில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள்.

(உ) சீருடை நிருமாணிப்பாளர் (பெண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழியில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள். JUKI machine தொடர்பான அனுபவம் இருத்தல். (Over lock, Button Hole, Button Attached, Double Needle, Bar Tack), வெட்டுதல் மற்றும் ஆடையமைப்பு அனுபவம் துறைசார்ந்த மேலும் தையல் இயந்திரத்தைச் சீரமைக்கும் தகைமை இருப்பின் ஆட்சேர்ப்பின்போது முதலுரிமை வழங்கப்படும்.

(8) *பொலிஸ் துறை*

(அ) பொலிஸ் (ஆண்/ பெண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள். உயரம் 5 அடி 8 அங்குலமும் அதற்கு மேலும். பெண் 5 அடி 6 அங்குலமும் அதற்கு மேலும் இருப்பின் முதலிடம் வழங்கப்படும்.

(9) *(அ) இசைக் கலைஞர் (ஆண்)*

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழியில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள். சங்கீதம், பாடும் திறமை தொடர்பான அறிவும் அனுபவமும் மேலதிக தகைமையாகும்.

(10) *உடற்பயிற்சியாளர் (ஆண்/ பெண்)*

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழியில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள். தேசிய மட்டத்தில் மெய்வல்லுநர் விளையாட்டு தொடர்பான தகைமை விசேட கவனத்தில் கொள்ளப்படும். நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்த அனைத்து விண்ணப்பதாரர்களும் செயன்முறைப் பயிற்சியில் சித்தியடைதல் வேண்டும்.

**இலங்கை தொண்டர் விமானப்படை வீரர்/ வீராங்கனைகளுக்கான வெற்றிடங்கள் :**

*2. (அ)* **தொழில் துறையும் தேவைப்படும் கல்வித் தகைமை மற்றும் தொழிற் தகைமையும்**

*(1) உபகரணத் துறை :*

(அ) போசனசாலை மேற்பார்வையாளர் (ஆண்/ பெண்)

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். மேலும் ஆங்கில மொழியில் சித்தியும் அல்லது ஆங்கில மொழி சரளமாகப் பேசும் திறமை இருப்பின் ஆட்சேர்ப்பின்போது முதலுரிமை வழங்கப்படும். சுற்றுலாத் துறையில் அனுமதிபெற்ற ஹோட்டல்களில் பெற்ற அனுபவம் துறைசார்ந்த தகைமை இருப்பின் ஆட்சேர்ப்பின்போது முதலுரிமை வழங்கப்படும். Waiter/Barman/House Keeper/Room Boy/Room Attendence/ Room Steward).

இலங்கை நிரந்தர விமானப்படை வீரர்/ வீராங்கனைகளுக்கான நேரடி ஆட்சேர்ப்புக்கான வெற்றிடங்கள் :

*3. (அ)* **தொழில் துறையும் தேவைப்படும் கல்வித் தகைமை மற்றும் தொழிற் தகைமையும்**

*(1) பரிபாலனத் துறை :*

(அ) தணிக்கை உதவியாளர் (ஆண்/ பெண்)

(1) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் வர்த்தப் பிரிவில் 3 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(2) இலங்கை கணக்கியல் துறையில் இரண்டாம் மட்டம் (AAT Stage II) முடித்திருத்தல் வேண்டும். அல்லது தொழில்நுட்பக் கல்லூரியில் உயர் தேசிய கணக்கியல் துறையில் டிப்ளோமா (HNDA) இரண்டாம் வருட பூர்த்தி அல்லது உயர் தேசிய வர்த்தகத் துறையில் டிப்ளோமா (HNDC) இரண்டாம் வருட பூர்த்தி இருத்தல் வேண்டும்.

(3) அரச துறை அல்லது தனியார் துறை கணக்கியல் துறையில் அனுபவம் இருத்தல் மேலதிக தகைமையாகும்.

* தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் தமது தொழில் தகைமைக்கு அமைவாகக் குறிப்பிட்ட நிலையில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

(2) இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு இயந்திரவியலாளர் பிரிவு (ஆண்)

(அ) வான் தொலைத்தொடர்பு இயந்திரவியலாளர்
(ஆ) தொலைபேசி இயந்திரவியலாளர்

(1) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியும் உட்பட 6 பாடங்களில் சித்திகள். அவற்றில் கணிதம் அல்லது விஞ்ஞானத்தில் திறமைச் சித்தி இருத்தல் வேண்டும்.

மற்றும்

(2) தொழிற்துறை மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி அமைச்சின் மூலமாக அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை ஒன்றின் முழுநேர இரண்டு ஆண்டு பொறியியலாளர் (தொலைத்தொடர்பு/ இலத்திரனியல்/ மின்னியல்) சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப பயிற்சிப் பாடசாலை ஒன்றின் முழுநேர இரண்டு ஆண்டு பொறியியலாளர் (தொலைத்தொடர்பு/ இலத்திரனியல்/ மின்னியல்) சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

* தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு தமது தகைமைக்கு அமைவாக முன்னணி வான் வீரர் நிலையில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

*3. ஏனைய தகைமைகள் :*

இலங்கை நிரந்தர/தொண்டர் வான்படையில் இணைவதற்கு பின்வரும் பொதுத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(1) தேசிய இனம்.- ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(2) வயது (2017, மே 20 ஆந் திகதியன்று) ஆண் - 18 வயதுக்கு குறையாமலும் 23 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் (நிரந்தர) ;
பெண் - 18 வயதுக்கு குறையாமலும் 22 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் (நிரந்தர).
ஆண் - 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (போசனசாலை மேற்பார்வையாளர்-தொண்டர்)
பெண் - 18 வயதுக்கு குறையாமலும் 25 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (போசனசாலை மேற்பார்வையாளர்-தொண்டர்)

நேரடி ஆட்சேர்ப்பு :
18 வயதுக்கு குறையாமலும் 26 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (துணிக்கை உதவியாளர் (ஆண்/ பெண்)
18 வயதுக்கு குறையாமலும் 28 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (வான் தொலைத்தொடர்பு இயந்திரவியலாளர்/ தொலைபேசி இயந்திரவியலாளர்) (ஆண்)

(3) உயரம்.- ஆண்கள் 5 அடி 5 அங்குலமும் அதற்கு மேலும் ;
பெண்கள் 5 அடி 3 அங்குலமும் அதற்கு மேலும்.

(4) உடல் நிறை.- ஆண் 17 < உடற்பருமன் சுட்டி (BMI) < 26
பெண் 17 < உடற்பருமன் சுட்டி (BMI) < 25

$$\text{உடற்பருமன் சுட்டி (BMI)} = \frac{\text{நிறை (கி. கி.)}}{\text{உயரம்}^2 \text{ (மீ)}}$$ ;

(5) பார்வை வர்ணப் பதிவு மட்டம் .- CP2 ;

(6) மார்பு.- குறைந்தது 32 அங்குலம் (ஆண்) ;

(6) தொலைப்பார்வை.- இரண்டு கண்களிலும் 6/ 6 (மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப்படாமல்) ;

(7) குடியியல் நிலை :

(அ) நிரந்தர வான்படை வீரர்/ நிரந்தர வான்படை வீராங்கனை விவாகமாகாதவராக இருத்தல் வேண்டும். (வான்படையில் இணைந்து இரண்டு ஆண்டுகள் பூர்த்தியடைவதுடன் தொழில் பயிற்சியைப் பூர்த்திசெய்து ஓராண்டு கழிந்த பின்பு ஏற்படும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப விவாகம் செய்ய அனுமதி வழங்கப்படும்).

(ஆ) தொண்டர் வான்படை வீரர்/தொண்டர் வான்படை வீராங்கனை விவாகமாகாதவராக இருத்தல் வேண்டும். (வான்படையில் இணைந்து ஓராண்டு பூர்த்தியடைவதுடன் தொழில் பயிற்சியைப் பூர்த்திசெய்து ஓராண்டு கழிந்த பின்பு ஏற்படும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப விவாகம் செய்ய அனுமதி வழங்கப்படும்).

(இ) நேரடி ஆட்சேர்ப்பில் இணையும் வான்படை வீரர்/ வான்படை வீராங்கனைகள் தமது அடிப்படைப் பயிற்சியைப் பூர்த்திசெய்து பின்பு ஏற்படும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப விவாகம் செய்ய அனுமதி வழங்கப்படும்.

4. பந்தி 1அ, 2அ, 3 இல் உள்ள தேவைப்பாடுகளை அல்லது கல்வித் திறமைகளை நிறைவுசெய்யாதவர்களுமான விண்ணப்பதாரிகள் நிராகரிக்கப்படுவர். முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தவுடன் உயரம், நிறை, கண் பார்வை பரிசீலிக்கப்படும். வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட உடற்தகைமை மட்டத்தைக் கொண்டிராத விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள். தேவையான உயரம், நிறை, கண் பார்வை முதலியவை இல்லாதிருந்தாலும் வான்படைக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படை தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்தில் கொள்ளப்படும்.

5. விளையாட்டுத்துறையில் சிறந்த சாதனைகள் இருப்பின் முறையாக கவனத்திற்கொள்ளப்படும்.

6. **சேவை நிபந்தனைகள் :**

(அ) வான்படை வீரர்/வீராங்கனைகள் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து வான்படை சட்டத்திற்கும் ஏனைய வான்படை ஒழுங்குவிதிகளுக்கும் வேறு கட்டளைகளுக்கும் உட்பட்டவர்களாவர்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் தொழில் துறைக்குரிய நிரந்தர வான்படை வீரர்/ நிரந்தர வீராங்கனைகள் அடிப்படைப் பயிற்சியும் அதன்பின் தொழில்துறைப் பயிற்சியும் வழங்கப்படுவதுடன், தொண்டர் வான்படை வீரர்களுக்கு அடிப்படை பயிற்சியும் வழங்கிய பின் அவர்கள் (நிரந்தர/ தொண்டர்) இலங்கையின் எந்தப் பிரதேசத்திலும், மிகக் கஷ்டமான நிலைமையிலும் இரவு பகலாக தமது தாய்நாட்டுக்குள் அல்லது வெளிநாடுகளில் சேவையாற்ற ஆயத்தமாதல் வேண்டும்.

7. **தொழிலில் அமர்த்தப்படுதல் பற்றிய நிபந்தனைகள் :**

(அ) நிரந்தர வான்படை வீரர்/ நிரந்தர வீராங்கனைகள் தொடர்பாக :
தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நிரந்தர வான்படையில் மூன்றாம் தர வானூர்தியாளர் தரத்தில் சேர்க்கப்பட்டு 12 ஆண்டுகள் சேவையாற்றுதல் வேண்டும். அதில் தொடர்ச்சியாக 8 ஆண்டுகள் சேவையாற்றுமாறு உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்ளுமாறு கேட்டுகப்படுவார்கள். மேலும் 8 ஆண்டுகள் பூர்த்தியானதும் அதிலிருந்து இன்னும் 4 ஆண்டுகள் மீண்டும் நிரந்தர உப சேவையில் சேவையாற்றுதலானது மீண்டும் அழைக்கப்படும்போது சமுகமளிக்க வேண்டும். 8 ஆண்டுகள் கழிந்த பின் மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படும் பொருட்டு பொருத்தமான வானூர்தியாளர்களுக்கு சந்தர்ப்பங்கள் உண்டு.

(ஆ) தொண்டர் வான்படை வீரர்/ தொண்டர் வீராங்கனைகள் தொடர்பாக :
தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் தொண்டர் வான்படையில் மூன்றாம் தர வானூர்தியாளர் தரத்தில் சேர்க்கப்பட்டு 5 ஆண்டுகள் சேவையாற்றுதல் வேண்டும். 5 ஆண்டுகள் கழிந்த பின் வான்படை தளபதியின் அனுமதியுடன் மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படும் பொருட்டு பொருத்தமான வானூர்தியாளர்களுக்கு சந்தர்ப்பங்கள் உண்டு.

8. **அரச கரும மொழித் தேவைப்பாடுகள்**.- தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசகரும மொழிக் கொள்கைக்கு இணங்கியிருத்தல் வேண்டும்.

9. **சம்பளமும் கொடுப்பனவுகளும் :**

(அ) தற்போதிலிருந்து 2020 வருடத்திற்கான வான்படை வீரர்களுக்கு ஏற்புடையதாக அடிப்படைச் சம்பள விகிதங்கள் பின்வருமாறு :

| வருடம் நிலை | 2017 ஆம் வருடத் திற்கான ரூபா | 2018 ஆம் வருடத் திற்கான ரூபா | 2019 ஆம் வருடத் திற்கான ரூபா | 2020 ஆம் வருடத் திற்கான ரூபா |
|---|---|---|---|---|
| விமான வீரன் | 2,44,608 | 2,81,232 | 3,17,856 | 3,54,480 (7X300-19X370) |
| முன்னணி விமான வீரன் | 2,52,060 | 2,89,800 | 3,27,540 | 3,65,280 (4X300-19X370) |
| கோப்ரல் | 2,59,512 | 2,98,368 | 3,37,224 | 3,76,080 (1X300-10X370-9X495) |
| சார்ஜன்ட் | 2,67,996 | 3,08,184 | 3,48,372 | 3,88,560 (3X370-9X495-3X660) |
| பிளைட் சார்ஜன்ட் | 2,73,996 | 3,15,144 | 3,56,292 | 3,97,440 (1X370-9X495-3X660) |
| அதிகாரம்பெற்ற அலுவலர் | 2,85,204 | 3,28,056 | 3,70,908 | 4,13,760 (7X495-14X660) |
| பிரதான அதிகாரம்பெற்ற அலுவலர் | 3,19,404 | 3,67,356 | 4,15,308 | 4,63,260 (13X660) |

(ஆ) வேறு கொடுப்பனவுகள் :

(1) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு ரூபா 7,800 ;

(2) உற்சாகமூட்டுக் கொடுப்பனவு.- சேவைக்காலம் ஐந்து வருடம் பூர்த்தியடைந்த பின் இக்கொடுப்பனவு வழங்கப்படும். (மாதமொன்றுக்கு 250 ரூபா) ;

(3) கடினப்படி நாளொன்றுக்கு ரூபா 20.00 ;

(4) கஷ்டப் பிரதேசங்களில் சேவை புரிபவர்களுக்கு மேலதிகமாக மாதமொன்றுக்கு ரூபா 3,880 வழங்கப் படும் ;

(5) விசேட கொடுப்பனவு I.- விசேட கொடுப்பனவு மாதமொன்றுக்கு 2,400 ரூபா வழங்கப்படும். (ஒவ்வொரு வேலை நாட்களுக்கும் 80 ரூபா வீதம்) ;

(6) மேலதிகக் கொடுப்பனவு மாதமொன்றுக்கு 1,000 ரூபா ;

(7) சீருடை கொடுப்பனவு மாதமொன்றுக்கு 170 ரூபா வழங்கப்படும் ;

(8) உணவு கொடுப்பனவு.- வெளியில் தங்கும் வான்படை வீரர்/ வான்படை வீராங்கனைகளுக்கு மாதமொன்றுக்கு ரூபா 14,213.70 (ஒவ்வொரு நாளுக்கும் ரூபா 473.79 வீதம்) ;

(9) தகைமைச் சம்பளம்.- விசேட பயிற்சி நெறியில் தகைமை பெற்றவர்களுக்கு அல்லது வான்படைச் சேவைக்கு விசேட பெறுமதிவாய்ந்த தகைமை கொண்டிருப்பவர்களுக்கு இத் தகைமைச் சம்பளம் வழங்கப்படும். மாதமொன்றுக்கு ஆகக்கூடிய தொகை ரூபா 637.50 வழங்கப்படும் ;

(10) மாறுபடும் கொடுப்பனவு ;

(11) பிரயாணம்.- ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரத பயணச்சீட்டுகள் (வீரர் / வீராங்கனைக்கும் கணவருக்கும் பிள்ளைகளுக்கும்) ;

(12) உள்ளே தங்கியிருக்கும் வான்படை வீரர்களுக்கு மாதமொரு தடவை சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு பஸ் வண்டிக் கட்டண செலவின மீளளிப்பு ;

(13) இலவச சீருடை மற்றும் பொருட்களும் ;

(14) மருத்துவம் வான்படையின் செலவில் வான்படை வீரர்களுக்கும் திருமணமாயின் அவர்களது குடும்பத்தினருக்கும் இலவச மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்படும் ;

(15) வெளியில் தங்கியிருப்பவர்களும் வேலைத்தளத்திலிருந்து 30 மைல் (கீ.மீ 48) சுற்றுவட்டத்தில் வாழ்பவர்களுமான வான்படை வீரர்களுக்கு இ.போ.ச. பேருந்து வண்டிகளில் வேலைக்கென இலவசமாக பிரயாணச் சீட்டு வழங்கப்படும் ;

(16) விவாகமான வான்படை வீரர்களுக்கு அரசாங்கத்திற்குரிய விவாகமானவர்களுக்கான விடுதியில் குடியிராவிடில் மாதமொன்றுக்கு சார்ஜன் நிலையின் கீழ் ரூபா 1200.00 இலிருந்து 2750.00 வரை பிளைட் சார்ஜன் நிலையில் இருந்து ரூபா 1,350 இலிருந்து 3,300 வரை வாடகைப் படியொன்றுக்கு உரித்துடையவராவர் ;

(17) தங்குமிட வசதி.- உள்ளேதங்கும் வான்படை வீரர்களுக்கு இலவசம் ;

மீள அமர்த்தலுக்கான சம்பளம் மீள அமர்த்தப்பட்ட காலப்பகுதியின்போது மாதமொன்றுக்கு ஆளணியினர் 300.00 ரூபாவுக்கு உரித்துடையவராவர்.

(18) கலவரகாலப்படி.- நிரந்தரமான நிலையங்களுக்கு வெளியே கடமைக்குச் செல்லும்போது இக்கொடுப்பனவு வழங்கப்படும் (விவாகமானவர்/ விவாகமாகாதவர் என்பதற்கிணங்க கொடுப்பனவு வேறுபடும்) ;

(19) நன்னடத்தைப் பதக்கம் சம்பளம் மிக உயர்ந்த தரத்திலான நடத்தையும் பொது ஒழுக்கமும் கொண்ட ஆளணியினருக்கு மாதமொன்றுக்கு ரூபா 30.00 இலிருந்து ரூபா 511.00 வரை வழங்கப்படும் ;

(20) விரிவுரையாளர் கொடுப்பனவு மாதமொன்றுக்கு ரூபா 425.00 இலிருந்து ரூபா 510.00 வரை கொடுப்பனவுக்கு உரித்துடையவராவர் ;

(21) வேறு கொடுப்பனவுகள் : (பிரிந்திருத்தல் அல்லது வெளிநாடுகளில் சேவையாற்றுதல்).- இலங்கை வான்படை சம்பள சட்டதிட்டங்களுக்கு அமைய இக்கொடுப்பனவு வழங்கப்படும் ;

(22) ஓய்வூதியங்கள்/ பணிக்கொடுப்பனவு என்பன காலத்துக்கு காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதிய பணிக்கொடுப்பனவு சட்டச்சேவையின் நியதிகளின்படி செலுத்தப்படும். வான்படை வீரர்கள் அனைவரும் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படைகள்) திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துநர்களாவர். உதவுதொகைகளின் விகிதங்கள் 1970 ஆம் ஆண்டின் விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படை) திட்டத்தின்படியாகும்.

10. **விண்ணப்பதாரர்களுக்கான அறிவுறுத்தல்கள்.**- (அ) விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட மாதிரிப் படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தெளிவாக தமது கையெழுத்தால் நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 2017, பெப்புருவரி 28 ஆந் திகதியன்று நண்பகல் 12.00 மணிக்கு முன் "கட்டளை ஆட்சேர்ப்பு அதிகாரி, கட்டளை ஆட்சேர்ப்பு அலுவலகம், இலங்கை விமானப்படை தொழிற்துறை பயிற்சிப் பாடசாலை, ஏக்கலை, கொட்டுகொட" என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (பதிவுத் தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா). விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை விமானப்படை வான்படை நிரந்தர/தொண்டர் வீரர்/வீராங்கனைகளுக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். முடிவுத் திகதியின் பின்னர் வந்தடைவனவும், இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

(ஆ) அரசாங்க சேவையில் /கூட்டுத்தாபனத்தில்/சபையில்/குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பகாரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின் /சபையின்/குடியியல் தாபனத்தின் தலைமையதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழொன்றை கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும்போது பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதிகளை சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுவர் :-

(1) பிறப்புப்பதிவு சான்றிதழ் மூலப்பிரதி (கல்விச்சட்டகோவையின் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் அல்லது பிறப்புச் சான்றிதழின் பிரித்தெடுப்பு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(2) தேவைப்படுத்தப்பட்ட கல்வித் தகைமைக்கு ஆதாரமான சான்றிதழ்.

(3) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிடமிருந்து பெற்ற தொழிற்துறை/ தொழில்நுட்பப்பயிற்சி அத்துடன்/ அல்லது அனுபவம் ஏதுமிருப்பின் அது தொடர்பான சான்றிதழ்.

(4) இரண்டு நற்குணச் சான்றிதழ்களைப் பெற்றிருத்தல் வேண்டும். இவற்றுள் ஒன்று இறுதியாக கல்வி பயின்ற பாடசாலை அதிபரினதும் மற்றையது விண்ணப்பதாரரை தனிப்பட்ட முறையில் நன்கறிந்த பொறுப்புவாய்ந்த ஒருவரிடம் இருந்து அல்லது விண்ணப்பதாரின் தொழில் தருநரிடமிருந்து. (தொழில் புரிவாராயின்).

(5) விளையாட்டுத்துறை நடவடிக்கைகள் கெடெற்றிங் முதலியவற்றிற்கு ஆதாரமான சான்றிதழ்கள்.

(ஈ) ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு கோரப்படும்போது அவற்றைச் சமர்ப்பிக்கத்தவறும் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டா.

(உ) சான்றிதழ் மூலப்பிரதிகளை விண்ணப்பத்துடன் அனுப்ப வேண்டாம்.

(ஊ) சான்றிதழ் மூலப்பிரதிகளை விண்ணப்பத்துடன் அனுப்பியவைக்கு விமானப்படை பொறுப்பை ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

11. நேர்முகப் பரீட்சைகளுக்குத் தெரிவு செய்யப்படும் தேர்வுநாடிகளுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைக்கான இடம் நேரம் தேதி என்பன எழுத்து மூலம் அறிவிக்கப்படும். இது சம்பந்தமாகப் பயண அல்லது பிற செலவுகள் வழங்கப்படமாட்டா.

12. விண்ணப்பதாரியொருவர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தேசிய அடையாள அட்டை சமர்ப்பித்தல் வேண்டும். தேசிய அடையாள அட்டை வைத்திராத விண்ணப்பதாரர்கள் வேறு ஏதேனும் விதமான ஏற்றுக்கொள்ளத்தக்க அடையாளமொன்றை சமர்ப்பிக்கலாம். ஆயினும் எந்தவொரு விண்ணப்பதாரரும் தேசிய அடையாள அட்டையின்றி சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்.

13. இறுதி நேர்முகப்பரீட்சைகளையடுத்து பொருத்தமானவர்களாக இருக்கக்கூடிய விண்ணப்பதாரர்கள் வான்படை மருத்துவச் சபையொன்றின் முன்னிலையில் தோற்றுமாறு தேவைப்படுத்தப்படுவர். பொருத்தமான விண்ணப்பதாரர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டு வான்படையின் தொழிற்தேவைப்பாடுகளின் அடிப்படையில் உயர் புள்ளி மட்டத்தில் இருந்தே தேர்வு செய்யப்படுவர்.

14. விண்ணப்பதாரரொருவருக்கு விதப்புரை வழங்க விரும்பும் எவரும் நற்சாட்சிப்பத்திரமொன்றை வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்தல் வேண்டும். ஏதேனும் விதத்தில் ஆதரவு தேடுதல் அல்லது விண்ணப்பதாரரொருவரின் தெரிவுக்கு செல்வாக்கைப் பயன்படுத்த எத்தணித்தல் அத்தகைய விண்ணப்பதாரரை தகைமையிழக்கச் செய்யும்.

15. விண்ணப்பத்தில் பிழையான தகவல் காணப்படும் ஏதேனும் கூற்று அத்தகைய பிழை தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் தகைமையிழப்பிற்கும் தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்படின் பதவிநீக்கத்திற்கும் விண்ணப்பதாரரை ஆளாக்கிவிடும்.

16. நேர்முகப் பரீட்சைகளில் சித்திபெறாத விண்ணப்பதாரர்களுக்கு அதுபற்றி அறிவிக்கப்படமாட்டாது.

கே. வி. பி. ஜயம்பதி,
எயார் மார்ஷல்,
வான்படை தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை வான்படை,
த. பெ. எண். 594,
கொழும்பு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை வான்படை நிரந்தர வீரர்/வீராங்கனைகளுக்கான விண்ணப்பம்**

1. முழுப்பெயர் :----.
   (தேசிய ஆள் அடையாள அட்டைப்படி)

2. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

3. விண்ணப்பிக்கும் தொழில் துறை :----.

4. அஞ்சல் முகவரி :----.

5. நிரந்தர முகவரி :----.

6. அருகிலுள்ள விமானப்படை முகாம் :----.

7. நிரந்தர முகவரியின் பொலிஸ் நிலையம் :----.

8. மாவட்டம் :----.

9. தேர்தற் தொகுதி :----.

10. கிராம உத்தியோகத்தர் பிரிவு :----.

11. தொலைபேசி இலக்கம் :----.

12. பிறந்த திகதி :----.

13. வயது (2017, மே 20 ஆந் திகதியன்று) :

வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

14. விவாகமானவரா/ விவாகமாகாதவரா ? :----.

15. பால் :----.

16. உயரம் :- ----- அடி ----- அங்குலம்.

17. க.பொ.த (சா.த.) பரீட்சை :

| ஆண்டு | சுட்டிலக்கம் | சித்தியடைந்த பாடங்கள் | பெற்ற தரங்கள் |
|---|---|---|---|
| | | | |

18. க.பொ.த (உ.த) பரீட்சை :

| ஆண்டு | சுட்டிலக்கம் | சித்தியடைந்த பாடங்கள் | பெற்ற தரங்கள் |
|---|---|---|---|
| | | | |

19. பதவிக்குரிய எவையேனும் விசேட தகைமைகள் : (தொழில்நுட்பம் , தொழிற்பயிற்சி அனுபவம் முதலியன) :----.

20. விளையாட்டுத் துறையில் விசேட சாதனைகள் பற்றிய விவரம் :----.

21. பாடசாலையில் அல்லது வெளி ஒழுங்கமைப்புகளில் குறிப்பிடத்தக்க வேறு சாதனைகள் :----.

22. ஆயுதப்படைகளுக்கு அல்லது பொலிஸ் சேவைக்கு இதற்கு முன்னர் விண்ணப்பித்திருந்தால் விவரங்கள் தரவும் :----.

23. நீர் குடியியல் அல்லது இராணுவ நீதிமன்றமொன்றினால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவரா ? :----.

24. நற்சாட்சிப்பத்திரங்கள் பற்றிய விவரங்கள் :

| பெயர் | பதவி | நிரந்தர முகவரி |
|---|---|---|
| | | |

25. விண்ணப்பதாரரால் கையொப்பமிடவேண்டிய வெளிப்படுத்துகை :

மேலேயுள்ள வினாக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள விடைகள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் சரியானவை என என்மீது ஆணையாக வெளிப்படுத்துகிறேன். இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை நிரந்தர வான்படையில் வான்படை வீரராக தெரிவுசெய்யப்படும் விண்ணப்தாரர்கள் தொடர்பில் கடைப்பிடிக்கப்படும் நடவடிக்கை முறையையும் அவற்றுக்குரிய விதிகளையும் நான் வாசித்து விளங்கிக்கொண்டுள்ளேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

2-701

## அரசாங்க சேவை ஆணைக்குழு

காணி, காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்

**சட்ட அலுவலர் (நிறைவேற்று சேவை வகையின் தரம் III) பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்**

*காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்தில் சட்ட அலுவலர் பதவிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*வெற்றிட எண்ணிக்கை - 1*

*1.* **ஆட்சேர்ப்புச் செய்கின்ற நடைமுறை.-** *இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்களுள், அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைச் சபையினால் நடத்தப்படுகின்ற கட்டமைப்பில் அமைந்த நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் அதிக புள்ளிகளைப் பெறுகின்ற விண்ணப்பதாரர்கள் வெற்றிடத்தின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள். அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள (கீழே இலக்கம் 6 இல் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளிகள் வழங்கும் நடைமுறைக்கு அமைவாகக் கட்டமைப்பில் அமைந்த நேர்முகப் பரீட்சை நடைபெறும்.*

*2.* **தேவையான தகைமைகள் :**

(i) *கல்வி/தொழில்சார் தகைமைகள்.-* பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து சட்டத்துறையில் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்./ உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் செய்திருத்தல் வேண்டும் ;

(ii) *அனுபவம்.-* உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் எடுத்த பின்பு, மூன்று (3) வருடங்களுக்குக் குறையாத செயலூக்க அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும் ;

(iii) *உடற் தகைமைகள்.-* ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தப் பிரதேசத்திலும் சேவையாற்றவும், பதவியின் கடமை நிமித்தம் பணியாற்றக்கூடிய போதியளவு உடல் மற்றும் உள ரீதியாக இயலுமானவராக இருத்தல் வேண்டும்.

(iv) *ஏனைய தகைமைகள் :*

* இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
* விண்ணப்பதாரர்கள் சிறந்த நற்பண்புகள் உடையவராக இருத்தல் வேண்டும் ;
* விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற இறுதித் திகதியில், பதவியில் இணைத்துக்கொள்வதற்காகத் தேவையான தகைமைகள் சகல அம்சங்களிலும் பூரணப்படுத்தப்பட்டு இருத்தல் வேண்டும்.

*3.* **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் மற்றும் சேவை நிபந்தனைகள் :**

(i) இந்தப் பதவி நிரந்தரமானது. உங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்வரும் காலங்களில் எடுக்கப்படுகின்ற கொள்கை அளவிலான தீர்மானத்திற்கு நீங்கள் உட்படுத்தல் வேண்டும்.

(ii) இந்த நியமனம், 3 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டிருக்கும். சட்ட அலுவலர் III ஆம் தரத்திற்கு இணைக்கப்பட்டு, 3 வருடங்களுக்குள் ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் குறிப்பிட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன்காண் பரீட்சையில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

(iii) 2014.01.21 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் பிரகாரம், பதவியில் இணைந்து 5 வருடங்களுக்குள் சேவையில் இணைந்துகொண்ட மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழியில் ஏற்புடைத்த தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன், அரச கரும மொழி அல்லாத மொழி மூலமாகச் சேவையில் இணைந்துகொண்டுள்ள அலுவலர்கள், தகுதிகாண் காலப்பகுதியினுள் குறித்த அரச கரும மொழியில் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(iv) இந்த நியமனம், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் நடைமுறை விதிகள், அரச நிதிப் பிரமாணங்கள் மற்றும் திணைக்களத்தின் ஏனைய ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகளுக்கும் உட்பட்டு இருக்கும்.

4. **வயதெல்லை.**- விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 21 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவுத்திட்டம்.**- 2016.02.25 ஆந் திகதியில் 03/ 2016 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் 1 ஆம் அட்டவணையின் பிரகாரம் இந்தப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம், ரூபா 47,615 - 10 x 1,135 - 8 x 1,630 - 17 x 2,170 - 110 - 895 (S1-1-2016) ஆகும். குறித்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு ஏற்றவாறு, அதன் II ஆம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு உங்களுக்குச் சம்பளம் வழங்கப்படும். (உதாரணம் 2017.01.01 ஆந் திகதி தொடக்கம் 2017.12.31 ஆந் திகதி வரையிலும் ரூபா 32,807 அடிப்படைச் சம்பளம் மற்றும் ரூபா 4,715 சீராக்கல் படி).

6. கட்டமைப்பில் அமைந்த நேர்முகப் பரீட்சை, கீழே குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிகள் வழங்கும் அடிப்படையில் நடைபெறும் :

| | விடயம் | | ஆகக்கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| 1 | **மேலதிக கல்வித் தகைமைகள்** | | **20** |
| | அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக்கொண்டுள்ள நீதித்துறைப் பட்டம்- | | |
| | * முதலாம் வகுப்பில் சித்தி பெற்றிருத்தல் | 20 | |
| | * இரண்டாம் வகுப்பில் மேல் பிரிவில் சித்தி பெற்றிருத்தல் | 15 | |
| | * இரண்டாம் வகுப்பில் கீழ்ப்பிரிவில் சித்தி பெற்றிருத்தல் | 10 | |
| | சட்டக் கல்லூரியில் இறுதி ஆண்டுப் பரீட்சையில் முதலாம் வகுப்பில் சித்தி பெற்றிருத்தல் | 15 | |
| | சட்டக் கல்லூரியில் இறுதி ஆண்டுப் பரீட்சையில் இரண்டாம் வகுப்பில் சித்தி பெற்றிருத்தல் | 10 | |
| | **குறிப்பு**.-இறுதிப் பரீட்சையில் சிறப்புச் சித்தி பெற்றிருந்தால் மட்டுமே 10 புள்ளிகள் வழங்கப்படுதல் வேண்டும். (ஆகக்கூடிய தகைமைக்கு மாத்திரமே புள்ளிகள் வழங்கப் படும். பட்டம் அல்லது சட்டக் கல்லூரித் தகைமைகளில் ஒன்றுக்கு மட்டும்.) | | |
| 2 | **மேலதிகத் தொழில்சார் தகைமைகள்** | | **15** |
| | சட்டத்துறையில் கலாநிதிப் பட்டம் பெற்றிருத்தல் | 15 | |
| | சட்டத்துறையில் ஒரு வருட காலப்பகுதிக்குக் குறையாத பட்டப் படிப்பு | 10 | |
| | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் வழங்கப்படுகின்ற குறித்த துறை சார்ந்த ஒரு வருட காலப்பகுதிக்குக் குறையாத பட்டப்பின் படிப்பு டிப்ளோமா அல்லது சட்டப் பின்படிப்பு டிப்ளோமா பெற்றிருத்தல் | | |
| | (ஒரு டிப்ளோமாவுக்கு 5 புள்ளிகள் வீதம் - ஆகக்கூடிய புள்ளிகள் 15) | | |

| | *விடயம்* | | *ஆகக்கூடிய புள்ளிகள்* |
|---|---|---|---|
| | *அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் வழங்கப்படுகின்ற குறித்த துறை சார்ந்த 6 மாத காலப்பகுதிக்குக் குறையாத கற்கை நெறியில் சான்றிதழ் பெற்றிருத்தல்.*<br><br>*(ஒரு டிப்ளோமாவுக்கு 3 புள்ளிகள் வீதம் - ஆகக்கூடிய புள்ளிகள் 15)*<br><br>*அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் வழங்கப்படுகின்ற குறித்த துறை சார்ந்த 3 மாத காலப்பகுதிக்குக் குறையாத கற்கை நெறியில் சான்றிதழ் பெற்றிருத்தல்.*<br><br>*(ஒரு கற்கைநெறிக்கு 3 புள்ளிகள் வீதம் - ஆகக்கூடிய புள்ளிகள் 10)* | | |
| *3* | **மேலதிக அனுபவம்**<br><br>*அரச சேவையில் அல்லது தனியார் துறையில் சட்டத்தரணி யாகச் சேவை செய்துள்ள அனுபவம் -*<br><br>*6 மாதங்களுக்குக்கு மேலாகவும் ஒரு வருடத்திற்குக் குறை வாகவும் - புள்ளிகள் 2*<br><br>*ஒரு வருடத்துக்குப் புள்ளிகள் 5 விகிதம் ஆகக்கூடிய புள்ளிகள் 30*<br>*(தேவைப்பட்ட அடிப்படை அனுபவத்தைப் பெற்றுக்கொள் வதற்குச் சட்டத்தரணியாகச் சேவை செய்த 3 வருட காலப்பகுதியைத் தவிர்த்து)*<br><br>*(20 வருடங்களுக்குக் குறையாத சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ள சட்டத்தரணி அல்லது சனாதிபதி சட்டத்தரணி அல்லது நீதிபதி ஆகியவர்களில் ஒருவரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ் மூலமாக மேலதிகமாக அனுபவம் உறுதிப்படுத் தப்படல் வேண்டும்.)* | | **30** |
| *4* | **ஆங்கில மொழியில் பெற்றுள்ள தேர்ச்சி**<br><br>*ஆங்கில மொழி மூலமாகக் கற்கையை மேற்கொண்டு பெற்றுக்கொண்ட பட்டப் பின்படிப்பு/ பட்டம்/ சட்டத்துறைப் பட்டப் பின்படிப்பு/ சட்டத்துறைப் பட்டம்*<br><br>*(குறித்த பரீட்சையில் அனைத்து வினாக்களுக்கும் ஆங்கில மொழியில் விடைகள் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.)*<br><br>*பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட ஆங்கில மொழி மூலமான சான்றிதழ் கற்கைநெறிக்கு*<br><br>*- 6 மாதங்கள்/ 720 மணித்தியாலங்கள்*<br>*- 3 மாதங்கள்/ 360 மணித்தியாலங்கள்*<br><br>*(ஆகக்கூடிய தகைமைக்கு மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும்.)* | *15*<br><br>*10*<br><br>*07*<br>*05* | **15** |
| *5* | **தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அறிவு**<br><br>*பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக் கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் முக்கிய பாடமாக தகவல் தொழில்நுட்பத்தைக் கற்றுப் பெற்றுக்கொண்ட பட்டத்திற்கு* | *15* | **15** |

| | விடயம் | | ஆகக்கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| | அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் ஒரு வருட காலப்பகுதிக்குக் குறையாத அல்லது 1,500 மணித்தியாலங்கள் கற்கையைப் பூர்த்திசெய்த தகவல் தொழில்நுட்பக் கற்கைநெறிக்கு<br>அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் தகவல் தொழில்நுட்பச் சான்றிதழ் கற்கைநெறிக்கு<br>- 6 மாதங்கள்/ 720 மணித்தியாலங்கள்<br>- 3 மாதங்கள்/ 360 மணித்தியாலங்கள்<br>(ஆகக்கூடிய தகைமைக்கு மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும்.) | 10<br><br>07<br>05 | |
| 6 | **நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்திய திறமை** | | **05** |
| | **மொத்தப் புள்ளிகள்** | | **100** |

7. விண்ணப்பதாரரின் ஆளடையாளம்.- அனைத்து அம்சங்களிலும் விண்ணப்பப்பத்திரங்களைச் சரியாகப் பூர்த்திசெய்து சமர்ப்பித்திருக்கும் விண்ணப்பதாரர்கள் மாத்திரம் கட்டமைப்பில் அமைந்த நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

நேர்முகப் பரீட்சையில் அனைத்துச் சான்றிதழ்களின் மூலப்பிரதிகள் மற்றும் உரியவாறு சான்றுபடுத்தப்பட்ட பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின்போது தங்களது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்குப் பின்வருகின்ற ஆவணங்களில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :

(1) ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்டுள்ள தேசிய ஆள் அடையாள அட்டை ;

(2) செல்லுபடியான கடவுச்சீட்டு.

8. விண்ணப்பப்பத்திரங்கள் சமர்ப்பித்தல் :

(அ) விண்ணப்பப்பத்திரங்கள் 2017.03.10 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கீழே தரப்பட்டுள்ள முகவரிக்குக் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும். குறித்த திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

காணி ஆணையாளர் நாயகம்,
காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்ல.

(ஆ) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரி விண்ணப்பப்படிவம் ஒன்று இந்த அறிவித்தலின் முடிவில் காட்டப்பட்டுள்ளது. விண்ணப்பப்படிவங்கள் முதலாவது பக்கத்தில் 1-8 வரையான பிரிவுகளும், இரண்டாவது பக்கத்தில் 9-13 வரையான பிரிவுகளும், மூன்றாவது பக்கத்தில் 14-15.2 வரையான பிரிவுகளும் உள்ளடங்கலாக A4 அளவுத்தாளில் தயாரித்து, விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய விண்ணப்பப்படிவங்களைத் தங்களுடைய சொந்தக் கையெழுத்திலேயே பூர்த்திசெய்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவம் அடங்கிய தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்தில் சட்ட அலுவலர் பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பதாரரின் கையொப்பம், அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபரினால்/ சமாதான நீதவான் ஒருவரினால்/ சத்தியப்பிரமாண ஆணையாளரினால்/ சட்டத்தரணியால்/ பிரசித்த நொத்தாரிசினால்/ முப்படைகளின் ஆணைபெற்ற அலுவலர் அல்லது மாதம் ஒன்றுக்கு 47,615 ரூபா இணைந்த சம்பளம் பெறுகின்ற அரசாங்கத்தில் நிரந்தரப் பதவி வகிக்கின்ற அலுவலர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

(உ) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள அலுவலர்கள், தங்களுடைய விண்ணப்பப்படிவங்களைத் தாங்கள் சேவை செய்கின்ற திணைக்களத்தின் திணைக்களத் தலைவரூடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஊ) இதனுடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைவாக இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவங்கள் காணாமல் போதல் அல்லது தாமதமாகுதல் தொடர்பான எவ்விதமான முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. பிழையான தகவல்களை வழங்குதல்.- நீங்கள் அனுப்பி உள்ள விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு தகவல் பொய்யானவை அல்லது பிழையானவை எனச் சேவையில் இணைத்துக்கொள்வதற்கு முன் கண்டுபிடிக்கப்பட்டால் உங்களுடைய விண்ணப்பதாரர் தகைமை இரத்துச் செய்யப்படும். பதவியில் இணைக்கப்பட்ட பின்பு கண்டுபிடிக்கப்பட்டால் அதற்குரிய வழிமுறைகளுக்கு அமைவாகச் சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

10. வெற்றிடத்தை நிரப்புதல் அல்லது நிரப்பாமல் விடுதல் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்குரிய உரிமையாகும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

(கலாநிதி) ஐ. எச். கே. மகாநாம,
செயலாளர்.

காணி அமைச்சு,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்தில் வெற்றிடமாக உள்ள சட்ட அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்**

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

1. முதலெழுத்துக்களுடன் பெயர் : (திரு./ திருமதி/ செல்வி) :
தமிழில் :----.
ஆங்கிலத்தில் :----.

1.1 முதலெழுத்துக்கள் குறிக்கின்ற பெயர்கள் (தெளிவான எழுத்துக்களில், தமிழில்) :----.
ஆங்கிலத்தில் :----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

3. பிறந்த திகதி :

ஆண்டு :----. மாதம் :----. திகதி :----.

3.1 விண்ணப்பப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தில் வயது :

வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

4. பால் : பெண்/ ஆண்
(ஆண்-M, பெண்-F)

(உரிய எழுத்தைக் கூட்டினுள் எழுதுக.)

5. விவாகமானவரா/ விவாகமாகாதவரா ? :----.

6. நிரந்தர முகவரி (தெளிவான எழுத்துக்களில்) :----.

7. தொலைபேசி இலக்கம் :

நிலையான :----. கையடக்க :----.

8. சட்டத்துறைப் பட்டம் பற்றிய விபரங்கள் :

(i) பல்கலைக்கழகம் :----.
(ii) பட்டம் வழங்கிய திகதி :----.

9. உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட திகதி :----.

10. சட்டத்தரணியாகச் செயலூக்க அனுபவம் (வருடங்களின் எண்ணிக்கை) :----.

11. விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற அறிவித்தலின் 6 ஆம் பந்தியின் பிரகாரம் தகைமைகள் :

(i) ..........................................................................................................................
(ii) ..........................................................................................................................
(iii) ..........................................................................................................................
(iv) ..........................................................................................................................
(v) ..........................................................................................................................

12. நீங்கள் எப்போதாவது ஏதேனும் குற்றத்திற்கு நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீர்களா ? :

ஆம் :----. இல்லை :----.

12.1 ஆம் எனில் விபரங்களைக் குறிப்பிடுங்கள் :----.

13. விண்ணப்பதாரரின் உறுதியுரை :

(அ) இந்த விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள், நான் அறிந்த வகையில் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் உறுதிசெய்கின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்டுள்ள இந்த உறுதி உரை, பொய்யானவையெனக் கண்டுபிடிக்கப்பட்டால் சேவையில் இணைத்துக்கொள்வதற்கு நான் தகுதி அற்றவனாக ஆக்கப்படுவதுடன், நியமனம் கிடைத்த பின்பு அவ்வாறு எண்பிக்கப்பட்டால் சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்படுவதற்கு ஆளாவேன் என அறிவேன்.

(இ) இங்கே தரப்பட்டுள்ள எந்தவொரு தகவலையும் பின்னர் மாற்றிக்கொள்ள மாட்டேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

14. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ................................ எனும் பெயரையுடைய நபர், எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், இவர்........................... ஆந் திகதி என் முன்னிலையில், மேலே 13 ஆம் பந்தியில் கையொப்பமிட்டார் என்றும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

----,
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்.

அத்தாட்சிப்படுத்துபவரின் பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.
(பதவி முத்திரையிட்டு அத்தாட்சிப்படுத்தவும்.)

15. திணைக்களத் தலைவரின் விதப்புரை (அரச/ மாகாண அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரம்) :

15.1 அலுவலரின் பிரத்தியேக கோவையின் பிரகாரம், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்கின்ற இறுதித் தினத்திற்கு முந்திய 5 வருட காலப்பகுதியினுள், இவருடைய சேவை, நடத்தை மற்றும் வரவு ஆகியவை திருப்திகரமாக/ அதிருப்திகரமாக இருந்தன. அனைத்துச் சம்பள ஏற்றங்களையும் உழைத்துப் பெற்றுள்ளார்/பெறவில்லை. எந்த ஒரு ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் உட்பட்டிருக்கவில்லை/ உட்பட்டுள்ளார்.

15.2 விண்ணம் செய்யப்படுகின்ற பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால், தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது. விண்ணப்பத்தை விதப்புரை செய்கின்றேன்/ விதப்புரை செய்யவில்லை.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
மற்றும் பதவி முத்திரை.

திகதி :----.

2-782

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை நிர்வாக சேவையில் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2015 (2016) II ஆம் கட்டம்

இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இல் உள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்காகத் தகுதிபெற்ற இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

1. இவ்வறிவித்தலில் 'செயலாளர்' என்ற பதம் "அரசாங்க நிருவாக அமைச்சின் விடயப் பொறுப்பு செயலாளர்" எனப் பொருள்படும். "சேவை" என்ற பதம் வேறு எந்தவிதத்திலும் விசேடமாகக் குறிப்பிடாத சந்தர்ப்பத்தில் "இலங்கை நிருவாக சேவை" எனப் பொருள்படும்.

2. இப்பரீட்சை மூலம் இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

(அ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2017, மாச்சு 20 ஆந் திகதியாகும்.

**குறிப்பு**.- விண்ணப்பப்படிவம் அல்லது அதனுடன் தொடர்பான கடிதம் தபாலின்போது தொலைந்தது அல்லது தாமதமடைந்ததாகக் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் பற்றி கவனத்திற்கொள்ளப்படுவதில்லை. இறுதித் திகதிவரை விண்ணப்பங்களைத் தாமதப்படுத்தலினால் ஏற்படும் நட்டங்களை விண்ணப்பதாரியே பொறுப்பேற்றுக்கொள்ளல் வேண்டும்.

எழுத்துப் பரீட்சை.- இப்பரீட்சை பின்வரும் ஐந்து (5) வினாப்பத்திரங்களைக் கொண்டமைந்திருக்கும் :

(i) பொது விவேகம் ;
(ii) இலங்கையின் சமூக, பொருளாதார அரசியல் பின்னணி மற்றும் அதன் போக்குகள் ;
(iii) சர்வதேச போக்குகள் ;
(iv) முகாமைத்துவ விவேகம் ;
(v) ஆக்கபூர்வ, பகுப்பாய்வு மற்றும் தொடர்பாடல் திறன்கள்

பரீட்சைத் திகதி.- இப்பரீட்சை 2017 ஆம் ஆண்டு மே மாதம் கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை ஆகிய நகரங்களில் நடாத்தப்படும். இப்பரீட்சையை ஒத்திவைக்கவோ அல்லது இரத்துச் செய்வதற்கோ அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஆலோசனைகளுக்கமைய செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

நேர்முகப் பரீட்சை.- எழுத்துப் பரீட்சையில் எல்லா வினாத்தாள்களுக்கும் தோற்றிய பரீட்சார்த்திகளுக்கிடையில் போதுமானதென அராச்ஙக சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் ஆகக்கூடிய மொத்தப் புள்ளிகளைப் பெறுகின்ற பரீட்சார்த்திகளுக்காக பொது மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும் திகதியை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஆலோசனைக்கமைய செயலாளர் தீர்மானிப்பார்.

3. நியமிக்கப்படவுள்ள ஆட்களின் எண்ணிக்கை 175 ஆகும். வெற்றிட எண்ணிக்கைக்கு மேல், இறுதி வெற்றிடம் அல்லது இறுதியான சில வெற்றிடங்களுக்காக சமமான புள்ளிகளைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகள் காணப்படும் நிலைமைகளில் அத்தகைய வெற்றிடங்களை நிரப்புவதற்கான தீர்மானமானது நடைமுறை விதிகளின் பிரிவு 80 இற்கமைய அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் மூலம் எடுக்கப்படல் வேண்டும். நியமனம் நடைமுறைக்கு வரும் திகதியானது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்பின் பேரில் நிர்ணயிக்கப்படல் வேண்டும்.

4. **சேவை நிபந்தனைகள் :**

4.1 அரசாங்க சேவை நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும், இலங்கை நிர்வாக சேவைப் பிரமாணக் குறிப்பில் (இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2013.12.23 ஆந் திகதிய இலக்கம் 1842/ 2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட) விதிக்கப்பட்டுள்ள விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும், அப்பிரமாணக் குறிப்புக்கு மேற்கொள்ளப்பட்டுள்ளதும், வருங்காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ளதுமான திருத்தங்களுக்கும், தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் மற்றும் நிதிப் பிரமாணங்கள் மற்றும் 2009.02.20 ஆந் திகதிய 1589/ 30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் என்பவற்றுக்கமைய தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்தி ஒருவர் சேவையின் தரம் III இற்கு நியமனம் செய்யப்படுவர்.

4.2 இப்பதவி நிரந்தரமானது. உங்களுக்கு உரித்தான ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசினால் பின்னர் எடுக்கும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்பட வேண்டும்.

4.3 நியமனமானது மூன்று வருட தகுதிகாண் காலப்பகுதி ஒன்றிற்கு உட்பட்டதாகும். சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்த திகதியிலிருந்து 3 வருடத்திற்குள் முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்தப்படல் வேண்டும்.

4.4 அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 01/ 2014 மற்றும் தொடர்ந்துவரும் சுற்றறிக்கைகள் ஆகியவற்றுக்கிணங்க சேவையில் இணைந்து 5 வருடத்திற்குள் குறித்துரைக்கப்பட்ட அரச கரும மொழித் தேர்ச்சியானது பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

4.5 தனக்கு வழங்கப்பட்ட பதவியின் கடமையை உரிய திகதியில் பொறுப்பேற்கத் தவறுகின்ற மற்றும்/ அல்லது நியமனம் செய்யப்பட்ட ஒரு பதவியில் அல்லது நியமனம் செய்யப்பட்ட ஒரு பிரதேசத்தில் கடமையைப் பொறுப்பேற்க மறுக்கின்ற அல்லது நழுவுகின்ற பரீட்சார்த்திகளின் நியமனங்களை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி இரத்துச்செய்ய இடமுண்டு.

5. **மாதாந்த சம்பள அளவுத்திட்டம்**.- 03/ 2016 ஆம் இலக்க 2016.02.25 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் அட்டவணை I இன்படி இப்பதவிக்கு உரித்துடைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 47,615 - 10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2,170 - ரூபா 1,10,895 (எஸ். எல்.-1-2016) ஆகும். இச்சம்பளம் குறித்த சுற்றறிக்கையின் அட்டவணை II இன் சட்டதிட்டங்களின் படியே வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக அரச அலுவலர்களுக்கு அரசினால் காலத்துக்குக்காலம் வழங்கப்படும் வேறு படிகளும் உங்களுக்கு உரித்தாகும்.

6. **ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகைமைகள் :**

(அ) (i) இலங்கைப் பிரசையொருவராக இருத்தல் ;
(ii) சிறந்த நடத்தையுடையவராக இருத்தல் ;
(iii) நாட்டின் எந்தவொரு பகுதியிலும் பணிபுரிவதற்குப் போதிய உடல் மற்றும் உளத் தகைமைகளைக் கொண்டிருத்தல்.

(ஆ) கல்வித் தகைமைகள்.- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டத்தினை வழங்கும் நிறுவனமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிறுவனமொன்றினால் வழங்கப்படும் பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல்.

**குறிப்பு**.- பட்டம் நடைமுறைக்கு வரும் திகதியானது தகைமைகளைப் பூர்த்திசெய்ய வேண்டிய இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னராக இருத்தல் வேண்டும்.

(இ) வயது.- தகைமைகளைப் பூர்த்திசெய்ய வேண்டிய இறுதித் திகதியன்று இருபத்திரண்டு (22) வயதிற்கு குறையாதிருப்பதோடு இருபத்தெட்டு (28) வயதினை அடையாதவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) தகைமைகள் பற்றிய வரையறைகள் :

(i) திறந்த போட்டிப் பரீட்சையில் (2) இரு தடவைகளுக்கு மேல் தோற்றுவதற்கு எந்தவொரு விண்ணப்பதாரிக்கும் அனுமதியளிக்கப்பட மாட்டாது. (முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்பின்கீழ் இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பரீட்சைகளில் அமர்வுகளின் எண்ணிக்கையானது கருத்திற்கொள்ளப்படுவதில்லை.)

(ii) இப்பரீட்சைக்காக விண்ணப்பம் செய்வதற்குத் தேவைப்படும் தகைமைகள் அனைத்தும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ எல்லா ளுவகையிலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(iii) யாதேனுமோர் மதப் போதகராக பதவி வகிக்கும் எந்தவொரு நபருக்கும் இப்போட்டிப் பரீட்சைக்காக விண்ணப்பிப்பதற்கு அல்லது தோற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

7. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் 1,000 ரூபாவாகும். இது விண்ணப்பம் முடிவுத் திகதிக்கு முன்னர் எந்தவொரு அஞ்சல் அலுவலகத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைப்பதற்காக செலுத்த வேண்டும். அஞ்சல் அலுவலகத்தில் இருந்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய கூட்டில் ஒட்டுதல் வெண்டும். இக்கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது என்பதோடு எந்தச் சந்தர்ப்பத்திலும் வேறு எந்த பரீட்சைக் கட்டணத்துக்கும் மாற்றப்பட மாட்டாது. பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். காசுக் கட்டளைகளோ முத்திரைகளோ பரீட்சைக் கட்டணமாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

8. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவ உருவில் அமைய வேண்டுமென்பதுடன் அது 8 1/2" x 12" (A4) அளவுடைய ஒரு தாளின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட வேண்டும். அவ்வாறு தயாரித்த விண்ணப்பம் பரீட்சார்த்தியின் கையெழுத்திலேயே பூர்த்திசெய்யப்படுதல் வேண்டும். இதற்காக கணினி மூலம் அல்லது தட்டச்சு இயந்திரம் மூலம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தைப் பாவிக்க முடியும். 1.0 தொடக்கம் 2.12 வரையிலான கூடுகள் விண்ணப்பத்தில் முதலாம் பக்கத்திலும் 3.0 தொடக்கம் 7.0 வரையிலான கூடுகள் அதன் மறுபக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் தமது விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பதை விசேடமாகக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமையாத விண்ணப்பங்களும் முழுமை பெறாதவாறு தகவல்களைக் குறிப்பிட்டுள்ள விண்ணப்பங்களும் அறிவிப்புகள் ஏதுமின்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.) பூர்த்திசெய்யப்படுகின்ற விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதென்பதற்கு விண்ணப்பதாரியே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம்.

(ஆ) பரீட்சார்த்தி எம்மொழியில் பரீட்சைக்குத் தோற்ற விரும்புகிறாரோ அம்மொழி மூலத்தில் விண்ணப்பம் பூர்த்திசெய்தல் வேண்டும்.

(இ) பரீட்சைக்காக பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" என்று முகவரியிடப்பட்டு 2017, மாச்சு 20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னராக பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் வைத்து அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை நிர்வாக சேவை தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2015 (2016) II ஆம் கட்டம்" என்று தெளிவாக எழுதப்படல் வேண்டும். அத்திகதிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பம் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பப்படிவத்தை தயாரிக்கும்போது பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் மொழி விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் எழுதப்படல் அத்தியாவசியமாகும்.

(ஈ) விண்ணப்பப்பத்திரத்தில் உள்ள பரீட்சார்த்தியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, படைதாங்கு சேவையின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது ரூபா 2,40,360 இற்கு மேற்பட்ட ஆண்டுச் சம்பளத்தையுடைய அரச சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் பதவி நிலை உத்தியோகத்தர் ஆகிய ஒருவரால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

(உ) எல்லா வகையிலும் நிறைவுபெற்றிராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம். விண்ணப்பம் அஞ்சலில் தொலைந்துவிட்டமை அல்லது தாமதித்தமை பற்றிய முறைப்பாடுகள் எதுவும் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

(ஊ) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை தொடர்பாக அறிவிக்கப்பட மாட்டாது. இலங்கை பரீட்சைகள் திணைக்களம் விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டைகளை அனுப்பியதும், அது தொடர்பாக பத்திரிகைகளில் அறிவிப்பொன்றை வெளியிடும். அறிவிப்பு வெளியாகி 2 நாட்கள் அல்லது 3 நாட்கள் முடிவடைந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவிப்பில்

குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக பரீட்சைத் திணைக்களத்திடம் அறிவித்தல் வேண்டும். பரீட்சைகள் திணைக்களத்துக்கு அறிவிக்கும்போது பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பன குறிப்பிடப்படல் வேண்டும். கொழும்புக்கு வெளியேயுள்ள விண்ணப்பதாரிகளாயின் அனுமதி அட்டையின் பிரதி ஒன்றை அனுப்புவதற்காக ஒரு தொலைநகல் (பெக்ஸ்) இலக்கத்தைக் குறிப்பிட்டு கூறப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தொலைநகல் இலக்கத்திற்கு கோரிக்கைக் கடிதம் ஒன்றை அனுப்புதல் கூடுதல் பயனுடையதாகும். மேலும், பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்படும் ஏதேனும் தகவல்களினை மெய்ப்பிப்பதற்கு விண்ணப்பப்படிவம் மற்றும் பரீட்சைக் கட்டண பற்றுச்சீட்டு என்பவற்றின் பிரதி மற்றும் கடிதம் பதிவுசெய்த பற்றுச்சீட்டு ஆகியவற்றினைத் தயாராக வைத்துக்கொள்தல் பயனுடையதாகும்.

9. **பரீட்சைக்கு அனுமதியளித்தல்**.- (அ) சகல விதத்திலும் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பங்களை அனுப்பிய யாவருக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை அனுப்புவார். தனது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்.

(ஆ) பரீட்சார்த்தி தனக்குக் குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் முற்கூட்டியே தனது கையொப்பத்தினை அத்தாட்சிப்படுத்த வேண்டியதுடன் பரீட்சைக்காக அவர் சமுகமளிக்கும் முதல் நாளிலேயே அந்த அனுமதி அட்டையை மேற்பார்வையாளரிடம் கையளித்தல் வேண்டும். பரீட்சார்த்திகள் யாவரும் கடைப்பிடிக்க வேண்டிய விதிகளின் தொகுதியொன்று இவ்வர்த்தமானி அறிவித்தலின் ஆரம்பத்தில் தரப்பட்டுள்ளது. பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளரால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். இந்த விதிகளை மீறும் பரீட்சார்த்திகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு உள்ளாவதற்கு நேரிடும்.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டமை அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எல்லாத் தகுதிகளையும் உடையவர் என்பதை ஏற்றுக்கொள்ளும் ஒரு சாதனமாக கொள்ளவியலாது.

10. **பரீட்சார்த்தியின் ஆள் அடையாளம்**.- பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தில் தான் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். இதற்காகப் பின்வரும் ஆவணங்களில் யாதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு.

11. **பொய்யான தகவல்கள் வழங்குதலுக்கான தண்டனை**.- பரீட்சார்த்தி ஒருவர் தகுதியற்றவர் எனக் கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சையின் பொழுதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எக்கட்டத்திலும் அவரின் பரீட்சார்த்த உரிமை இரத்துச் செய்யப்படலாம். பரீட்சார்த்தி ஒருவர் அளித்த விபரங்களில் எவையேனும் அவரின் அறிவுக்கு எட்டிய அளவில் பொய்யானவையெனக் காணப்படின் அல்லது அவர் ஏதேனுமொரு முக்கியமான விடயத்தை வேண்டுமென்று மறைத்திருந்தால் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

12. இவ்வொழுங்கு விதிகளால் ஏற்பாடு செய்யப்படாத எவையேனும் விடயங்கள் தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்துரைகளுக்கு அமைவாக செயலாளர் தீர்மானிக்கின்றபடி நடவடிக்கை எடுக்கப்படும்.

13. **பரீட்சைத் திட்டம் மற்றும் பரீட்சை மொழி மூலம்** :-

(அ) பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடத்தப்படும்.

(ஆ) பரீட்சார்த்தி தகைமைபெற்ற பல்கலைக்கழக பட்டத்தை எம்மொழி மூலம் எழுதி சித்தியடைந்தாரோ அம்மொழி மூலம் அல்லது அரச கரும மொழி ஒன்றின் மூலம் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

(இ) பரீட்சார்த்தியொருவர் தகைமைபெற்ற பல்கலைக்கழக பட்டத்தில் பாடங்களை இரண்டு மொழிகளிலோ அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளின் மூலமாகவோ சித்தியடைந்திருப்பின், அந்தப் பல்கலைக்கழக பட்டத்தில் அவர் சித்தியடைந்த பாடங்களில் கூடிய தொகைக்கு விடையெழுதிய மொழி மூலமாகவோ அல்லது அரச கரும மொழியொன்றின் மூலமாகவோ பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

(ஈ) பிரதான பாடத்தை ஒரு மொழியிலும் துணைப் பாடத்தை இன்னுமொரு மொழியிலும் எழுதிச் சித்தியடைந்திருக்கும் சிறப்புப் பட்டம் பெற்ற பரீட்சார்த்தி ஒருவர், அவர் பிரதான பாடத்திற்குத் தோற்றிய மொழியில் அல்லது அரச கரும மொழியொன்றின் மூலம் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

**குறிப்பு :**

(i) மேற்போந்த (ஆ), (இ) என்பவற்றில் பிரயோகிக்கப்பட்ட "தகைமைபெற்ற பல்கலைக்கழக பட்டம்" எனும் சொற்றொடர் 6 (ஆ) பந்தியில் குறிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டங்களின் தகைமையைக் குறிக்கும்.
(ii) பரீட்சார்த்தி பரீட்சையில் எல்லா வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியில் மட்டும் விடை எழுத வேண்டும்.
(iii) பரீட்சார்த்தியொருவர் தனது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை மொழியை மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

*14.* **ஆட்சேர்ப்பு முறை :**

*14.1* *எழுத்துமூலப் பரீட்சை.-* கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களை உள்ளடக்கிய ஐந்து (5) வினாப்பத்திரங்களைக் கொண்ட எழுத்துப் பரீட்சை ஒன்று நடத்தப்படும். பாடங்கள் மற்றும் ஒவ்வொரு பாடத்திலும் சித்தியடைவதற்கு பெறவேண்டிய குறைந்தபட்ச புள்ளிகள் என்பன கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :

| *பாடம்* | *புள்ளிகள்* | *சித்தியடைவதற்குப் பெறவேண்டிய குறைந்தபட்ச புள்ளிகள்* |
|---|---|---|
| 1. பொது விவேகம் | 100 | 50 |
| 2. இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் பின்னணி மற்றும் அதன் போக்குகள் | 100 | 50 |
| 3. சர்வதேச போக்குகள் | 100 | 50 |
| 4. முகாமைத்துவ விவேகம் | 100 | 50 |
| 5. ஆக்கபூர்வ பகுப்பாய்வு மற்றும் தொடர்பாடல் திறன்கள் | 100 | 50 |

பரீட்சார்த்திகள் எல்லா வினாத்தாள்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

*14.2* ***பொது மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை.-*** நேர்முகப் பரீட்சையானது இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது. அதாவது, பொது நேர்முகப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை.

*(அ) பொது நேர்முகப் பரீட்சை :*

(i) மேற்படி இலக்கம் 6 இல் குறிப்பிடப்பட்ட ஆட்சேர்ப்புக்கான தகைமைகளைப் பரீட்சார்த்தி பூர்த்திசெய்துள்ளாரா என்றும் அத்தகைய தகைமைகள் அதில் காட்டப்பட்ட குறிப்புரைகளுக்குள் அமைகின்றனவா என்றும் சரி பார்ப்பதற்கு பொது நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

(ii) பொது நேர்முகப் பரீட்சைச் சபையானது அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும்.

*(ஆ) கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை :*

(i) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையொன்றின் மூலம் பரீட்சார்த்திகளின் முகாமைத்துவ ஆற்றல், தலைமைத்துவப் பண்புகள், தொடர்பாடல் திறன்கள் மற்றும் ஆளுமை என்பனவற்றை அளவிடுவதற்காக கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்படும். இங்கு பெற்றுக்கொள்ள முடியுமான உச்சப் புள்ளிகள் இருபத்தைந்து (25) ஆகும்.

| *விடயத் தலைப்பு* | *உச்சப் புள்ளி* |
|---|---|
| 1. முகாமைத்துவத் திறன் | 10 |
| 2. தலைமைத்துவப் பண்பு | 05 |
| 3. தொடர்பாடல் திறமை | 05 |
| 4. ஆளுமை | 05 |
| மொத்தம் | 25 |

(ii) ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தபட்சம் நூற்றுக்கு ஐம்பது (50%) புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகளிலிருந்து சகல பாடங்களிலும் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணபதாரிகள் பொது நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமை பெறுவர். தகுதிபெற்ற பரீட்சார்த்திகளில் எதிர்பார்க்கப்பட்ட வெற்றிட எண்ணிக்கைக்கு இணங்க ஏற்படுத்தப்படவுள்ள மொத்த ஆட்சேர்ப்பு எண்ணிக்கையாக அமையும் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையானோர் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட வெற்றிட எண்ணிக்கையின் 25% ஆனோர் மட்டும் பொது நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள். தகுதிபெற்ற விண்ணபதாரிகளின் எண்ணிக்கையானது மேலே குறிப்பிடப்பட்ட எண்ணிக்கையினை தொகையிடவில்லையாயின் அவ்வாறு தகுதிபெற்ற பரீட்சார்த்திகளின் அத்தகைய எண்ணிக்கையினர் மட்டும் பொது நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள். தகைமைபெற்ற பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை மேற்படி எண்ணிக்கைக்குச் சமனற்றதாகக் காணப்பட்டால் அவ்வாறான சந்தர்ப்பத்தில் மேற்படி தகைமை பெற்ற பரீட்சார்த்திகள் மாத்திரமே பொது நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

(iii) கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு முன்னர் தகைமைகளைப் பரீட்சிப்பதற்காக பொது நேர்முகப் பரீட்சை நடாத்தப்படுவதோடு இங்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. பொது நேர்முகப் பரீட்சையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளதாக உறுதிப்படுத்தப்பட்ட விண்ணபதாரிகள் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்காக தகைமை பெறுவர். மேற்குறிப்பிடப்பட்ட வகையில் பொது நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட விண்ணபதாரிகளிலிருந்து குறிப்பிட்டதொரு தொகை கட்டமைப்பு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்காக தகைமை பெறாவிடினும் அவ்வாறு தகைமை பெறாதவர்களுக்குப் பதிலாக வேறு விண்ணபதாரிகள் மீண்டும் பொது நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்பட மாட்டார்கள்.

(iv) நிலவும் வெற்றிடங்களுக்கிணங்க நியமிக்கப்பட எதிர்பார்க்கப்படும் பரீட்சார்த்திகளின் எண்ணிகையினரால் எழுத்துப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை என்பவற்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்தப் புள்ளிகளுக்கமைய உச்ச புள்ளிகளைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகளிலிருந்து ஆரம்பித்து திறமை அடிப்படையில் தரம் மூன்றிற்கு (III) நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.

**கவனிக்க வேண்டியது**.- (நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்வதனால் நியமனம் வழங்கப்படுவதற்காக தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளதாக கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

14.3 பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளினதும் பெறுபேறுகள் தனிப்பட்ட வகையில் அறிவிக்க பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தபாலில் அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத்தள முகவரியின் மூலம் வெளியிடப்படும்.

15. **எழுத்துப் பரீட்சைப் பாடத்திட்டம்**.- (1) ***பொது விவேகம்***.- எண் ரீதியான, மொழி ரீதியான மற்றும் உருவ ரீதியான கட்டமைப்புக்கள் மற்றும் இடைத்தொடர்புகள் என்பவற்றுடன் தொடர்புபட்டதாக முன்வைக்கப்படும் சிக்கல்கள் தொடர்பில் பகுப்பாய்வுத் திறன், தர்க்க விவேகம், பொருள்கோடல் திறன் என்பவற்றை ஏனையவற்றுடன் தொடர்புபடுத்தும் ஆற்றல் மற்றும் தீர்மானங்களை மேற்கொள்வது தொடர்பாக பரீட்சார்த்தியிடம் காணப்படும் உளச்சார்பு மட்டத்தினை அளவிடுதல் இங்கு எதிர்பார்க்கப்படுகின்றது. (நேரம் : 1 1/ 2 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள். இவ்வினாத்தாள் பல்தேர்வு வினாக்களைக் கொண்டிருக்கும். சகல வினாக்களுக்கும் விடையளிக்குமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்படுகின்றார்கள்.)

(2) ***இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் பின்னணி மற்றும் அதன் போக்குகள்***.- இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல், கலாசாரம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப நிலைமைகள் தொடர்பான விடய அறிவு அல்லது பரீட்சார்த்திக்கு முன்வைக்கப்படும் நிலைமைகளுடன் ஆக்கபூர்வமாகவம் பகுப்பாய்வுடனும் விமர்சன ரீதியாகவும் சிந்தனை செய்யும் ஆற்றல் முன்னுரிமையினைத் தீர்மானிக்கும் ஆற்றல் மற்றும் உபாயமார்க்க ரீதியாக எதிர்வுகூறும் ஆற்றல் தொடர்பாக பரீட்சார்த்தியின் ஆற்றல்களை அளவிடுதல் இங்கு எதிர்பார்க்கப்படுகிறது. (நேரம் : 3 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள். இவ்வினாப்பத்திரம் பல்தேர்வு வினாக்கள், சுருக்க வினாக்கள், கட்டுரை வினாக்கள் மற்றும் கட்டமைக்கப்பட்ட கட்டுரை வினாக்கள் என்பவற்றைக் கொண்டது. சகல வினாக்களுக்கும் விடையளிக்குமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்படுகின்றார்கள்.)

(3) ***சர்வதேச போக்குகள்.***- சர்வதேச சமூக, பொருளாதார, அரசியல், கலாசார, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிலைமைகள் தொடர்பான விடய ஆய்வு அல்லது பரீட்சார்த்திக்கு முன்வைக்கப்படும் நிலைமைகளுடன் ஆக்கபூர்வமாகவும், பகுப்பாய்வுடனும் விமர்சன ரீதியாகவும் சிந்தனை செய்யும் ஆற்றல் முன்னுரிமையினைத் தீர்மானிக்கும் ஆற்றல் மற்றும் உபாயமார்க்க ரீதியாக எதிர்வுகூறும் ஆற்றல் தொடர்பாக அல்லது பரீட்சார்த்தியின் ஆற்றல்களை அளவிடுதல் இங்கு எதிர்பார்க்கப்படுகின்றது. (நேரம் : 3 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள். இவ்வினாப்பத்திரம் அமைப்புக் கட்டுரை மற்றும் கட்டுரை வினாக்கள் மற்றும் பல்தேர்வு வினாக்கள், சுருக்க வினாக்கள் என்பவற்றைக் கொண்டது. சகல வினாக்களுக்கும் விடையளிக்குமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்படுகின்றார்கள்.)

(4) ***முகாமைத்துவ விவேகம்.***- சிக்கல்களையும் அவற்றிற்கான காரணங்களையும் கண்டறிதல், தீர்மானங்களை மேற்கொள்ளல், ஆளிடைத் தொடர்புகளைப் பேணுதல், தொடர்பாடல் திறன், சுய ஒழுக்கநெறிக் கொள்கைகள், உபாய மார்க்கங்களை வகுத்தல் என்பவற்றில் பரீட்சார்த்தியின் ஆற்றலையும் மற்றும் கருத்துரு மற்றும் புலமை அம்சத்திலுள்ள பிரச்சினைகள் மற்றும் சூழ்நிலைகளின் சூழமைவில் முன்வைக்கப்படும் பிரச்சினைகள் தொடர்பில் பரீட்சார்த்தியின் ஆற்றலையும் அளவிடுவதற்காக இவ்வினாபத்திரம் வடிவமைக்கப்படுகின்றது. (நேரம் : 3 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள். இவ்வினாப்பத்திரம் அமைப்புக் கட்டுரை மற்றும் கட்டுரை வினாக்கள் மற்றும் பல்தேர்வு வினாக்கள், சுருக்க வினாக்கள் என்பவற்றைக் கொண்டது. சகல வினாக்களுக்கும் விடையளிக்குமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்படுகின்றார்கள்.)

(5) ***ஆக்கபூர்வமான பகுப்பாய்வு ரீதியான மற்றும் தொடர்பாடல் திறன்கள்.***- தரப்பட்ட தலைப்புக்கள்/ மையக் கருத்துக்களிலிருந்து பரீட்சார்த்தியினால் தெரிவுசெய்யப்படும் தலைப்பு/ மையக்கருத்து என்பவற்றினூடாக கருத்துக்கள் மற்றும் தகவல்களைப் பகுப்பாய்வு செய்தல், கோப்புப்படுத்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பாக பரீட்சார்த்தியின் தர்க்கிக்கும் ஆற்றல் மற்றும் கற்பனா சக்தி என்பவற்றை அளவிடுவதோடு சிக்கலான பந்தியொன்று, ஆவணமொன்று அல்லது விஞ்ஞாபனமொன்றினை விளங்கிக்கொள்ளல் மற்றும் அதன் கருப்பொருளினை சொந்த வசன நடையில் சுருக்கமாகவும் தெளிவாகவும் மற்றும் சரியான முறையிலும் தெரிவிப்பதற்கான பரீட்சார்த்தியின் ஆற்றலை அளவிடுதல் இங்கு எதிர்பார்க்கப்படுகின்றது. (நேரம் : 3 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள். சகல வினாக்களுக்கும் விடையளிக்குமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்படுகின்றார்கள்.)

16. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலில் மொழிகளுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்பட்டால் சிங்கள மொழிமூல அறிவித்தலே மேலோங்கி இருக்கும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

ஜே. ஜே. ரத்னசிரி,
செயலாளர்,
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு.

பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2017, பெப்புருவரி 03.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**இலங்கை நிர்வாக சேவை தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2015 (2016) II ஆம் கட்டம்**

OPEN COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT TO GRADE III OF THE SRI LANKA ADMINISTRATIVE SERVICE - 2015 (2016) STAGE II

1.0 மொழி மூலம் :
பரீட்சைக்குத் தோற்றும் மொழி ஊடகம் :
சிங்களம் - 2
தமிழ் - 3 ☐
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்.)

1.2 பரீட்சைக்குத் தோற்ற எதிர்பார்க்கும் நகரம் அல்லது நகர இலக்கம் :
கொழும்பு - 1
கம்பஹா - 2
களுத்துறை - 3

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| | |

(குறித்த நகர் மற்றும் நகர இலக்கத்தைக் கூட்டினுள் இடவும். விண்ணப்பித்த நகரை பின்னர் மாற்ற முடியாது.)

2.0 தனிப்பட்ட தகவல்கள் :

2.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.
உதாரணம் : (HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

2.2 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.
உதாரணம் : GUNAWARDHANA, H. M. S. K.

2.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :-----.

2.4 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) (அனுமதி அட்டை இந்த முகவரிக்கு அஞ்சலிலிடப்படும்) :-----.

2.5 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :-----.

2.6 பால் : (ஆண் - 0, பெண் - 1) ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்)

2.7 திருமணமானவரா/ திருமணமாகாதவரா? :-
(திருமணமாகாதவர் -1, திருமணமானவர் - 2) ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்)

2.8 இனத்தொகுதி :
(சிங்களம் -1, தமிழ் - 2, இந்தியத் தமிழ் - 3, முஸ்லிம் - 4, வேறு - 5) :-
☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்)

2.9 தேசிய அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

2.10 பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

2.11 தகைமைகள் பூர்த்திசெய்யப்பட வேண்டிய 2017.03.20 ஆந் திகதியில் வயது :-

வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

2.12 தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

3.0 (i) பட்டம் பெற்ற திகதி :----.
(ii) பல்கலைக்கழகம்/ நிறுவகம் :----.
(iii) பதிவிலக்கம் :----.
(iv) உள்வாரி/ வெளிவாரி :----.
(v) பட்டம் :----.
(vi) பாடங்கள் :----.
(vii) வகுப்பு :-
மேல்/ கீழ் :----.
(viii) பட்டம் வலுப்பெறும் திகதி :----.
(ix) பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றிய மொழி ஊடகம் :----.

4.0 இதற்கு முன்னர் நடாத்தப்பட்ட இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக பரீட்சைக்குத் தோற்றிய வருடங்களைக் குறிப்பிடவும்.

| | பரீட்சை | தோற்றியுள்ளேன்/ தோற்றவில்லை |
|---|---|---|
| 1842/ 2 ஆம் இலக்க 2013, திசெம்பர் மாதம் 23 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட இலங்கை நிர்வாக சேவை பிரமாணக் குறிப்பின்படி (தற்போது வலுவிலிருக்கும்) 2012.07.01 ஆந் திகதிக்குப் பின் தோற்றிய வருடங்கள் | 2013 (2015) திறந்த | |
| | 2014 (2016) திறந்த | |

5.0 பணம் செலுத்திய பற்றுச்சீட்டை கழறாதவாறு ஒட்டிவிடவும் :

| |
|---|
| (விளிம்பிலிருந்து இறுக்கமாக பணப்பற்றுச்சீட்டினை (மூலப்பிரதி) ஒட்டவும். (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியினை வைத்திருக்கவும்.) |

6.0 ***பரீட்சார்த்தியின் சான்றுரை :***

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் உண்மையானவை என்றும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட ............................................ ஆந் திகதிய ........................ ............... ஆம் இலக்க பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளதென்றும் உறுதியுரைக்கின்றேன். மேலும் பரீட்சை விதிகளுக்கு அமைந்தொழுகி நடப்பேன் எனவும், இப்பரீட்சை ஒழுங்குவிதிகளின்படி நான் தகுதியற்றவரெனக் கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சையின் முன்னரோ, பரீட்சையின்போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எனது பரீட்சார்த்தித் தன்மையை இரத்துச்செய்வதற்கு எடுக்கும் முடிவுகளை ஏற்றுக்கொள்வேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் விதி, ஒழுங்குகளுக்கு நான் கீழ்ப்படிவேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

7.0 ***விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :***
(வர்த்தமானி அறிவித்தலின் 8(ஈ) இன் பிரகாரம் இருத்தல் வேண்டும்.)

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற ............................................. (முழுப்பெயர்) என்பவர் எனக்கு நன்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் எனவும், குறித்த பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்றும் அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் ................................ ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

-----,
கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தும்
உத்தியோகத்தரின் கையொப்பம்.

கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்துகின்ற உத்தியோகத்தரின் முழுப்பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :----.
திகதி :-----.
(அலுவலக முத்திரை மூலம் அத்தாட்சிப்படுத்தவும்.)

8.0 *திணைக்களத் தலைவரின் உறுதியுரை :*
(அரச/ மாகாண அரச/ அரச கூட்டுத்தாபனங்களில் சேவையாற்றும் விண்ணப்பதாரிகள் மட்டும்)

இவ்விண்ணப்பத்தினை முன்வைக்கும் திரு./ திருமதி/ செல்வி ............................................. இவ்வமைச்சில்/ திணைக்களத்தில்/ நிறுவனத்தில் ................................ ஆக சேவையாற்றுவதுடன், அவரின் விண்ணப்பப்படிவத்தினை பரிந்துரைத்து சமர்ப்பிக்கின்றேன். இப்பதவிக்காக தெரிவுசெய்யப்படின் இந்நிறுவனத்தின் சேவையில் இருந்து விடுவிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

----,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
திகதி :----.
(உத்தியோகபூர்வ முத்திரையை இடவும்.)

2-752

## இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2015 (2016) II ஆம் கட்டம்

இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இன் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்காக தகைமைபெற்ற விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

1.0 இவ்வறிவித்தலில் உள்ள சொற்பதங்களான-

(அ) "செயலாளர்" என்பதன் மூலமாகக் கருதப்படுவது, அரசாங்க நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் ஆவார்.

(ஆ) "சேவை" என்பதன் மூலமாகக் கருதப்படுவது, இலங்கை நிர்வாக சேவை ஆகும்.

2.0 இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இன் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பானது இப்பரீட்சையின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

***எழுத்துப் பரீட்சை.-*** இப்பரீட்சையானது பின்வரும் நான்கு (4) வினாத்தாள்களைக் கொண்டிருக்கும் :-

(1) பொது விவேகம் ;
(2) இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் பின்னணியும் உலகளாவிய போக்குகளும் ;
(3) அரசாங்க நிர்வாகத்துடன் தொடர்புபட்ட விடய ஆய்வு I (தாபன விதிக்கோவை, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்கள் என்பவை சார்ந்தவை) ;
(4) அரசாங்க நிர்வாகத்துடன் தொடர்புபட்ட விடய ஆய்வு II (ஆக்கபூர்வமான, பகுப்பாய்வு ரீதியான மற்றும் தொடர்பாடல் திறன்கள் என்பவற்றின் மதிப்பீடு சார்ந்தது).

***பரீட்சை நடைபெறும் திகதி.-*** இப்பரீட்சையானது 2017 ஆம் ஆண்டு மே மாதம் கொழும்பு நகரில் மட்டும் நடாத்தப்படும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்குட்பட்டு இப்பரீட்சையினைப் பிற்போடுவதற்கோ இரத்துச் செய்வதற்கோ செயலாளருக்கு உரிமை உண்டு.

***நேர்முகப் பரீட்சை.-*** எழுத்துப் பரீட்சையின் சகல வினாத்தாள்களுக்கும் தோற்றி அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வரையறுக்கப்பட்டவாறு போதுமான உயர் மொத்தப் புள்ளிகளைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகளுக்கு பொது மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையானது நடாத்தப்படும். நேர்முகப் பரீட்சைக்கான திகதியானது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் ஆலோசனைப்படி செயலாளரினால் நிர்ணயிக்கப்படும்.

3.0 நியமிக்கப்படவுள்ள ஆட்களின் எண்ணிக்கை 46 ஆகும். வெற்றிட எண்ணிக்கைக்கு மேல், இறுதி வெற்றிடம் அல்லது இறுதியான சில வெற்றிடங்களுக்காக சமமான புள்ளிகளைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகள் காணப்படும் நிலைமைகளில் அத்தகைய வெற்றிடங்களை நிரப்புவதற்கான தீர்மானமானது நடைமுறை விதிகளின் பிரிவு 80 இற்கமைய அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் மூலம் எடுக்கப்படல் வேண்டும். நியமனம் நடைமுறைக்கு வரும் திகதியானது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்பின் பேரில் நிர்ணயிக்கப்படல் வேண்டும்.

4.0 **சேவை நிபந்தனைகள்** :

4.1 அரசாங்க சேவையில் உள்ள நியமனங்களை நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கு உட்படும் மற்றும் 2013.12.23 ஆந் திகதிய 1842/2 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் பிரமாணக் குறிப்பில் காட்டப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் பிரமாணக் குறிப்பில் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் திருத்தங்கள் அல்லது இதனகத்துப் பின்னர் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்கள், தாபன விதிக்கோவையின் நிதிப்பிரமாணங்கள், 2009.02.20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் என்பவற்றின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்தி ஒருவர் இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்படுவார்.

4.2 இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்/ தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

4.3 நியமனமானது ஒரு வருட வேலை பார்க்கும் காலப்பகுதி ஒன்றிற்கு உட்பட்டதாகும். சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்த

திகதியிலிருந்து 3 வருடத்திற்குள் முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையானது சித்தியெய்தப்படல் வேண்டும்.

4.4 பொது நிர்வாகச் சுற்றறிக்கை 01/ 2014 மற்றும் தொடர்ந்து வரும் சுற்றறிக்கைகள் ஆகியவற்றுக்கிணங்க சேவையில் இணைந்து 5 வருடத்திற்குள் குறித்துரைக்கப்பட்ட அரச கரும மொழித் தேர்ச்சியானது பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

4.5 நியமிக்கப்பட்ட பதவியின் கடமைகளை உரிய திகதியில் பொறுப்பேற்கத் தவறுகின்ற மற்றும்/ அல்லது தான் நியமிக்கப்படும் பிரதேசம் ஒன்றில் சேவையாற்ற மறுக்கின்ற அல்லது தவிர்க்கின்ற ஏதேனும் பரீட்சார்த்தியின் நியமனத்தினை இரத்துச்செய்வதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

5.0 **மாதாந்த சம்பள அளவுத்திட்டம்**.- 03/ 2016 ஆம் இலக்க 2016.02.25 ஆந் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் உப அட்டவணை I இன்படி இப்பதவிக்கு உரித்துடைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 47,615 - 10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2,170 - ரூபா 1,10,895 (எஸ். எல். 1-2016) ஆகும். இச்சம்பளம் குறித்த சுற்றறிக்கையின் உப அட்டவணை II இன் சட்டதிட்டங்களின் படியே வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக அரச அலுவலர்களுக்கு அரசினால் காலத்துக்குக்காலம் வழங்கப்படும் வேறு படிகளும் உங்களுக்கு உரித்தாகும்.

6.0 **ஆட்சேர்ப்பதற்கான தகுதி** :

(அ) (i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(ii) நன்நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும் ;
(iii) சிறந்த ஒழுக்க நடத்தையுடனும் நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்கான தேகாரோக்கியத்துடனும் இருத்தல் வேண்டும்.

(ஆ) ***கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம் :***

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றிலிருந்து பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

அத்துடன்

அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர ஓய்வூதிய உரித்துடைய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 03/ 2016 இல் சம்பளக் குறியீட்டு இலக்கம் எம் என்-2-2016 அல்லது அதற்கு மேற்பட்ட எம் என் சம்பளக் குறியீட்டு இலக்கத்தின் கீழ் சம்பளம் பெறுகின்ற அல்லது எஸ்எல்-1-2016 சம்பளக் குறியீட்டு இலக்கத்தின்கீழ் சம்பளம் பெறுகின்ற சேவையில்/ பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (5) வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள அலுவலராக இருத்தல் ;

அல்லது

(ii) அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர ஓய்வூதிய உரித்துடைய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 03/ 2016 இல் சம்பளக் குறியீட்டு இலக்கம் எம்என்-2-2016 அல்லது அதற்கு மேற்பட்ட எம்என் சம்பளக் குறியீட்டு இலக்கத்தின் கீழ் சம்பளம் பெறுகின்ற அல்லது எஸ்எல்-1-2016 சம்பளக் குறியீட்டு இலக்கத்தின் கீழ் சம்பளம் பெறுகின்ற சேவையில்/ பதவியில் குறைந்தபட்சம் பத்து (10) வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள அலுவலராக இருத்தல்.

**குறிப்பு** :

(1) பட்டம் நடைமுறைக்கு வரும் திகதியானது 2016.07.01 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னராக இருத்தல் வேண்டும் ;
(2) மேற்குறிப்பிடப்பட்ட சேவைக்காலத்தைக் கணிப்பிடும்போது அரசாங்க சேவையில் அத்துடன்/ அல்லது மாகாண அரச சேவையிலுள்ள தொடர்ச்சியான சேவைக்காலத்தின் மொத்தமானது கருத்திற்கொள்ளப்படும்.

(இ) ***வயது மற்றும் பூர்த்திசெய்திருக்க வேண்டிய ஏனைய தகைமைகள் :***

(i) 2016.07.01 ஆந் திகதியன்று வயதெல்லை 53 வருடத்திற்கு மேற்பட்டதாக இருத்தலாகாது ;
(ii) மேலே 6 (ஆ) இல் குறிப்பிடப்பட்ட சேவை/ பதவி ஒன்றில் நிரந்தரப் பதவியினைப் பெற்றிருத்தல் வேண்டும் ;
(iii) உடன் முன்வரும் 5 வருடங்களில் ஏதேனும் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்பட்டிருத்தலாகாது ;
(iv) உடன் முன்வரும் 5 வருங்களில் உரிய சம்பள ஏற்றங்களை குறித்த திகதியில் உழைத்திருத்தல் வேண்டும்.

(ஈ) ***தகைமைகள் பற்றிய வரையறைகள் :***

(i) மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு இரண்டு (2) அமர்வுகளுக்கு மேல் தோற்ற எந்தவோர் பரீட்சார்த்தியும் அனுமதிக்கப்பட மாட்டார். (முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்பின்கீழ் இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பரீட்சைகளில் அமர்வுகளின் எண்ணிக்கையானது கருத்திற்கொள்ளப்படுவதில்லை.)
(ii) இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தேவைப்படுத்தப்படும் தகைமைகள் 2016.07.01 ஆந் திகதியளவில் முழுமையாகப் பூர்த்திசெய்திருக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
(iii) எந்தவொரு மதத்தையும் சேர்ந்த துறவிக்கு இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி கிடையாது.

7.0 **பரீட்சைக் கட்டணம்**.- இப்பரீட்சைக்கான கட்டணம் 1,000 ரூபாவாக இருக்கும். இது விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைக்கப்பட்டு நாட்டின் ஏதேனும் தபாலகத்திற்குப் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டானது விண்ணப்பப்படிவத்தின் உரிய கூட்டில் ஒட்டப்படல் வேண்டும். பரீட்சைக் கட்டணமாக காசுக் கட்டளை அல்லது முத்திரை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. கட்டணமானது மீளச் செலுத்தப்பட மாட்டாது அல்லது வேறு பரீட்சைக்காக மாற்றவும் முடியாது. பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதி ஒன்றினை வைத்திருப்பது உகந்ததாக இருக்கும்.

8.0 **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தினை ஒத்ததாக இருத்தல் வேண்டுமென்பதுடன் அதனை தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி A4 அளவிலான தாளில் தயாரித்தல் வேண்டும். 1 முதல் 2.12 வரையான தலைப்புக்கள் முதலாம் பக்கத்திலும், 3.0 தொடக்கம் 4.0(ii) வரையானவை இரண்டாம் பக்கத்திலும், எஞ்சிய பகுதிகள் மூன்றாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வகையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பது விசேடமாகக் குறிப்பிடப்படுகின்றது. கணினியில் தயாரிக்கப்படும் விண்ணப்பம்/ தட்டச்சு விண்ணப்பங்களும் இந்நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட முடியும். விண்ணப்பம் பரீட்சார்த்தியினாலேயே தனது சொந்தக் கையெழுத்தில் தெளிவாகப் பூர்த்திசெய்யப்படல் வேண்டும் என்பதுடன் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கிய வகையில் தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் முழுமையாகத் தகவல்கள் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கக்கூடும். பூர்த்திசெய்யப்படும் விண்ணப்பங்கள் பரீட்சை அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கியதாக உள்ளனவா என்பதைச் சரி பார்ப்பது விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். இல்லையேல் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம்.

(ஆ) பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே விண்ணப்பங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் உள்ள பரீட்சையின் பெயர் சிங்கள மற்றும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் உரிய மொழிகளுக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் எழுதப்படுதல் வேண்டும்.

(இ) பரீட்சார்த்திகளினால் பூரணப்படுத்தப்படும் விண்ணப்பங்கள் 2017, மாச்சு மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர் பின்வரும் முகவரியினை அடையக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் உரிய திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் இடப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை நிர்வாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2015 (2016) II ஆம் கட்டம்" என தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை,
பரீட்சைகள் திணைக்களம்,
த. பெ. இல. 1503,
கொழும்பு.

(ஈ) பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தின் போதான விண்ணப்பதாரர்களின் பதவி மற்றும் சேவை நிலையம் என்பன பரீட்சை தொடர்பான சகல நடவடிக்கைகளுக்கும் ஏற்புடையதாவதோடு விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டதன் பின்னர் அது தொடர்பாக ஏற்படும் மாற்றங்கள் எதுவும் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

(உ) ஒவ்வொரு அம்சமும் முழுமையில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்பத்திரம் தபாலில் தொலைந்துவிட்டதாகவோ தாமதமானதாகவோ கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

(ஊ) பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டவுடன் பரீட்சைகள் திணைக்களத்தினால் பத்திரிகைகளில் அறிவிப்பொன்று வெளியிடப்படும். அத்தகைய அறிவிப்பு வெளியாகி 2 நாட்கள் அல்லது 3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிக்கும்போது பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பன குறிப்பிடப்படல் வேண்டும். கொழும்புக்கு வெளியேயுள்ள விண்ணப்பதாரிகளாயின் அனுமதி அட்டை அனுப்பப்படவுள்ள ஒரு தொலைநகல் (பெக்ஸ்) இலக்கத்தைக் குறிப்பிட்டு கூறப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தொலைநகல் இலக்கத்திற்கு கோரிக்கைக் கடிதம் ஒன்றை அனுப்புதல் கூடுதல் பயனுடையதாகும். பரீட்சைத் திணைக்களத்தினால் தகவல்களை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக விண்ணப்பப்படிவம் மற்றும் பரீட்சைக் கட்டணப் பற்றுச்சீட்டு என்பவற்றின் பிரதி மற்றும் கடிதம் பதிவுசெய்த பற்றுச்சீட்டு ஆகியவற்றினை வைத்துக்கொள்தல் பயனுடையதாகும்.

9.0 **பரீட்சைக்கு அனுமதித்தல்**.- (அ) சகல விதத்திலும் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்ற சகலருக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை வழங்குவார். தனது அனுமதி அட்டையினைச் சமர்ப்பிக்கத் தவறுகின்ற ஏதேனும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர் தமக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்காகத் தோற்றுதல் வேண்டும். சகல பரீட்சார்த்திகளும் குறித்த பரீட்சை மண்டபத்திற்கான அனுமதிப்பத்திரம், பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் ஒவ்வொருவரும் தமது கையொப்பத்தை முற்கூட்டியே உறுதிப்படுத்திய அனுமதிப்பத்திரங்களைப் பரீட்சைக்குத் தோற்றும் முதலாம் நாளில் மண்டப மேற்பார்வையாளருக்கு கையளிக்க வேண்டும். சகல பரீட்சார்த்திகளும் கையாள வேண்டிய விதிக்கோவை ஒன்று இவ்வர்த்தமானப் பத்திரிகையின் ஆரம்பத்தில் வெளியிடப்படுகின்றது. பரீட்சை நடாத்துதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். அச்சட்ட விதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உள்ளாதல் வேண்டும்.

**குறிப்பு**.- பரீட்சைக்காக அனுமதி அட்டை வழங்கப்பட்டமையானது பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சையில் தோற்றுவதற்கான தகுதியினைக் கொண்டுள்ளார் என்பதனை அவசியமாகக் கருதாது.

10.0 **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்தின்போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆளடையாளத்தை நிருபிக்க வேண்டும். அதற்காக பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

11.0 **பிழையான தகவல்கள் அளிப்பதற்கான தண்டனை**.- எவரேனும் பரீட்சார்த்தி ஒருவர் தகுதியற்றவர் எனத் தெரியவருமாயின் பரீட்சையின் முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தி உரிமை இரத்துச்செய்யப்படலாம். பரீட்சார்த்தி ஒருவர் வேண்டுமென்றே பிழையான தகவல்களை அளித்துள்ளார் அல்லது வேண்டுமென்றே ஏதேனும் ஒரு விடயத்தை மூடிமறைத்திருப்பதாக வெளிவந்தால் அவர் அரச சேவையிலிருந்து பதவி நீக்கத்திற்கும் ஆளாவார்.

12.0 இவ்வறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயமானது அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்குட்பட்டு செயலாளரினால் வரையறுக்கப்பட்டவாறு கையாளப்படல் வேண்டும்.

13.0 **பரீட்சைத் திட்டம் மற்றும் பரீட்சை மொழி ஊடகம்** :-

(அ) பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர் தான் சேவைக்குச் சேர்வதற்காகத் தகைமைபெற்ற பட்டப்படிப்பினைப் பூர்த்திசெய்த மொழிமூலத்தில் அல்லது அரச கரும மொழியிலோ பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

**குறிப்பு :**

(i) பரீட்சார்த்தி ஒருவர் ஒரே மொழியில் பரீட்சையின் சகல வினாத்தாள்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப்படிவத்தில் சுட்டிக்காட்டப்பட்ட மொழி மூலத்தினை மாற்றுவதற்கு பரீட்சார்த்திகள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

*14.0* **ஆட்சேர்ப்பு முறை :**

*14.1* ***எழுத்துமூலப் பரீட்சை.***- பின்வரும் பாடங்களை உள்ளடக்கிய எழுத்துமூலப் பரீட்சைத் தாள்கள் நான்கினை உள்ளடக்கியிருக்கும். பாடங்கள் மற்றும் ஒவ்வொரு பாடத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள வேண்டிய குறைந்தபட்சப் புள்ளிகள் என்பன பின்வருமாறு :-

| பாடம் | புள்ளிகள் | குறைந்தபட்ச சித்தியெய்தல் புள்ளிகள் |
|---|---|---|
| 1. பொது விவேகம் | 100 | 50 |
| 2. இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் பின்னணியும் உலகளாவிய போக்குகளும் | 100 | 50 |
| 3. அரசாங்க நிர்வாகத்துடன் தொடர்புபட்ட விடய ஆய்வு I (தாபன விதிக்கோவை, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் மற்றும் நிதிப் பிரமாணங்கள் என்பவை சார்ந்தவை) | 100 | 50 |
| 4. அரசாங்க நிர்வாகத்துடன் தொடர்புபட்ட விடய ஆய்வு II (ஆக்கபூர்வமான, பகுப்பாய்வு ரீதியான மற்றும் தொடர்பாடல் திறன்கள் என்பவற்றின் மதிப்பீடு சார்ந்தது) | 100 | 50 |

பரீட்சார்த்திகள் சகல வினாப்பத்திரங்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

*14.2* ***பொது மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை.***- (i) நேர்முகப் பரீட்சையானது இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது. அதாவது பொது நேர்முகப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை.

*(அ) பொது நேர்முகப்பரீட்சை :*

(i) மேற்படி இல. 6 இல் விதித்துரைக்கப்பட்ட ஆட்சேர்ப்புக்கான தகைமைகள் பூர்த்திசெய்யப் பட்டுள்ளனவா என்றும் தகுதி தொடர்பான வரையறைகளுக்கு விண்ணப்பதாரிகள் இணங்கி யொழுகுகின்றனரா என்றும் உறுதிப்படுத்துவதற்கு பொது நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

(ii) பொது நேர்முகப் பரீட்சைச் சபைக் குழுவானது அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும்.

*(ஆ) கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை.*- (i) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் பரீட்சைச் சபைக் குழுவால் பரீட்சார்த்திகளின் முகாமைத்துவத் திறன்கள், தலைமைத்துவப் பண்புகள், தொடர்பாடல் திறன்கள் மற்றும் ஆளுமை என்பவற்றை அளவிடுவதற்குப் பின்வரும் நடைமுறையுடன் ஒத்திசைவாக நடாத்தப்படும். இந்நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்கூடிய புள்ளிகள் இருபத்தைந்து (25) ஆகும்.

| விடயத் தலைப்பு | உச்சப் புள்ளி |
|---|---|
| 1. முகாமைத்துவத் திறன் | 10 |
| 2. தலைமைத்துவப் பண்பு | 05 |
| 3. தொடர்பாடல் திறமை | 05 |
| 4. ஆளுமை | 05 |
| மொத்தம் | 25 |

(ii) ஒவ்வொரு பாடத்திலும் ஆகக்குறைந்தது ஐம்பது வீத (50%) புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகளில் சகல பாடங்களிற்கும் மொத்தமாக உச்ச புள்ளிகளைப் பெறுகின்றவர்கள் பொது நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதிபெறுவர். தகுதிபெற்ற பரீட்சார்த்திகளில் நிரப்பப்பட எதிர்பார்க்கப்படும் வெற்றிடங்களுக்கிணங்க ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் மொத்த எண்ணிக்கைக்குச் சமனானதோர் எண்ணிக்கையானோர் மற்றும் எதிர்பார்க்கப்படும் வெற்றிட எண்ணிக்கையின் 25% ஆனோர் மட்டும் பொது நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள். தகுதிபெற்ற விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையானது மேலே குறிப்பிடப்பட்ட எண்ணிக்கையினைத் தொகையிடவில்லையாயின் அவ்வாறு தகுதிபெற்ற பரீட்சார்த்திகளின் அத்தகைய எண்ணிக்கையினர் மட்டும் பொது நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள்.

(iii) தகைமைகளைப் பரீட்சிப்பதற்கு கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு முன்னராக பொது நேர்முகப் பரீட்சையானது நடாத்தப்படும் என்பதுடன் அங்கே எதுவித புள்ளிகளும் ஒதுக்கப்பட மாட்டாது. பொது நேர்முகப் பரீட்சையில் ஆட்சேர்ப்பதற்கான சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளதனை உறுதிப்படுத்திய விண்ணப்பதாரிகள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்குத் தகுதிபெறுவர். குறித்த சில எண்ணிக்கையான பரீட்சார்த்திகள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதற்கு தகுதிப்படுத்தப்படாவிட்டாலுங்கூட ஏனைய பரீட்சார்த்திகள் அவ்வாறு தகுதிப்படுத்தப்படாதவர்களின் இடத்துக்காக பொது நேர்முகப் பரீட்சைக்கு மீண்டும் அழைக்கப்பட மாட்டார்கள்.

(iv) நிலவும் வெற்றிடங்களுக்கிணங்க நியமிக்கப்பட எதிர்பார்க்கப்படும் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையினரால் எழுத்துப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை என்பவற்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்தப் புள்ளிகளுக்கமைய உச்ச புள்ளிகளைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகளிலிருந்து ஆரம்பித்து திறமை அடிப்படையில் தரம் மூன்றிற்கு (III) நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.

**கவனிக்கவும்**.- நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளித்தலானது நியமனம் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்ற சகல தகைமைகளைக் கொண்டிருப்பதாக கருதப்படலாகாது.

14.3 பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளினதும் பெறுபேறுகள் தனிப்பட்ட வகையில் அறிவிக்க பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தபாலில் அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத்தள முகவரியின் மூலம் வெளியிடப்படும்.

15.0 **எழுத்துப் பரீட்சைப் பாடத்திட்டம்** :

(1) ***பொது விவேகம்***.- எண்கள், மொழிசார் மற்றும் உருவ வடிவங்கள், இடைத்தொடர்புகளுடன் சம்பந்தப்பட்ட சிக்கல்கள் தொடர்பிலான பகுப்பாய்வுத் திறமை, தர்க்க ரீதியான விளக்கம், பொருள் கோடல் ஆற்றல், ஏனைய நிலைமைகளுக்கு ஏற்புடையதாக ஆக்கிக்கொள்ளும் ஆற்றல் மற்றும் முடிபுகளுக்கு வருதல் தொடர்பாக பரீட்சார்த்திக்கு உள்ள புத்திக்கூர்மை மட்டத்தை அளவிடுவது இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது. (காலம் : 1 1/ 2 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள். இவ்வினாத்தாள் பல்தேர்வு வினாக்கள் மற்றும் குறுகிய வினாக்கள் என்பவற்றைக் கொண்டிருக்கும். சகல வினாக்களுக்கும் விடையளிக்கப்படல் வேண்டும்.)

(2) ***இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் பின்னணியும் உலகளாவிய போக்குகளும்***.- இலங்கை மற்றும் உலகளாவிய சமூக, பொருளாதார, அரசியல், கலாசார, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப நிலைமைகள் பற்றிய பரீட்சார்த்தியின் விடய அறிவு அல்லது பரீட்சார்த்திக்கு முன்வைக்கப்படுகின்ற சூழ்நிலை ஒன்றுடன் தொடர்புடையதாக ஆக்கபூர்வமாக, பகுப்பாய்வு ரீதியாக மற்றும் விமர்சன ரீதியாக

சிந்திக்கும் ஆற்றல், முன்னுரிமை பற்றித் தீர்மானிக்கும் ஆற்றல் மற்றும் உபாயமார்க்க ரீதியாக எதிர்காலத்தை எதிர்வுகூறக்கூடிய ஆற்றல் சம்பந்தமாக பரீட்சார்த்தி கொண்டுள்ள திறமைகளை அளவிடுவது இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது. (காலம் : 3 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள். இவ்வினாத்தாள் பல்தேர்வு வினாக்கள், குறுகிய வினாக்கள், கட்டமைக்கப்பட்ட கட்டுரைகள், வினாக்கள் மற்றும் கட்டுரைகள், வினாக்கள் என்பவற்றைக் கொண்டிருக்கும். சகல வினாக்களுக்கும் விடையளிக்கப்படல் வேண்டும்.)

(3) அரசாங்க நிர்வாகத்துடன் தொடர்புபட்ட விடய ஆய்வு I (தாபன விதிக்கோவை, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்கள் என்பவை சார்ந்தவை).-அரசாங்க சேவையில் வேறுபட்ட சுற்றுச்சூழல்களில் தோன்றக்கூடிய சிக்கலொன்றை அல்லது ஒருசிலவற்றைத் தொடர்புபடுத்திக் கொண்டு உருவாக்கப்பட்ட சம்பவமொன்றை/ சம்பவங்களை பரீட்சார்த்தியிடம் முன்வைத்து பரீட்சார்த்தி கொண்டுள்ள ஆக்கபூர்வமான சிந்தனைச் சக்தியையும் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்கான ஆற்றலையும் தாபன விதிக்கோவை மற்றும் நிதிப் பிரமாணங்களுடன் தொடர்புடையதாக அரசாங்க சேவையின் நடைமுறைகள் சார்ந்ததாக அறவிடுவதே இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது. (காலம் : 3 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள். இவ்வினாத்தாள் பல்தேர்வு வினாக்கள், குறுகிய வினாக்கள், கட்டமைக்கப்பட்ட கட்டுரைகள், வினாக்கள் மற்றும் கட்டுரைகள், வினாக்கள் என்பவற்றைக் கொண்டிருக்கும். சகல வினாக்களுக்கும் விடையளிக்கப்படல் வேண்டும்.)

(4) அரசாங்க நிர்வாகத்துடன் தொடர்புபட்ட விடய ஆய்வு II (ஆக்கபூர்வமான, பகுப்பாய்வு ரீதியான மற்றும் தொடர்பாடல் திறன்கள் என்பவற்றின் மதிப்பீடு சார்ந்தது).- தரப்பட்ட தலையங்கங்கள்/ தொனிப் பொருள்கள் பலவற்றிலிருந்து பரீட்சார்த்தி தானாகவே தெரிவுசெய்யும் ஒரு தலையங்கம்/தொனிப்பொருட்கள் ஊடாக கருத்துக்களையும் தகவல்களையும் பகுப்பாய்தல், தொகுத்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பில் பரீட்சார்த்தி காட்டுகின்ற தர்க்க ரீதியான மற்றும் சிந்தனை சக்தியை அளவிடுதலும் ஓரளவு சிக்கலான பந்தியொன்றை, எழுத்தாவணம் அல்லது நிருபமொன்றை ஊகித்துணர்ந்து கொள்ளவும் அதன் முக்கிய கருத்துக்களைத் தனது சொல்லில் சுருக்கி சரியாகவும் தெளிவாகவும் தெரிவிப்பதில் அவருக்குள்ள ஆற்றலை அளவிடுதலும் இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது. (காலம் : 3 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள். சகல வினாக்களுக்கும் விடையளிக்கப்படல் வேண்டும்.)

16.0 சிங்கள, தமிழ், ஆங்கில மொழி அறிவித்தல்களுக்கிடையில் ஏதேனும் முரண்பாடு காணப்படும் பட்சத்தில் சிங்கள மொழி அறிவித்தலே மேலோங்குதல் வேண்டும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

ஜே. ஜே. ரத்னசிறி,
செயலாளர்,
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு.

பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2017,பெப்புருவரி 03.

மாதிரி விண்ணப்பப்படிவம்

அலுவலக உபயோகத்திற்காக

**இலங்கை நிருவாக சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2015 (2016) II ஆம் கட்டம்**

LIMITED COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT TO GRADE III OF SRI LANKA ADMINISTRATIVE SERVICE - 2015 (2016) STAGE II

1.0 மொழி ஊடகம் :
பரீட்சை மொழி ஊடகம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்)

பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற உத்தேசித்துள்ள மொழி ஊடகத்தில் விண்ணப்பமானது நிரப்பப்படல் வேண்டும்.

2.0 தனிப்பட்ட தகவல்கள் :

2.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

2.2 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.
(உதாரணம் : GUNAWARDHANA, H. M. S. K.)

2.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :-----.

2.4 அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) (அனுமதி அட்டை இம்முகவரிக்கு அனுப்பப்படும்) :-----.

2.5 அலுவலக முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :-----.

2.6 தனிப்பட்ட முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :-----.

2.7 பால் : (ஆண் - 0, பெண் - 1) ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்)

2.8 தேசிய அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

2.9 விவாக நிலை : (விவாகமாகாதவர் -1, விவாகமானவர் - 2)
☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்)

2.10 இனம் : (சிங்களம் -1, தமிழர் - 2, இந்தியத் தமிழர் - 3, முஸ்லிம் - 4, ஏனையோர் - 5)
☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்)

2.11 பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

2.12 தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

3.0 2016.07.01 ஆந் திகதியிலுள்ளவாறு சேவைக்கு/ தரத்திற்கு உள்வருவதற்காக தரப்படுத்தல் பரீட்சை/ நேர்முகப் பரீட்சையினைத் தாங்கள் சித்தியெய்திய மொழி ஊடகத்தினைக் குறிப்பிடவும் :----.

4.0 (i) வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 6.0 இல் குறிப்பிடப்பட்ட சகல தகைமைகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதா ? :
----.

(அ) 2016.07.10 ஆந் திகதியிலுள்ளவாறு வயது :----.

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

(ஆ) கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்.- வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 6(ஆ) இற்கமைய பந்தி 6.0(ஆ) (i) அல்லது (ஆ) (ii) இன்கீழ் பரீட்சார்த்தி தகைமை பெற்றுள்ளாரா என்பதைக் குறிப்பிடவும் :----.

பட்டம் பெற்ற திகதி :----.
பல்கலைக்கழகம்/ நிறுவகம் :----.
பதிவிலக்கம் :----.
உள்வாரி/ வெளிவாரி :----.
பட்டம் :----.
பாடங்கள் :----.
வகுப்பு :----.
மேல்/ கீழ் :----.
பட்டம் நடைமுறைக்கு வரும் திகதி :----.
பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றிய மொழி ஊடகம் :----.

(இ) சேவை/ தரம் ....................................... தங்களின் சேவை/ தரம் (வகுப்பு, தரம் அல்லது தொகுதி (ஏதேனும் இருப்பின்)
சுட்டிக்காட்டப்படல் வேண்டும்) :----.
தற்போதைய பதவி :----.

கூறப்பட்ட பதவியானது மத்திய அரச சேவைக்கு அல்லது மாகாண அரச சேவைக்கு உரியதா ? :----.
தரம் :----.
வகுப்பு/ தொகுதி :----.
பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.
கூறப்பட்ட பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட திகதி :----.
சம்பளக் குறியீடு மற்றும் சம்பள அளவுத்திட்டம் :----.

இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்காக தகைமை பெறுவதற்கு சில சேவைகள் தங்களுக்கு ஏற்புடையதாயின் சேவையின் கூறப்பட்ட காலப்பகுதியின் விபரங்கள் (முனைப்பானதும் திருப்திகரமானதும்) பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்படல் வேண்டும்.

| சேவையின் பெயர்/ தரம் | பொ. நி. சுற்றறிக்கைக் கமைய ஏற்புடையதான சம்பளக் குறியீடு உதாரணம் : MN2-2016(A) | நியமனத் திகதி |
|---|---|---|
| (1) | | |
| (2) | | |
| (3) | | |
| (4) | | |
| (5) | | |

(ii) வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 6 இல் குறிப்பிடப்பட்ட அனுமதிக்கப்பட்ட பதவி ஒன்றின் சேவைகள்/ தரங்களின் தகைமைகள் பூர்த்திசெய்யப்பட வேண்டிய 2016.07.01 ஆந் திகதியிலுள்ளவாறான முனைப்பானதும் திருப்திகரமானதுமான மொத்தச் சேவைக்காலம் :----.

5.0 இதற்கு முன்னர் நடாத்தப்பட்ட இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக பரீட்சைக்குத் தோற்றிய வருடங்களைக் குறிப்பிடவும்.

| | பரீட்சை | தோற்றியுள்ளேன்/ தோற்றவில்லை |
|---|---|---|
| 1842/ 2 ஆம் இலக்க 2013, திசெம்பர் மாதம் 23 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட இலங்கை நிர்வாக சேவை பிரமாணக் குறிப்பின்படி (தற்போது வலுவிலிருக்கும்) 2012.07.01 ஆந் திகதிக்குப் பின் தோற்றிய வருடங்கள் | 2013 (2015) மட்டுப்படுத்தப்பட்ட | |
| | 2014 (2016) மட்டுப்படுத்தப்பட்ட | |

6.0 பணம் செலுத்திய பற்றுச்சீட்டினை கழறாதவாறு ஒட்டவும் :

(விளிம்பிலிருந்து இறுக்கமாக பணப்பற்றுச்சீட்டினை (மூலப்பிரதி) ஒட்டவும்.
(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியினை வைத்திருக்கவும்.)

7.0 ***பரீட்சார்த்தியின் சான்றுரை :***

2016.07.01 ஆந் திகதிக்கு முன்வரும் ஐந்து வருட காலப்பகுதியில் வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 6 (ஆ) இற்கமைய 2016.07.01 ஆந் திகதியிலுள்ளவாறு சகல சம்பள ஏற்றங்களையும் (சேவை அல்லது திணைக்களப் பரீட்சையில் சித்தியடைதல் நிபந்தனையாக அமைகின்ற சம்பள ஏற்றம் தவிர்ந்த) நான் உழைத்துள்ளதுடன் முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைக் கொண்டுள்ளேன் என்பதுடன் எந்த வடிவிலான ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் (எச்சரிக்கைகள் தவிர்ந்த) உட்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதையும் நான் பிரகடனம் செய்கின்றேன். மேலும், பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும் கட்டுப்படுவேன் என்றும் நான் பிரகடனம் செய்கின்றேன்.

வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட சகல விதிகளுக்கும், ஒழுங்குவிதிகளுக்கும் அமைய இம்மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எனக்கு தகுதியுள்ளது என்றும் எனது அறிவுக்கு எட்டியவரை இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட .................................. ஆந் திகதிய ........................... ஆம் இலக்கப் பற்றுச்சீட்டினை இதில் ஒட்டியுள்ளேன் என்றும் நான் பிரகடனம் செய்கின்றேன். இப்பரீட்சையின் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு கட்டுப்படுவதற்கும் இப்பரீட்சையின் பிரமாணக் குறிப்புக்கு இணங்க நான் தகுதியற்ற ஒருவர் எனத் தெரியவந்தால் பரீட்சைக்கு முன்னர், பரீட்சையின்போது அல்லது பரீட்சைக்குத் பின்னர் எனது பரீட்சார்த்தி உரிமையை இரத்துச் செய்வதற்காக எடுக்கப்படும் எத்தகையதுமான தீர்மானத்திற்கும்

நான் உடன்படுகின்றேன். மேலும், இப்பரீட்சையினை நடாத்துதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும் கட்டுப்படுவேன் என்றும் நான் பிரகடனம் செய்கின்றேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

7. திணைக்களத் தலைவரின் சான்றுரை (தனிப்பட்ட கோவையினைச் சரிபார்த்து) :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ......................................... எனும் விண்ணப்பதாரர் மத்திய அரசாங்கம்/ ..................................... மாகாண அரசாங்கத்தின்கீழ் ............................................... அமைச்சு/ திணைக்களத்தில் ......................................... என்னும் பதவியொன்றில் சேவையாற்றுகிறார் என்றும், 2016.07.01 ஆந் திகதிக்கு முன்னரான 5 வருட காலப்பகுதியில் (சேவை அல்லது திணைக்களப் பரீட்சையில் சித்தியடைதல் நிபந்தனையாக அமைகின்ற சம்பள ஏற்றம் தவிர்ந்த) சகல சம்பள ஏற்றங்களையும் உழைத்துள்ளார் என்றும் கூறப்பட்ட காலப்பகுதியில் எந்தவித ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் (எச்சரிக்கைகள் தவிர்ந்த) உட்படுத்தப்படவில்லை என்றும் வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 6(ஆ) இற்கமைய ............................. (ஐந்து/ பத்து) வருட முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைக் கொண்டுள்ளார் என்றும் உரிய வர்த்தமானி அறிவித்தலில் விதித்துரைக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கமைய இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவர் தகுதியினைக் கொண்டுள்ளார் என்றும் குறித்துரைக்கப்பட்ட பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டினை இதில் ஒட்டியுள்ளார் என்றும் என் முன்னிலையில் இவ்விண்ணப்பப்படிவத்தில் கையொப்பமிட்டார் எனவும் நான் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

-----,
திணைக்களத் தலைவரின்/ அதிகாரம்
அளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்.

பெயர் :-----.
பதவி :-----.
திகதி :-----.
(உத்தியோகபூர்வ முத்திரையை இடவும்)

2-753

---

## ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்

பட்டதாரி மாணவ பயிலிளவல்நிலை (Cadetships)
(ஆண்/ பெண்) உத்தியோகத்தர்

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் இரத்மலானை மற்றும் சூரியவெவ தெற்கத்திய வளாகத்தில், பட்டதாரி மாணவ பயிலிளவல் (Cadet) (ஆண்/ பெண்) உத்தியோகத்தர்களுக்காக பொருத்த மான தகைமையுடைய இலங்கையரிடமிருந்து விண்ணப்பங்கள் 2017.02.12 ஆந் திகதி முதல் 2017.03.11 ஆந் திகதி வரை கோரப்படுகின்றன.

2. பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பிலான கற்கைகளின் கல்விசார் மற்றும் இராணுவ கூறுகள் ஆகியவற்றை வெற்றிகரமாக முடித்தவர்களுக்கு 1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புக் கல்வி நிறுவனச் சட்டம் மற்றும் அதில் மேலும் பின்பு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் ஆகியவற்றின் பிரகாரம் முப்படையின் அலுவலர் நிலையிலமர்த்தப்பட்ட பின் அவர்களுக்கு பட்டங்கள் வழங்குவதற்கு ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் அதிகாரத்தைக் கொண்டுள்ளது.

3. இப்பட்டதாரி மாணவ பயிலிளவல்கள் (Cadets) பின்வரும் பட்டதாரி பாடநெறிகளைப் பின்வரும் இடங்களில் பயில முடியும்.

கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் - இரத்மலானை :

(i) மருத்துவம் மற்றும் சத்திர சிகிச்சையியல்மாணி சிறப்புப் பட்டம் (MBBS) (5 ஆண்டுகள்) ;

(ii) பொறியியல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் (4 1/ 2 ஆண்டுகள்) ;

(iii) சட்டமாணி சிறப்புப் பட்டம் (LLB) (4 ஆண்டுகள்) ;

(iv) கணினி விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் (4 1/ 2 ஆண்டுகள்) ;

(v) மென்பொருள் பொறியியல்மாணி சிறப்புப் பட்டம் (4 1/ 2 ஆண்டுகள்) ;

(vi) கணினிப் பொறியியல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் (4 1/ 2 ஆண்டுகள்) ;

(vii) தேவைகள் விநியோகங்கள் முகாமைத்துவத்துவ விஞ்ஞானமாணிப் பட்டம் (3 ஆண்டுகள்) ;

(viii) முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்ப விஞ்ஞானமாணிப் (3 ஆண்டுகள்) ;

(ix) சமூக விஞ்ஞானங்கள் விஞ்ஞானமாணி (3 ஆண்டுகள்).

தெற்கு வளாகம் - சூரியவெவ :

(x) கட்டிட கலையியல்மாணி சிறப்புப் பட்டம் (5 1/ 2 ஆண்டுகள்) ;

(xi) கட்டிட சூழலியல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் (4 1/ 2 ஆண்டுகள்) ;

(xii) கட்டிட சூழலியல் விஞ்ஞான இளமாணிப் பட்டம் (3 1/ 2 ஆண்டுகள்) ;

(xiii) கணிய அளவையியலில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் (4 1/ 2 ஆண்டுகள்) ;

(xiv) அளவையியல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் (4 1/ 2 ஆண்டுகள்) ;

(xv) தகவல் தொழில்நுட்பவியல்மாணி சிறப்புப் பட்டம் (4 1/ 2 ஆண்டுகள்) ;

(xvi) தகவல் முறையியல்மாணி சிறப்புப் பட்டம் (4 1/ 2 ஆண்டுகள்).

3.1 பட்டதாரிப் பாடநெறிகளுக்காக சேர்த்துக்கொள்ளப் படும் பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர்களின் மூன்று படைகளுக்குமான ஒதுக்கீடானது அப்படைப் பிரிவுகளில் காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் தெரிவுக்காக நடாத்தப்படும் பரீட்சைகளில் தேருநர்கள் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கை என்பவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை வெற்றிகரமாக முடித்துக்கொண்ட பின்னர் பயிலிளவல் (Cadet) உத்தியோத்தர்கள் இலங்கைத் தரைப்படை, கடற்படை மற்றும் விமானப் படை ஆகியவற்றின் கிரமமான படைகளில் இணைத்துக்கொள்ளப்படுவார்கள்.

3.2 பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பிலான கற்கைகளின் கல்விசார் மற்றும் இராணுவக் கூறுகள் ஆகியவற்றை வெற்றிகரமாக முடிக்கின்ற பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர்களுக்கு பிரயோகிக்கத்தக்கவாறு பின்வரும் பட்டமொன்று வழங்கப்படும் :-

(i) மருத்துவம் மற்றும் சத்திர சிகிச்சையியல்மாணி சிறப்புப் பட்டம் (MBBS) ;

(ii) பொறியியல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் ;

(iii) சட்டமாணி சிறப்புப் பட்டம் (L.L.B) ;

(iv) கணினி விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் ;

(v) மொன்பொருள் பொறியியல்மாணி சிறப்புப் பட்டம் ;

(vi) கணினிப் பொறியியல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் ;

(vii) தேவைகள், விநியோகங்கள் முகாமைத்து வத்துவ விஞ்ஞானமாணிப் பட்டம் ;

(viii) முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்ப விஞ்ஞானமாணிப் பட்டம் ;

(ix) சமூக விஞ்ஞானங்கள் விஞ்ஞானமாணி ;

(x) கட்டிட கலையியல்மாணி சிறப்புப் பட்டம் ;

(xi) கட்டிட சூழலியல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் ;

(xii) கட்டிட சூழலியல் விஞ்ஞான இளமாணிப் பட்டம் ;

(xiii) கணிய அளவையியலில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் ;

(xiv) அளவையியல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் ;

(xv) தகவல் தொழில்நுட்வியல்மாணி சிறப்புப் பட்டம் ;

(xvi) தகவல் முறையியல்மாணி சிறப்புப் பட்டம்.

3.3 சகல பட்டப்படிப்பு பாடநெறிகளும் ஆங்கில மொழி யில் மாத்திரமே நடாத்தப்படும்.

3.4 தெரிவுசெய்யப்படும் படையிளவல்கள் அவர்களின் தகைமைகளுக்கேற்ப பின்வரும் இளமாணிப் பட்ட நிகழ்ச்சித் திட்டங்களில் ஒன்றைப் பயில்வதற்கு அனுமதிக்கப்படுவார்கள் :

(a) ***மருத்துவம் மற்றும் சத்திர சிகிச்சையியல் மாணி (MBBS) - ஐந்து ஆண்டுகள் (ஆண்).-***

*2016 ஆம் ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் (உயிரியல், இரசாயனவியல் மற்றும் பௌதிகவியல்) குறைந்தபட்சம் மூன்று சாதாரண (S) சித்திகளுடன் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கக்கூடிய தகைமை யுடையவர்கள் ;*

(b) ***விமான இயந்திரவியல்/ விமானப் பராமரிப்பு/ உயிரியல் மருத்துவம்/ சிவில்/ மின் மற்றும் இலத்திரனியல்/ இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு/ கடல்சார்/ பொறிமுறை இயந்திரவியல்/ எந்திர இலத்திரனியல் என்பவற்றில் பொறியியல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் - நான்கரை ஆண்டுகள் (ஆண்).-***

*2016 அல்லது 2015 ஆம் ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் கணிதப் பிரிவில் (இணைந்த கணிதம், இரசாயனவியல் மற்றும் பௌதிகவியல்) குறைந்தபட்சம் மூன்று சாதாரண (S) சித்திகளுடன் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கக்கூடிய தகைமையுடையவர்கள் ;*

(c) ***சட்டமாணி சிறப்புப்பட்டம் (LLB) - நான்கு ஆண்டுகள் (பெண்).-***

*2016 அல்லது 2015 ஆம் ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பின்வரும் பாடங்களுள் குறைந்தபட்சம் மூன்று பாடங்களில் சாதாரண (S) சித்திகள் பெற்றிருப்பதுடன் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கக்கூடிய தகைமை யையும் பெற்றவர்கள் இதற்குத் தகுதியுடைய வர்கள் ;*

*கணக்கியல், அரசறிவியல், விவசாய விஞ்ஞானம், புவியியல், உயிரியல், உயர் கணிதம், வணிக புள்ளிவிபரவியல், வரலாறு, வணிகக் கற்கைகள், அளவையியலும் விஞ்ஞான முறையும், இரசாயனவியல், பொருளியல், பௌதிகவியல், கணிதவியல்/ இணைந்த கணிதம், தொடர்பாடலும் ஊடக கற்கைகளும், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் ;*

*அல்லது*

*மேலுள்ள பாடங்களிலிருந்து ஒன்று அல்லது இரண்டு பாடங்களில் சாதாரண சித்தியும் ஏனைய ஒன்று அல்லது இரண்டு பாடங்களுக்கும் கீழ்வரும் பாடங்களிலிருந்தும் குறைந்தது மொத்தம் மூன்று சாதாரண சித்திகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.*

*பௌத்தம்/ பௌத்த நாகரிகம், கிரேக்கம், தமிழ், கிறிஸ்தவம்/ கிறிஸ்தவ நாகரிகம், இந்து சமயம்/ இந்து நாகரிகம், லத்தீன், கிரேக்க உரோம நாகரிகம், இஸ்லாம்/ இஸ்லாமிய நாகரிகம், பிராஞ்சிய மொழி, ஜப்பான் மொழி, சீன மொழி, சிங்களம், ஆங்கிலம் (பாட எண் 73), பாளி, அராபிய மொழி, சமஸ்கிருதம், ஜேர்மன் மொழி, விவசாய தொழில்நுட்பம், நாடகமும் அரங்கியலும்.*

(d) ***கணினி விஞ்ஞானமாணி (B sc) சிறப்புப் பட்டம் - நான்கரை ஆண்டுகள் (ஆண்).-***

*2016 அல்லது 2015 ஆம் ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் கணிதப் பிரிவில் (இணைந்த கணிதம், பௌதிகவியல் என்பவற்றில் குறைந்தபட்சம் சாதாரண (S) சித்திகளும் பின்வரும் பாடங்களுள் ஏதேனும் ஒரு பாடத்தில் குறைந்தபட்சம் சாதாரண சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கக்கூடிய தகைமையுடைய வர்கள் :-*

*இரசாயனவியல்*
*உயர் கணிதம்*
*தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்*

(e) ***மென்பொருள் பொறியியல்மாணி சிறப்புப் பட்டம்.- நான்கரை ஆண்டுகள் (ஆண்).-***

*2016 அல்லது 2015 ஆம் ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் கணிதப் பிரிவில் இணைந்த கணிதம், பௌதிகவியல் என்பவற்றில் குறைந்தபட்சம் சாதாரண (S) சித்திகளும் பின்வரும் பாடங்களுள் ஏதேனும் ஒரு பாடத்தில் குறைந்தபட்சம் சாதாரண சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கக்கூடிய தகைமையுடைய வர்கள் :*

*இரசாயனவியல் ;*
*உயர் கணிதம் ;*
*தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்.*

(f) ***கணினிப் பொறியியல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் - நான்கரை ஆண்டுகள் (ஆண்).-***

*2016 அல்லது 2015 ஆம் ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் கணிதப் பிரிவில் இணைந்த கணிதம், பௌதிகவியல் என்பவற்றில் குறைந்தபட்சம் சாதாரண (S) சித்திகளும் பின்வரும் பாடங்களுள் ஏதேனும் ஒரு பாடத்தில் குறைந்தபட்சம் சாதாரண சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கக்கூடிய தகைமையுடைய வர்கள் :*

*இரசாயனவியல் ;*
*உயர் கணிதம் ;*
*தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்.*

(g) **தேவைகள், விநியோகங்கள் முகாமைத்து வத்துவ விஞ்ஞானமாணி பட்டம் - மூன்று ஆண்டுகள் (ஆண், பெண்).-**

*2016 அல்லது 2015 ஆம் ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானம், கணிதம் அல்லது வர்த்தகம் எனும் ஏதாவதொரு பிரிவில் குறைந்தபட்சம் மூன்று சாதாரண (S) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையுடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.*

(h) **முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்ப விஞ்ஞானமாணி - மூன்று ஆண்டுகள் (ஆண்).-**

*2015 அல்லது 2016 ஆம் ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானம் அல்லது கணிதப் பிரிவில் குறைந்தபட்சம் மூன்று சாதாரண (S) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையுடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.*

(i) **சமூக விஞ்ஞானங்கள் விஞ்ஞானமாணிப் பட்டம் (BSc) - மூன்று ஆண்டுகள் (ஆண்/ பெண்).-**

*2015 அல்லது 2016 ஆம் ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஏதாவது பாடப் பிரிவில் குறைந்தபட்சம் மூன்று பாடங்களில் சாதாரண (S) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையுடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.*

(j) **கட்டிட கலையியல்மாணி சிறப்புப் பட்டம் (B Arch) - ஐந்தரை வருடங்கள் (ஆண்).- இது இரண்டு வெவ்வேறு பட்டங்களுடன் இடைவிலகல் வசதி கொண்டது :**

*கட்டிட, சூழலியல் விஞ்ஞான இளமாணிப் பட்டம் - மூன்றரை ஆண்டுகள் (ஆண்)*

*கட்டிட சூழலியல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் - நான்கரை ஆண்டுகள் (ஆண்).-*

*2016 அல்லது 2015 ஆம் ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பின்வரும் பாடங்களுள் குறைந்தபட்சம் மூன்று பாடங்களில் சாதாரண (S) சித்திகள் பெற்றிருப்பதுடன் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கக்கூடிய தகைமையையும் பெற்றவர்கள் இதற்குத் தகுதியுடையவர்கள்.*

(i) *பின்வருவனவற்றுள் ஏதாவது ஒரு பாடம் :*

*உயிரியல் ;*
*உயர் கணிதம் ;*
*இரசாயனவியல் ;*
*பௌதிகவியல் ;*
*இணைந்த கணிதம் ;*
*சித்திரம் ;*
*புவியியல்.*

*அத்துடன்*

(ii) *எஞ்சியிருக்கும் பாடம்/ பாடங்கள் பின்வரும் பட்டியலிலுள்ளன :-*

*கணக்கியல்*
*இந்து நாகரிகம்*
*வணிக புள்ளி விபரவியல்*
*இஸ்லாமிய நாகரிகம்*
*கிரேக்க உரோம நாகரிகம்*
*அரசறிவியல்*
*ஆங்கிலம் (பாட எண் 73)*
*சிங்களம்*
*கிறிஸ்தவ நாகரிகம்*
*தொடர்பாடலும் ஊடக கற்கைகளும்*
*ஹிந்தி*
*பௌத்த நாகரிகம்*
*மனைப் பொருளியல்*
*சீன மொழி*
*அளவையியலும் விஞ்ஞான முறையும்*
*கணிதவியல்*
*சமஸ்கிருதம்*
*ஜேர்மன் மொழி*
*அரபிய மொழி*
*வரலாறு*
*வியாபாரக் கற்கைகள்*
*ஜப்பான் மொழி*
*பொருளியல்*
*பாளி*
*பிராஞ்சிய மொழி*
*தமிழ்*
*தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பம்*
*விவசாய விஞ்ஞானம்*

*அத்துடன்*

*க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதம் I அல்லது II இல் திறமைச் சித்தி அல்லது க. பொ. த. (உ. த.) பரீட்சையில் கணிதத்தில் சாதாரண சித்தி*

*அத்துடன்*

*கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக் கழகத்தினால் நடாத்தப்படுகின்ற "வெளி அறிகைநிலை" எனும் பரீட்சையில் சித்தி.*

(k) **அளவையியல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் - நான்கரை ஆண்டுகள் (ஆண்).-**

*2016 அல்லது 2015 ஆம் ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் கணிதப் பிரிவில் குறைந்தபட்சம் மூன்று சாதாரண (S) சித்திகளுடன் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கக்கூடிய தகைமையுடையவர்கள்.*

(l) **கணிய அளவையியலில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் - நான்கரை ஆண்டுகள் (ஆண்).-**

2016 அல்லது 2015 ஆம் ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பின்வரும் பாடங்களுள் மூன்று பாடங்களில் குறைந்தபட்சம் மூன்று சாதாரண (S) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையுடையவர்கள் விண்ணப்பிக்க முடியும் :-

பின்வரும் பாடங்களில் ஆகக்குறைந்தது ஏதாவது ஒரு பாடத்தில்-

இணைந்த கணிதம்/ உயர் கணிதம்

அத்துடன், கீழே குறிப்பிடப்படும் பட்டியலிலிருந்து ஏனைய பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் :

| | | |
|---|---|---|
| கணக்கியல் | பொருளியல் | வணிகப் புள்ளி விபரவியல் |
| வியாபாரக் கற்கைகள் | பௌதிக வியல் | இரசாயன வியல் |

தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம்

இத்தகைமைகளுடன் பரீட்சார்த்திகள் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கீழே குறிப்பிடப்படும் தேவைப்பாடுகளையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் :-

(அ) கணிதம் I அல்லது II பாடத்தில் குறைந்தபட்சம் திறமைச் (C) சித்தி ;

(ஆ) விஞ்ஞானம் I அல்லது II பாடத்தில் குறைந்தபட்சம் சாதாரண (S) சித்தி.

(m) **தகவல் தொழில்நுட்பவியல்மாணி சிறப்புப் பட்டம் - நான்கரை ஆண்டுகள் (ஆண்).-**

2015 அல்லது 2016 ஆம் ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் தொழில்நுட்பத்துறைப் பிரிவு தவிர்ந்த ஏதாவதொரு பாடப் பிரிவில் குறைந்தபட்சம் மூன்று பாடங்களில் சாதாரண (S) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையுடையவர்கள் விண்ணப்பிக்க முடியும் ;

(n) **தகவல் முறையியல்மாணி சிறப்புப் பட்டம் - நான்கரை ஆண்டுகள் (ஆண்).-**

2015 அல்லது 2016 ஆம் ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் தொழில்நுட்பத்துறைப் பிரிவு தவிர்ந்த ஏதாவதொரு பாடப் பிரிவில் குறைந்தபட்சம் மூன்று பாடங்களில் சாதாரண (S) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையுடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

3.5 தெரிவுசெய்யப்பட்ட பயிலிளவல்கள் (Cadets) அப்பாடநெறிகளுக்குரிய பொதுவான பாடங்களுக்கு மேலதிகமாக அந்தந்த பாடநெறிகளுக்கு பிரயோகிக்கத்தக்கதாக ஆங்கிலம், முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், சட்டம், சர்வதேச கற்கைகள் மற்றும் இராணுவ கற்கைகள் முதலிய பாடங்களைக் கட்டாயமாகப் பயிலுதல் வேண்டும் ;

3.6 அத்துடன் இவர்கள் தமது கற்கைநெறிகளின்போது உடல்வாண்மை விருத்தி, தேகப்பியாசம், ஆயுதப் பயிற்சி மற்றும் தலைமைத்துவம் ஆகியவற்றில் தொடர்ச்சியான பயிற்சியை மேற்கொள்ளுவதற்கும் வேண்டப்படுவர்.

4. பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர் பதவிக்குத் தேவையான ஏனைய தகைமைகள் :

தேருநர்கள்-

(அ) இலங்கைப் பிரசையொருவராக இருத்தல் வேண்டும் ;

(ஆ) 2017.03.11 ஆந் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 22 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

கல்வித் தகைமைகள் :

(இ) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சம்பந்தப்பட்ட பாடப்பிரிவில் மூன்று பாடங்களில் குறைந்தபட்சம் மூன்று சாதாரண (S) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையுடையவர்களாயிருத்தல் வேண்டும் ;

அத்துடன்

(i) பொதுப் பொதுவறிவுப் பரீட்சையில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும் ;

(ii) அனைத்துக் கற்கைநெறிகளுக்கும் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கில மொழிப் பாடத்தில் குறைந்தபட்சம் திறமைச் சித்தியை (C) பெற்றிருத்தல் கட்டாயமானதாகும்.

(ஈ) குறைந்தபட்சம் பின்வரும் உடல் அளவுகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

| | | ஆண் | பெண் |
|---|---|---|---|
| உயரம் | தரைப் படை | 5'6" | 5'3" |
| | கடற் படை | 5'6" | 5'3" |
| | விமானப் படை | 5'6" | 5'4" |

| | | ஆண் | பெண் |
|---|---|---|---|
| நிறை | தரைப் படை | 50 கி. கி. | - |
| | கடற் படை | 50 கி. கி. | 41 கி. கி. |
| | விமானப் படை | 17 <BMI< 25 | 17 <BMI< 25 |
| மார் பளவு | | 32" (விரியாத) | - |

**குறிப்பு**.- (விளையாட்டுத் துறையில் தேசிய மட்டத்திலான சாதனைகளை அல்லது அதற்கீடான வேறு செயற்பாடுகளைப் பரீட்சார்த்தி கொண்டிருந்தால், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக முகாமைத்துவச் சபையின் தலைவர் ஆகியோரினால் மேற்படி உடலளவு நியமங்கள் தளர்த்தப்படலாம்.)

(உ) பரீட்சார்த்தி அவசியப்படும் மருத்துவ நியமங்களை உறுதிப்படுத்த வேண்டும்.- பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக முகாமைத்துவச் சபையின் தலைவருமானவரின் திருப்திக்கு ஏற்ப வேண்டப்படுத்தப்பட்ட மாதிரிக்கமைய மருத்துவப் பிரகடனப் படிவத்தைச் சமர்ப்பித்ததன் பின்னர், மருத்துவச் சோதனையில் சித்தியடையுமாறு வெற்றிகரமான பரீட்சார்த்திகள் வேண்டப்படுவர். விண்ணப்பதாரியொருவர் மருத்துவப் பிரகடனப் படிவத்தில் பொய்யான தகவல்களை அளித்துள்ளார் எனத் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பு தெரிய வந்தால், அவர் தகுதியற்றவராக்கப்படுவதுடன் பொய்யான தகவல்களை வழங்கியமை எனும் விதியின்கீழ் தண்டனைக்குரியவராவார்.

(மருத்துவ உறுதிமொழிப் படிவத்தினைப் பல்கலைக்கழகத்தின் www.kdu.ac.lk எனும் இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்ய முடியும்.)

(ஊ) பரீட்சார்த்தி திருமாணமாகாதவராக இருத்தல் வேண்டும். (எந்தவொரு பயிலிளவலும் பயிற்சியின்கீழ் உள்ள காலப்பகுதியில் திருமணம் செய்வதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்பதுடன் படைச் சேவை ஒழுங்குவிதிகளின் கீழ் அவ்வாறு செய்வதற்கு அனுமதி அளிக்கப்படும் வரையும் அவர்கள் திருமணம் செய்வதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.)

5. **சேவை நிபந்தனைகள்**.- தெரிவுசெய்யப்பட்ட தேருநர்கள் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம், இரத்மலானை அல்லது சூரியவெவ தெற்கு வளாகப் பயிலிளவல் (Officer Cadet) உத்தியோகத்தர்களாக சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். அவர்கள் 1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புக் கல்வி நிறுவனச் சட்டம் மற்றும் அதன் பின்னரான திருத்தங்கள் ஆகியவற்றின் சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகள் ஆகியவற்றுக்குக் கட்டுப்பட்டவர்கள். சேர்த்துக்கொள்ளப்படும் தேருநர்கள் கிரமமான படைகளில் இணைப்புச் செய்யப்பட்ட மற்றும் சம்பந்தப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டத்தில் பட்டத்தைப் பெற்றுக்கொண்ட திகதியிலிருந்து தொடர்ச்சியானதும் இடையறாததுமான பன்னிரண்டு (12) வருடங்களுக்குக் குறையாத கட்டாயமான காலப்பகுதி சேவையாற்றுதல் வேண்டும்.

6. பல்கலைக்கழக அனுமதி செய்யும் நேரத்தில், பரீட்சார்த்திகள் மேற்கூறியபடி குறித்த பட்டத்தைப் பெற்ற பின்னர் குறித்த காலப்பகுதியில் கட்டாய சேவை செய்வதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுடன் பிணையொன்றையும் உடன்படிக்கையொன்றையும் செய்து கொள்ளல் வேண்டும்.

7. பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர்களுக்கு மாதமொன்றுக்கு அண்ணளவாக ரூபா 38,000 கொண்ட சம்பளமும் படியும் கொடுக்கப்படும். இதற்கு மேலதிகமாக கட்டணமின்றி பின்வரும் வசதிகளைப் பெற்றுக்கொள்ளலாம் :

(i) உணவு மற்றும் தங்குமிடம் ;
(ii) சீருடைகள் ;
(iii) அதிகாரியின் வேலையாள் வசதிகள் ;
(iv) விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு வசதிகள் ;
(v) மருத்துவ வசதிகள்.

8. இலங்கைத் தரைப்படை, கடற்படை, விமானப்படை ஆகியவற்றின் கிரமமான படைகளுக்கு இணைப்புச் செய்யப்படுகையில், சேவைக் கொடுப்பனவு சட்டக்கோவையின் பிரகாரம் வரிசைப் பதவிக்கு பிரயோகிக்கத்தக்க சம்பளமும் படியும் அவர்களுக்கு கொடுப்பனவு செய்யப்படும்.

(அ) பின்வரும் படிகள் மாதாந்தம் கொடுப்பனவு செய்யப்படும் :-

(i) தகைமைப்படி ;
(ii) பங்கீட்டுப்படி ;
(iii) "உள்ளே வாழுமாறு" கட்டளையிடப்பட்டவர்களுக்கான படி (திருமணமான அலுவலர்களுக்கு மட்டும்) ;
(iv) சீருடைப் பராமரிப்புப் படி.

(ஆ) வேறு வசதிகளும் கொடுப்பனவுகளும் :

(i) "உள்ளே வாழுமாறு" கட்டளையிடும்போது இலவச தங்குமிட வசதி ;
(ii) வாடகை வீட்டில் வசிப்பதாயின் வரையறுக்கப்பட்ட வாடகைப்படி ;
(iii) சீருடைப்படி ;
(iv) அதிகாரியின் வேலையாள் படி.

9. தரைப்படை/ கடற்படை மற்றும் விமானப் படையின் உத்தியோகத்தர்களின் கொடுப்பனவு முறைகள் மற்றும் சேவை நிபந்தனைகளுக்கு பின்வரும் கட்டளைகள் கையாளப்படும் :-

(i) தரைப்படை/ கடற்படை/ விமானப்படையின் சம்பளக் கோவை ;
(ii) இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தரைப்படை/ கடற்படை/ விமானப்படை உத்தியோகத்தர்களுக்கான நடைமுறையிலுள்ள ஒழுங்குவிதிகள் ;
(iii) இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தரைப்படை/ கடற்படை/ விமானப்படையின் நடைமுறையிலான ஓய்வூதியங்கள் மற்றும் பணிக்கொடைகள் சட்டக்கோவை.

10. பயிற்சிக் காலத்தின்போது ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் உப வேந்தரினால் விபரிக்கப்பட்டதுபோல் அல்லது சம்பந்தப்பட்ட படைத் தளபதிகளிலாலும் குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய பயிற்சியை மேற்கொள்வதற்கு பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர்கள் வேண்டப்படுவர்.

11. பயிற்சியின் கீழுள்ள பயிலிளவல் (Cadet) அலுவலர்கள் இலங்கையின் அல்லது வெளிநாட்டின் எந்தவொரு பகுதிக்கும் பயிற்சிக்காக அனுப்பப்படுவதற்கு பாத்திரவாளியாவார்கள்.

12. பயிற்சி பெறும் பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர்கள் உள்ளே வாழுமாறு வழங்கப்பட்ட இடவசதியில் வாழுமாறும், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தினால் அல்லது சம்பந்தப்பட்ட படைத் தாபனங்களினால் முன்வைக்கப்பட்ட வழக்கமான வேலை முறையைப் பின்பற்றுமாறும் கேட்டுக்கொள்ளப்படுவார்கள்.

13. **மொழித் தேவைப்பாடுகள்**.- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மொழிக் கொள்கையை அமுல் படுத்துவதற்காக ஏற்கனவே செய்யப்பட்ட அல்லது இதன் பின்னர் செய்யப்படும் ஏதாவது சட்ட ஒழுங்குவிதி களுடன் இணங்குமாறு தெரிவுசெய்யப்பட்ட தேருநர்கள் கேட்டுக்கொள்ளப்படுவார்கள்.

14. **ஆளடையாளத்தை நிரூபித்தல்**.- தேருநர்கள் தமது ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கான சான்றினைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்படுவார்கள். இந்நோக்கத்திற்காக ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஆள் அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது தபால் மா அதிபரினால் வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை அல்லது மோட்டார் வாகனங்கள் பதிவாளரினால் வழங்கப்பட்டுள்ள மோட்டார் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.

15. **விண்ணப்பங்கள்**.- இதற்குரிய விண்ணப்பப் படிவத்தையும் கைநூலையும் இப்பல்கலைக்கழகத்தின் இணையத்தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்ய முடியும். இணையத்தளம் : www.kdu.ac.lk

16. சரியாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை அனுப்பும்போது, "உப வேந்தர், ஜெனரல் சேர். ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்" சார்பில் இலங்கை வங்கி, மொறட்டுவை, இடம கிளையின் நடைமுறைக் கணக்கு இலக்கம் "9405831" இற்கு வரவு வைக்கப்படுவதற்காக இலங்கை வங்கியின் ஏதாவது ஒரு கிளைக்கு ரூபா 1,000 ஐ (ஆயிரம் ரூபா) தொகையினைக் கொடுப்பனவு செய்வதன் மூலம் தாங்களுக்கு வழங்கப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். அடிப்படைத் தகைமையற்ற விண்ணப்பங்கள் மற்றும் மற்றும் சரிவர நிரப்பப்படாத அல்லது இத்தகவலின் நிபந்தனைகளின் பிரகாரம் இல்லாததுமான விண்ணப்பங்கள் அறிவித்தலேதுமின்றி நிராகரிக்கப்படுவதுடன், அவ்விண் ணப்பக் கட்டணங்கள் மீளளிப்புச் செய்யப்படவும் மாட்டாது. உப வேந்தர்களால் நியமனம் செய்யப்படும் தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்படும் நியதிகளுக்கு இணங்க, மேலே குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகளிடையே பூர்வாங்கத் தெரிவுகள் இடம்பெறுவதுடன், அவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் ஆரம்ப நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

17. சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் "பதிவாளர், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம், இரத்மலானை" எனும் முகவரிக்கு 2017.03.11 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

கடித உறையின் மேல் இடது பக்க மேல் மூலையில் "பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தருக்கான விண்ணப்பம்" என்பதையும் விண்ணப்பித்துள்ள கற்கைப் பிரிவையும் குறிப்பிடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்களும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்காத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

18. அரசாங்க அல்லது கூட்டுத்தாபனங்களில் தொழில் புரியும் ஊழியர்கள் தங்களது விண்ணப்பங்களை திணைக்கள/ கூட்டுத்தாபன/ நிலையத் தலைவரினூடாகச் சமர்ப்பிக்க வேண்டியதுடன், அவ்விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படின் குறிப்பிட்ட பதவியிலிருந்து விடுவிப்புச் செய்ய முடியும் என்பதையும் குறிப்பிட்டு சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் தலைவரிடமிருந்து உறுதிக் கடிதம் ஒன்றையும் வழங்குதல் வேண்டும்.

19. விண்ணப்பங்களுடன் பிறப்புப் பதிவுச் சான்றிதழ், க. பொ. த. (சா. த.) மற்றும் க. பொ. த. (உ. த.) பெறுபேற்றுத் தாள்கள் ஆகிய ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை மாத்திரமே இணைத்து அனுப்பிவைத்தல் வேண்டும்.

20. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ சபையினால் நியமிக்கப்பட்ட தெரிவுக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்டவாறு மதிப்பாய்வு மூலப் பிரமாணத்தின் பிரகாரம் தேவையான தரங்களைக் கொண்டுள்ள தேருநர்கள் மத்தியிலிருந்து பூர்வாங்கத் தெரிவுகள் இடம்பெறும். இவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட தேருநர்கள் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின்

முகாமைத்துவச் சபையினால் அவசியமெனத் தீர்மானிக்கப்படுகின்ற வேறு சோதனைகளில் பங்குபற்றுமாறு வேண்டிக்கொள்ளப்படுவார்கள்.இறுதித் தெரிவானது ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவச் சபையினால் நியமிக்கப்பட்ட இறுதிச் சபையினால் மேற்கொள்ளப்படும்.

21. நேர்முகப் பரீட்சைகளுக்கும் ஏனைய சோதனைகளுக்கும் தெரிவுசெய்யப்படும் தேருநர்களுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைகளின் இடங்கள், நேரங்கள் மற்றும் திகதிகள் ஆகியன எழுத்து மூலம் அறிவிக்கப்படும். இந்நோக்கத்திற்காக விண்ணப்பதாரிகளுக்கு ஏற்படக்கூடிய பிரயாண அல்லது வேறு செலவினங்கள் இப்பல்கலைக்கழகத்தினால் கொடுப்பனவு செய்யப்படமாட்டாது.

22. தேருநர் ஒருவரை சிபாரிசு செய்வதற்கு யாரேனும் ஒருவர் விரும்பினால், அவருக்கு நற்சான்றிதழ் வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்தல் வேண்டும். **தேருநர் ஒருவரை தெரிவுசெய்வதற்காக எவ்வழியிலேனும் செல்வாக்குப் பரப்புரை செய்தல் அத்தேருநருக்கான தகைமையீனமாகக் கருதப்படும்.**

23. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி இப்பல்கலைக் கழகத்தினால் அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்களின் நிராகரிப்புப் பற்றிய கடிதத் தொடர்பு அல்லது விசாரணைகள் வரவேற்கப்படமாட்டாது.

24. வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தலின் தமிழ் மொழிக்கும் சிங்கள மொழிக்கும் இடையே ஏதேனும் பரஸ்பர வேறுபாடுகள் ஏற்படின், சிங்கள மொழி மூலமான வர்த்தமானி அறிவித்தலைப் பின்பற்றுமாறு இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

கருணாசேன ஹெட்டியாரச்சி,
செயலாளர்,
பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவச் சபையின் தலைவர்,
ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்.

2-883

---

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

### சமூக சேவைகள் திணைக்களம்

### சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் முன்னெடுக் கப்பட்டு வரும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிலையங் களின் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர் பதவியின் வெற்றிடங்களை நிரப்புதல் தொடர்பில் நடாத்தப்படும் வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சை - 2017

சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வரும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிலையங்களின் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர் பதவியின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக உத்தியோகத்தர்களைத் தெரிவுசெய்வதற்கு, சமூக சேவைகள் திணைக்களத்தின் சார்பில், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2017 ஆம் ஆண்டு மே மாதம் கொழும்பில் நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட போட்டிப் பரீட்சை தொடர்பில் சமூக சேவைகள் திணைக்களத்திற்கு உரித்தான தகைமைகளைக் கொண்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. நியமிக்கப்படவுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 04 ஆகும். இறுதி வெற்றிடம் தொடர்பில் அல்லது சில இறுதி வெற்றிடங்கள் தொடர்பில் ஒரே புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்கள் வெற்றிடங்களின் எண்ணிக்கையினைத் தாண்டியுள்ள வேளையில், அவ் வெற்றிடங்களின் எண்ணிக்கையினை நிரப்புதல் தொடர்பிலான தீர்மானம் செயற்திட்ட விதிக் கோவையின் 80 ஆவது பிரிவின் பிரகாரம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ளது நியமனம் அமுலுக்கு வரும் தினம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைகளின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

02. **சேவைகள் நிபந்தனைகள் :**

2.1 அரச சேவையின் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொதுவான நிபந்தனைகளுக்கும், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் PSC/EST/4/ 1 என்ற இலக்க மற்றும் 2012.06.22 ஆந் திகதிய அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூக சேவைகள் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் சிறப்பு வகுப்பு உத்தியோகத்தர் எண்ணிக்கை தொடர்பில் ஆட்சேர்ப்புச் செய்யும் திட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள கடப்பாடுகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், அவ் ஆட்சேர்ப்புத் திட்டத்திற்குச் செய்யப்பட்டுள்ள அல்லது அதற்குப் பின்னர் செய்யப்படும் திருத்தங்களுக்கும், தாபன விதிக்கோவையின் நிதிப் பிரமாண ஏற்பாடுகளுக்கும் 1589/ 30 என்ற இலக்க மற்றும் 2009.02.29 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயற்திட்டக் கோவைக்கும் அமைய தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர் பதவிக்கு நியமிக்கப்படுவர்.

2.2 இப்பதவி நிரந்தரமானதாகும் ஓய்வூதியத்துடன் கூடியது. விதவைகள், தபுதாரர்கள்/ அநாதைகள்/ ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்பு நிதியினை செலுத்துதல் வேண்டும்.

2.3 இந் நியமனம் ஒரு வருடம் பதிற் கடமைக் காலப்பகுதிக்கு உட்பட்டுள்ளது.

2.4 பொது நிர்வாக சுற்றுநிருபம் 01/2014 என்ற இலக்கத்திற்கு அமையவும் மற்றும் அதனுடன் தொடர்பான சுற்று நிரூபங்களுக்கமையவும் பதவிக்கு

இணைக்கப்பட்டு 5 வருடக் காலப்பகுதிக்குள் குறிப்பிட்ட அரச கரும மொழித் தேர்ச்சியினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

3. **மாதாந்தச் சம்பளத் திட்டம்**

பொது நிர்வாக சுற்றுநிருப இலக்கம் 03/ 2016 இன் பிரகாரம் எம்.என். - 7.2016 சம்பளத் தொகுதியின் 06 ஆவது படிநிலை இபபதவியின் ஆரம்பச் சம்பள படிநிலையாகும்.

சம்பள அளவு :- MN 7-2016 : ரூ. 45,355 - 11×755 - 18 ×1030 - ரூபா 68,425

4. **ஆட்சேர்ப்புச் செய்யும் தகைமைகள்** :

(அ) (i) இலங்கைப் பிரஜை ஒருவராக இருத்தல் ;
(ii) சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் ;
(iii) நாட்டின் எந்தவொரு பகுதியிலும் கடமையாற்று வதற்குப் போதுமான தேக மற்றும் உள ஆரோக்கி யத்தினைக் கொண்ட ஒருவராக இருத்தல்.

(ஆ) கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவங்கள்:

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பல்கலைக் கழகத்தில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டம் வழங்கப்படும் நிறுவனம் என்ற ரீதியில் அங்கீகரிக்கப்பட்டுள்ள நிறுவனத்திலிருந்து வழங்கப்படும் பட்டத்தினைக் கொண்டிருத்தல்;

மற்றும்

சமூக சேவைகள் திணைக்களத்தின் சமூக சேவைகள் உத்தியோகத்தர் பதவியில் நிரந்தரமாக் கப்பட்டு அப்பதவியில் ஐந்து (05) ஆண்டுகள் செயலூக்கத்துடன் திருப்திகரமான சேவைக் காலமொன்றைப் பூர்த்தி செய்திருத்தல் ;

அல்லது

சமூக சேவைகள் திணைக்களத்தின் சமூக சேவைகள் உத்தியோகத்தர் பதவியில் நிரந்தரமாக் கப்பட்டு அப்பதவியில் பத்து (10) ஆண்டுகள் செயலூக்கத்துடன் திருப்திகரமான சேவைக் காலமொன்றைப் பூர்த்தி செய்திருத்தல் ;

**குறிப்பு** :

பூர்த்தி செய்யப்பட்டு இருக்க வேண்டிய ஏனைய தகைமை கள் :

(i) இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்குத் தேவையான தகைமைகளை 2017.03.20 ஆந் திகதியன்று சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(ii) முழுமையாக 05 வருடக் காலப்பகுதியினுள் எந்தவொரு ஒழுக்காற்றுத் தண்டனையும் பெற்ற ஒருவராக இருத்தல் கூடாது.

(iii) முழுமையாக 05 வருடக் காலப்பகுதியினுள் சகல சம்பள ஏற்றங்களையும் குறிப்பிட்ட தினத்தில் உழைத்திருத்தல்.

5. **விண்ணப்பிக்கும் முறைமை**,-

(அ) விண்ணப்பப்படிவம், இவ்வறிவித்தலுக்கமைய இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவாக இருத்தல் வேண்டும் என்பதுடன், தாளின் இரு பக்கத்தினையும் உபயோகித்து ஏ4 (A4) அளவிலான தாளில், விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு இலக்கங்கள் 1.0 தொடக்கம் 2.12 வரை முதலாவது பக்கத்திலும் 3.0 தொடக்கம் 4.0 வரை அதன் இரண்டாவது பக்கத்திலும், மீதி மூன்றாவது பக்கத்திலும் வரக்கூடியவாறு தங்களின் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பதை விசேடமாகக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும். இது தொடர்பில் கணனியில் தயாரிக்கப்பட்டுள்ள/ அச்சுப் பொறியில் தயாரிக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தினைப் பயன்படுத்த முடியும். விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்ட தகவல்களை தமது கையெழுத்துப் பிரதியிலேயே தெளிவாக நிரப்புதல் வேண்டும் என்பதுடன், மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமையாத விண்ணப்பப்படிவங்கள், முழுமையாக பூர்த்தி செய்யப்படாத வகையில் தகவல்களைக் குறிப்பிட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் முன்னறி வித்தலின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவத்தின் பிரதியொன்றை தம்மிடம் வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும்.

(ஆ) விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் மொழியிலேயே விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தினைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிபிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரினை, சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலாக ஆங்கிலத்திலும், தமிழ் மொழி விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் அத்தியாவசியமானதாகும்.

(இ) (i) சரியான வகையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்களை, திணைக்களத் தலைவரூடாக பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 2017.03.20 ஆந் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தினை வைத்து ஒட்டப்பட் டுள்ள கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக ‘‘சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழுள்ள வாழ்க்கைத் தொழிற்

பயிற்சி நிறுவனங்களின் நிலையைப் பொறுப்பு உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சை - 2017" எனக் குறிப்பிட்டு பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒருங்கிணைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த.பெ.1503, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். அதற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) பரீட்சைக் கட்டணம் ரூபா 1200.00 ஆகும். பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் 2003.02.13 என்ற வருமானத் தலைப்புக்கு வரவிடத்தக்கவாறு நாடு பூராவும் அமைந்துள்ள எந்தவொரு அஞ்சல் அலுவலகத்தினூடாகவும் கொடுப்பனவினைச் செய்து பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் குறிப்பிட்ட இடத்தில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் பிரதியொன்றை அருகில் வைத்திருப்பது பயனுள்ளதாக அமை யும். குறிப்பிட்ட நோக்கத்திற்காகச் செலுத்தப்பட்ட கட்டணம் மீளளிப்புச் செய்ய முடியாது. இப்பரீட்சைக்கென கொடுப்பனவு செய்யப்பட்ட கட்டணத்தினை வேறு எந்தவொரு பரீட்சைக்கும் மாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது. மேலும் பரீட்சைக் கட்டணம் தொடர்பில் முத்திரை அல்லது காசு கட்டளை ஏற்கப்படமாட்டாது.

(ஈ) பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் வேளையிலுள்ள விண்ணப்பதாரர்களின் பதவி, சேவை நிலையம், பரீட்சை தொடர்விலான சகல விடயங்களாவதுடன், விண்ணப்பப்படிவம் அனுப்பியதன் பின்னர் அது தொடர்பில் இடம்பெறும் எந்வொரு மாற்றமும் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

(உ) சகல கட்டுப்பாடுகளையும் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் காணாமற் போதல் அல்லது தாமதம் தொடர்பில் எந்தவொரு முறைப்பாடும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(ஊ) பரீட்சை அனுமதி பத்திரங்கள் விநியோகிக்கப்பட்ட வுடன் அது தொடர்பில் குறிப்பிட்டு செய்தி அறிவித்தலொன்றும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 தினங்கள் கழிந்தும் தமது அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாத விண்ணபதாரரொருவராயின், அறிவித்தலில் குறிப்பிட்டவாறு அது தொடர்பில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒருங்கிணைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளையில் விசாரணை செய்தல் வேண்டும். அவ்விசாரணையின்போது, விண்ணப்பதாரர்கள் தாம் விண்ணப்பித்துள்ள பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியினைச் சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரர் கொழும்புக்கு வெளியே வசிக்கும் ஒருவராயின், அவ்விபரங்களுடன் பெக்ஸ் ஊடாக பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் பிரதியொன்றை விரைவில் பெற்றுக் கொள்ளுவதற்குச் சாத்தியமான விண்ணப்பதாரரின் பெக்ஸ் இலக்கத்தினைக் குறிப்பிட்டு வேண்டுகோள் கடிதமொன்றை அறிவித்தலில் குறிப்பிடட்டுள்ள பெக்ஸ் இலக்கத்திற்கு அனுப்பி விசாரணை செய்தல் மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்விசாரணையின்போது, பரீட்சைத் திணைக்களத்தினால் வேண்டி நிற்கும் எந்தவொரு தகவலினையும் உறுதிப்படுத்திக் கொள்ளுவதற்கு தம்மோடு வைத்திருக்கும் விண்ணப்பப்படிவத்தின் பிரதி, விண்ணப்பப்படிவத்தினை அஞ்சல் செய்த வேளையில் பதிவு செய்துள்ள பற்றுச்சீட்னைத் தயாராக வைத்திருத்தல் பயனுள்ளதாக அமையும்.

6. **பரீட்சைக்குத் தோற்றுதல்**

(அ) சகல விதத்திலும் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்து விண்ணப்பப்படிவங்களை முன்வைத்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்படும் தமது அனுமதிப்பத்திரத்தினை முன்வைக்காத விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

(ஆ) விண்ணப்பதாரர் தமக்கு விதிக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். சகல விண்ணப்பதாரர்களும் குறிப்பிட்ட பரீட்சை மண்டபத்திற்கு உரிய அனுமதிப் பத்திரத்தினை, ஒப்பத்தினை உறுதிப்படுத்திக் கொண்டுவந்து முதலில் அம்மண்டபத்தில் தோற்றும் தினம், அதன் மண்டபப் பொறுப்பாளருக்கு கையளித்தல் வேண்டும். அனைத்து விண்ணப்பதாரும் பின்பற்ற வேண்டிய சட்ட ஒழுங்கு நெறி இவ் வர்த்தமானி அறிவித்தலின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டுள்ளது. பரீட்சையினை நடாத்துதல் தொடர்பில பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு விண்ணப்பதாரர்கள் கீழ்ப்படிதல் வேண்டும். அச்சட்ட ஒழுங்குகளை மீறியிருப்பின், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்படுவதற்கு நேரிடும்.

**குறிப்பு**- விண்ணப்பதாரர் ஒருவருக்கு பரீட்சை அனுமதிப் பத்திரத்தினை வழங்குதல், அவர் பரீட்சையில் தோற்றுவதற்கு தகைமையினைப் பூர்த்தி செய் துள்ளார் என்பதற்கான அங்கீகாரமொன்றாக கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

7. **விண்ணப்பதாரரின் அடையாளம்** :-

தாம் தோற்றும் சகல விடயம் தொடர்பிலும் பரீட்சை மண்டப் பொறுப்பாளர் திருப்திப்படும் விதத்தில் விண்ணப்பதாரர் பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத்தி9னை நிரூபிதது்க் கொள்ளுதல் வேண்டும். இது தொடர்பில் பின்வரும் வேண்டிய ஆவணமொன்று மாத்திரம் ஏற்றக் கொள்ளப்படும்.

(அ) அட்டைகளைப் பதிவு செய்யும் திணைக்களத்தினூடாக வழங்கப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டை;

(ஆ) செல்லுபடியான வெளிநாட்டு பிரயாண அனுமதிப்பத்திரம்

தவறான தகவல்களை வழங்குவதற்கு தண்டனை -

விண்ணப்பதாரர் தகைமையினைக் கொண்டிருக்கவில்லை என வெளிக்கொணரப்படின், பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடாத்தும்போது அல்லது பரீட்சைக்குப் பின்னர் அல்லது வேண்டியபோது அவரின் விண்ணப்பத்தினை இரத்துச் செய்வதற்கு வாய்ப்புள்ளது. விண்ணப்பதாரர் பொய்யான தகவல்களை முன்வைத்துள்ளார் எனத் தெரியவரின் அவ்வாறில்லையாயின் ஏதாவது முக்கிய விடயமொன்றை அவர் வேண்டும் என்றே மறைத்திருப்பின் அவரை சேவையிலிருந்து இடைநிறுத்துவதற்கு வாய்ப்புள்ளது.

9. இவ்வொழுங்கு விதிகளில் குறிப்பிடப்படாத ஏதாவது விடயங்கள் தொடர்பில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் ஆலோசனைகளுக்கயை சமூக சேவைகள் பணிப்பாளரினால் தீர்மானம் எடுக்கக்கூடியவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

10. **பரீட்சை முறைமை மற்றும் பரீட்சை மொழி:'**

(அ) பரீட்சை சிங்களம், தமிழ் மொழியில் நடாத்தப்படும்: ;

(ஆ) விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய மொழி, தகைமையினைக் கொண்டவர் பட்டத்தினைப் பெற்றுள்ள மொழி அல்லது அரச கரும மொழியொன்றாதல் வேண்டும்;

(இ) விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள பரீட்சைக்குத் தோற்றும் மொழியினை பின்னர் மாற்றஞ் செய்வதற்கு விண்ணப்பதாரருக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

11. **ஆட்சேர்ப்புச் செய்யும் திட்டம்**.-

எழுத்துப் பரீட்சை (நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர் பதவியின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடாத்தப்படும் வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சை) பணி மற்றும் பணியாளர் முகாமைத்துவம் (work and Personnel Management) தொடர்பிலான விடய ஆய்வு தொடர்பில் 100 புள்ளிகள். 03 மணித்தியாலம் கட்டுரைகள் மற்றும் கட்டமைப்புச் செய்யப்பட்ட கட்டுரைகளின் வகையில் வினாப்பத்திரமொன்று சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். சித்தியெய்துதல் தொடர்பில் 40 புள்ளிகளை விடக் குறைதலாகாது.

பணியாளர் முகாமைத்துவம் தொடர்பில் விண்ணப்பதாரரின் புரிந்துணர்வு மற்றும் அறிவினை மதிப்பீடு செய்வதற்கு நிறுவன நிர்வாகம், முகாமைத்துவம், பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தல், அப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல், நிறுவகம் சார் வினைத்திறன், வினைத்திறன்களை அதிகரித்தல் போன்ற பணி மற்றும் பணியாளர் முகாமைத்துவத்திற்கான விடய ஆய்வு அல்லது சில விடய ஆய்வுகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட கட்டுரைகள் மற்றும் கட்டமைப்புச் செய்யப்பட்ட கட்டுரை வகைகளில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

**நேர்முகப் பரீட்சை**:

எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றியுள்ள விண்ணப்பதாரர்களுள், 40% புள்ளிகளை விடக் குறையாது பெற்ற உத்தியோகத்தர்களுக்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கட்டமைப்புச் செய்யப்பட்ட நேர்முகப் பரீட்சைச் சபையின் கீழ் கட்டமைப்புச் செய்யபப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு அந்த எழுத்துப் பரீட்சையிலும் மற்றும் கட்டமைப்புச் செய்யப்பட்ட நேர்முகப் பரீட்சையிலும் பெற்றுக் கொண்ட மொத்தப் புள்ளிகள் திறமை அடிப்படையில் வெற்றிட எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கை தெரிவு செய்யப்படும்.

**நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான கட்டமைப்புச் செய்யப்பட்ட நேர்முகப் பரீட்சை**

*01. புள்ளிகள் வழங்கப்பட வேண்டிய துறைகள்*

| *பரீட்சித்துப் புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புக்கள்* | *ஆகக்கூடிய புள்ளிகள்* |
|---|---|
| *01.* **மேலதிகக் கல்வித் தகைமைகள்**<br>(ஆட்சேர்ப்பு அறிவித்தலில் இலக்கம் 04 இன் கீழ் குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளுக்கு மேலாகவுள்ள தகைமைகள் தொடர்பில் மாத்திரம் புள்ளிகள் உரித்தாகும்.)<br>*1.* பட்டப்பின் படிப்புப் பட்டம் - 10<br>(சமூகவியல்/ நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பானது)<br>*2.* முதலாவது வகுப்பில் பட்டம் பெற்றிருத்தல் - 08<br>*3.* வகுப்பினை சித்திபெற்றிருத்தலுடனான பட்டம் - 06<br>(இதில் எந்தவொரு விடயம் முன்பு வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் விடுவிக்கப் பட்டிருப்பின் அவருக்கு மீண்டும் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.) | 10 |
| *02.* **மேலதிக வாழ்க்கைத் தொழில் தகைமைகள்**<br>பதவிக்கான துறையில்<br>(1) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது நியமன அதிகாரியினால் அங்கீகரிக் கப்படும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனத்திலிருந்து பெற்றுக் கொண்ட ஒரு வருடத் திற்குக் குறையாத சமூகப் பணி/ நிர்வாகம்/ உளவளத்துணை/ முகாமைத்துவம் போன்ற விடயங்கள் தொடர்பில் டிப்ளோமாவொன்றைப் பெற்றிருத்தல் - 15<br>(2) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது நியமன அதிகாரியினால் அங்கீகரிக் கப்படும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட 06 மாதங்களுக்குக் குறையாத சமூகவியல் விடயம்/ நிர்வாகம்/ முகாமைத்துவம் போன்ற விடயங்களுக்கான சான்றிதழினைப் பெற்றிருத்தல் (சைகை மொழி டிப்ளோமா, பிறெய்ல் டிப்ளோமா) - 10<br>(3) அங்கீகரிக்கப்பட்ட பல்லைக்கழகமொன்றில் அல்லது நியமன அதிகாரியினால் அங்கீகரிக்கப்படும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிறுவனத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட 03 மாதங்களுக்குக் குறையாத சமூக விஞ்ஞான விடயத்துறை/ நிர்வாகம்/ முகாமைத்துவம் போன்ற விடயங்களுக்கான சான்றிதழினைப் பெற்றிருத்தல் - 05 | 15<br>15 |
| *03.* **மேலதிக அனுபவங்கள்**<br>(அடிப்படைத் தகைமைகளாக கவனத்திற் கொள்ளப்படும் 5 வருடங்கள் அல்லது 10 வருடங் களைப் பூர்த்தி செய்துள்ள வருடத்திற்கு)<br>I.II வது தரத்தின் பதவியின் வருடமொன்றுக்கு - 03<br>II. I வது தரத்தின் பதவியின் வருடமொன்றுக்கு - 05 | 40 |
| *04.* **கணினி அறிவு**<br>(ஆகக்கூடிய தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்)<br>*1.* நியமன அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து கணினி தொடர்பில் வருட மொன்றுக்காக அல்லது அதனை விட அதிக காலப்பகுதிக்காக பெற்றுக் கொண்ட டிப்ளோமா/ சான்றிதழ் தொடர்பில் - 05<br>*2.* நியமன அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து கணினி தொடர்பில் 06 மாத காலப் பகுதிக்காக அல்லது அதனை விட அதிக காலப்பகுதிக்காக பெற்றுக் கொண்ட டிப்ளோமா/ சான்றிதழ் தொடர்பில் - 03 | 05 |

| | பரீட்சித்துப் புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புக்கள் | ஆகக்கூடிய புள்ளிகள் |
|---|---|---|
| 05. | **ஆங்கில மொழித் தேர்ச்சி**<br>(ஆகக்கூடிய தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்)<br><br>1. ஆங்கில மொழியில் ஆரம்பப் பட்டம்/ பட்டப்பின் படிப்புப் பட்டம்/ பட்டப்பின் படிப்பு டிப்ளோமாவினைத் தொடர்ந்திருத்தல்/ ஆங்கில மொழியினை பட்டத்தின் விடயமொன்றாக சித்தியெய்தியிருத்தல்/ க.பொ.த. (உ./த.) ஆங்கில விடயமொன்றாக சித்திபெற்றிருத்தல் - 05<br><br>2. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெற்றுக் கொண்ட ஆங்கில மொழி தொடர்பில் வருடமொன்றுக்கு அல்லது அதற்கு அதிகமான வருடத்திற்கு டிப்ளோமா/ சான்றிதழ் அல்லது க.பொ.த. (சா./த.)<br>ஆங்கில விடயத்தில் விசேட திறமைச் சித்தியினைப் சித்திபெற்றிருத்தல் - 03<br><br>3. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெற்றுக் கொண்ட ஆங்கில மொழி தொடர்பில் 06 மாதங்களுக்கு அல்லது அதற்கு அதிகமான மாதங்களுக்கு டிப்ளோமா/சான்றிதழ் அல்லது க.பொ.த. (சா./த.) ஆங்கில விடயத்தில் திறமைச் சித்தியினைப் சித்திபெற்றிருத்தல் - 02<br><br>4. ஆங்கில மொழி தொடர்பில் 03 மாதங்களுக்குக்குறையாத சான்றிதழ் பாடநெறியொன்றுக்கு - 01 | 05 |
| 06. | **வாழ்க்கைத் தொழில் துறையில் இடம்பெற்றுள்ள விசேட செயற்பாடுகள்/ நிகழ்ச்சித் திட்டங்கள்/ கருத்திட்டங்கள் தொர்பில்**<br>(மாவட்ட செயலாளர் அல்லது பிரதேச செயலாளரினால் பரிந்துரை செய்யப்பட்டிருத்தல் வேண்டும்)<br><br>1. அங்கவீனமுற்ற சமுதாயத்திற்காக செய்யப்பட்ட ஆக்கபூர்வமான செயற்பாடுகள் (தேசிய மட்டம் வரை மேம்படுத்தப்பட்ட பிரதேச மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட செயற்பாடுகள்) - 05<br><br>2. சுய உதவி அமைப்புக்கள்/ தன்னார்வப் பிரதிநிதிகள் என்றவாறு சமுதாயத் தலைமைகள்/ வெற்றிகரமான செயற்பாடுகள் - 05<br><br>3. பிரதேச அல்லது மாவட்ட அங்கவீனர் அல்லது விடயப் பரப்பு தொடர்பில் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ள தேசிய/ சர்வதேச வெற்றிடங்கள் தொடர்பான கருத்திட்டங்கள்- 05<br><br>4. பயனாளிகள் தொடர்பில் வலுவூட்டுதல் தொடர்பில் திணைக்களங்கள் மற்றும் ஏனைய அமைச்சுகளினூடாக வழங்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகள் மற்றும் ஒதுக்கீடுகளுக்கு மேலாக ஆக்கபூர்வமாகச் செய்யப்பட்ட கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் - 05<br><br>5. ஏனைய விசேட செயற்பாடுகள்/ நிகழ்ச்சித்திட்டங்கள் - 05 | 20 |
| 07. | **நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை** | 05 |

**பெறுபேறுகளை வெளியிடுதல்:**

எழுத்து மூல மற்றும் கட்டமைப்புச் செய்யப்பட்ட நேர்முகப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்களின் தற்போது வெற்றிடம் நிலவும் எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையினை உள்ளடக்கிய பெறுபேற்று அட்டவணையினை செயலாளர், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்படும். ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்டவாறு பரீட்சைக்குத் தோற்றியுள்ள சகல விண்ணப்பதாரர்களுக்கும் பெறுபேறுகளைப் பிரத்தியேகமாக அனுப்புதல் அல்லது www.exams.results.gov.lk,இணையத்தளத்தில் வெளியிடுதல் இடம்பெறும்.

(12) கவனத்திற் கொள்ளப்பட வேண்டியவை :

நேர்முகப் பரீட்சையில் கலந்துகொள்ளுதல் நியமனத்தினை வழங்குவதற்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாக கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்டவாறு.

(13) சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலில் மொழிகளின் கருத்துகளுக்கிடையே பொருந்தாமை அல்லது முரண்பாடு காணப்படுமாயின் அவ்வாறான வேளையில் சிங்கள மொழி அறிவித்தலுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

மகிந்த செனெவிரத்ன,
செயலாளர்,
சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு.

சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு,
1ஆவது மாடி, II ஆவது கட்டம்,
செத்சிறிபாய,
பத்தரமுல்லை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

**சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வரும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிலையங்களின் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர் பதவியின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடாத்தப்படும் வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சை - 2017**

Limited Competitive Examination for Recruitment to officer-in - Charge in Vocational Training Centers under Department of Social Services - 2017

1.0 மொழி
சிங்களம் - 02 [ ] தமிழ் - 03 [ ]

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

(பரீட்சைக்குத் தோற்றும் மொழிலேயே விண்ணப்பப் படிவம் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.)

2. தனிப்பட்ட தகவல்கள் :

2.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.

உதாரணம் : (HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

2.2 இறுதிப் பெயர் ஆரம்பத்திலும் மற்றும் ஏனைய பெயர்களின் முதல் எழுத்துக்கள் இறுதியிலும் வரக்கூடியவாறு பயன்படுத்தப்படும் பெயர் :-----.
உதாரணம் : GUNAWARDHANA, H. M. S. K.

2.3 முழுப்பெயர் (சிங்களம்/ தமிழ்) :-----.

2.4 அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) (அனுமதி அட்டை இம்முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்) :-----.

2.5 அலுவலக முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :-----.
2.6 பால் (ஆண்/ பெண்) :- (ஆண் - 0, பெண் - 1)

[ ]

(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்)

2.7 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

2.8 திருமணமானவர்/ திருமணமாகாதவர்:
திருமணமாகாதவர் -1 [ ]
திருமணமானவர் - 2

(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்)

2.9 மக்கள் வர்க்கம் (சிங்களவர் -1, தமிழர் - 2, இந்தியத் தமிழர் - 3, முஸ்லிம் - 4, பிற - 5)

[ ]

(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடவும்)

2.10 பிறந்த திகதி :

ஆண்டு : [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]

2.11 தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3. (i) கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவங்கள் :--.
பெற்றுக்கொண்ட கல்வித் தகைமைகள் :
பட்டத்துடன்/ பட்டமற்றது தொடர்பானது :----.

பட்டம் கிடைக்கப் பெற்ற தினம் :----.
பல்கலைக்கழகம் / நிறுவனம் :----.
பதிவு இலக்கம் :----.
வெளிவாரி/ உள்வாரி :----.
விடயங்கள் :----.
வகுப்பு:----.
உயர்/ கீழ் :----.
பட்டம் செல்லுபடியாகும் தினம் :----.
பரீட்சைக்குத் தோற்றிய மொழி :----.

4. சேவை அனுபவங்கள் :

I. சமூக சேவைகள் உத்தியோகத்தர் பதவிக்கு நியமிக்கப்பட்ட தினம் :----.
II. நிரந்தமாரக்கப்பட்ட தினம் :----.
III. தற்போதுள்ள தரம் :----.
IV. அத்தரத்திற்கு நியமிக்கப்பட்ட/ உயர்த்தப்பட்ட தினம் :----.
V. 2017.03.20 ஆந் திகதியன்று சமூக சேவைகள் உத்தியோகத்தர் I/II தரத்தின் சேவைக் காலம் : ----.

| |
|---|
| கொடுப்பனவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டினை (சிட்டை) சரியானவாறு ஒட்டவும் : |

5. விண்ணப்பதாரரின் பிரகடனம்

........................ ஆந் திகதியன்று முழுமையான ஐந்து வருடத்தினுள் சகல சம்பள ஏற்றங்களும் என்னால் உழைக்கப்பட்டுள்ளது எனவும், வர்த்தமானி

அறிவித்தலில் 04 ஆ பந்தியின் பிரகாரம் ............... ஆந் திகதியன்று செயலூக்கமிக்க திருப்திகரமான சேவைக் காலத்துடன் கூடியது எனவும் (எச்சரிக்கை செய்தலைத் தவிர்த்து) எந்தவொரு முறையிலும் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு நான் உட்படுத்தப்படவில்லை எனவும் வெளிப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால், பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு நான் உடன்படுகின்றேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட சகல சட்ட ஒழுங்கு விதிகளுக்கமைய பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நான் பொருத்தமானவன் எனவும் இங்கு குறிப்பிடப்பட்ட தகவல்கள் எனது அறிவுக்கு எட்டிய வரையில் உண்மை எனவும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட ..................... என்ற இலக்க மற்றும் ........................ ஆந் திகதிய பற்றுச்சீட்டு அதில் ஒட்டப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்துகின்றேன். பரீட்சை சட்டத்திட்டங்களுக்கு உடன்பட்டு செயற்படுத்துவதற்கும், இப்பரீட்சை தொடர்பில் ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்ட சேவைப் பிரமாணத்திற்கமைய நான் பொருத்தமற்றவன் எனத் தெரியவருடமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது அது நடைபெறும் போது அல்லது அதன் பின்னர் எனது பரீட்சை விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும் என்பதை நன்கு நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

6. திணைக்களத் தலைவரின் சான்றிதழ் (விண்ணப்பதாரரின் பிரத்தியேக கோவைக்கு அமைய) :

இவ்விண்ணப்பப் படிவத்தினை முன்வைக்கும் திரு./ திருமதி/ செல்வி .................. அவர்கள் சமூக சேவைகள் திணைக்களத்தின் சமூக சேவைகள் உத்தியோகத்தர் பதவியில் கடமையாற்றுபவர் எனவும்............... ஆந் திகதியன்று முழுமையாக ஐந்து வருடக் கால வரையறையினுள் அவர் சகல சம்பள ஏற்றங்களையும் உழைத்துள்ளார் எனவும், அக்கால வரையறையினுள் தவறுக்கு/ (எச்சரிக்கை செய்தலைத் தவிர்த்து) எந்தவொரு வகையிலும் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு அவர் உட்படுத்தப்படவில்லை எனவும், வர்த்தமானி அறிவித்தலில் 04ஆ பந்தியின் பிரகாரம் வருடங்கள்........ (ஐந்து/ பத்து) செயலூக்கமிக்க திருப்திகரமான சேவைக் காலத்துடன் கூடியது எனவும், குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கமைய அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமையினைப் பெற்றுள்ளார் எனவும், குறிப்பட்ட பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது எனவும், அவர் எனக்கு முன்னால் இவ்விண்ணப்பப்படிவத்தினை ஒப்பமிட்டதாகவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
திணைக்களத் தலைவரின்/ அதிகாரம்
அளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் கையொப்பம்.

பெயர் :-----.
பதவிப் பெயர் :-----.
திகதி :-----.
(உத்தியோகபூர்வ முத்திரையை இடவும்)

2-696

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.